விலை: 20.00.
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 15 சனிக்கிழமை (28.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 130

### தொழிலாளர் தினத்தன்று புதிய அமைச்சரவை

# பௌத்தத்தை பாதுகாக்க அரசு முன்னுரிமையளிக்கும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு



**(கொழும்பு) பௌத்த மதத்தை பாதுகாக்கவும் பௌத்த விகாரையின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். மேலும் தொழிலாளர் தினத்தன்று புதிய அமைச்சரவை பதவியேற்கும் நிகழும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

உலக தொழிலாளர் தினத்தன்று காலையில் நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையின் ஊடாக மகா சங்கத்தினர் முன்வைத்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கும். பௌத்த சாசனத்தின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்ட 23

நேற்று நள்ளிரவு முதல் 245 ரூபாயால்

## சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் 245 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை நுகர்வோர் அதிகார 24

அதிகரித்த வாள்வெட்டால்

## யாழ். பொலிஸாரின் விடுமுறை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரதும் விடுமுறைகள் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் மறுஅறிவித்தல் வரை இடைநிறு 24

## மிளகாய்த்தூள் விசிறி வங்கியில் கொள்ளை

(கொழும்பு)

வத்தளையிலுள்ள தனியார் வங்கிக்குள் புகுந்த கொள்ளையர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கண்களில் மிளகாய்த்தூளை விசிறிவிட்டு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றனர் என பொலி 24

## யாழில் சிறைச்சாலை வாகனம் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் சிறைச்சாலை வாகனத்தின் மீது நேற்று இரவு அடையாளம் தெரியாத நபர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் யாழ்.நகரில் தபால் நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்றுள்ளதுடன் 23

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின்

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் மகிழ்ச்சி அடைவதாக தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவ ஞானசோதி தெரிவித்தார்.

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் அமைக்கப்பட்ட மடுமாதா கைப்பணி அமைப்பிற்கான கட்டடம் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. 23

மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை

## வெளிநாட்டிலிருந்து இலங்கை வரவழைக்க நடவடிக்கை எடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தி இருவரை கொலை செய்து பலரை காயமடையவும் செய்த வழக்கில் தண்டனை குற்றவாளிகளான ஈ.பி.டி.பி உறுப்பினர் இருவர் வெளிநாடொன்றில் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை உடனடியாக நாட்டுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சானது சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் சட்டமா அதிபருக்கு 23

## எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்க தயாராக உள்ளேன்

### மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன



(கொழும்பு)

தான் எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்க தயாராக உள்ளதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் 24

## வடக்கு, கிழக்கு பட்டதாரிகளுக்கு சிறப்பு சலுகை வழங்குங்கள்

### ஜனாதிபதி, பிரதமருக்கு சம்பந்தன் கடிதம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் இணைப்பதற்கான வயதெல்லையை 40 வரை அதிகரிக்கவேண்டும்.

மாவட்ட விகித சமப்படி பட்டதாரிகள் உள்வாங்கப்படவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் வேலைவாய்ப் 23

ஜனாதிபதியை சந்திக்க

## குடும்பஸ்தர் ஒருவர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

ஊறுபொக்க - பஸ்கொட பகுதியில் பிரதேச செயலகத்திற்கு முன்னால் குடும்பஸ்தர் ஒருவர் ஜனாதிபதியை சந்திக்கும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

காணி தொடர்பான முறைப்பாட்டில் நியாயம் கிடைக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டி, முன்னாள் இராணுவ வீரரான சிசிரகுமார 23

யாழ்.மாநகர முதல்வர் அதிகார துஷ்பிரயோகம்

## ஒழுக்காற்று நடவடிக்கை கோரி முதலமைச்சரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வர் அதிகார துஷ்பிரயோகம் செய்து வருவதாக குற்றம் சாட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், அது தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் விசாரணைகளை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என கோரி முதலமைச்சரிடம் மகஜர் ஒன்றை நேற்றைய தினம் கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, யாழ்.மாநகர சபையின் சகல விதமான செயற்பாடுகளும் கடந்த 26.03.2018ஆம் திகதி நடைபெற்ற சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் முதலாவது சபை அமர்வை தொடர்ந்து சபையின் முழுமையான 23

ஐ.தே.கவின் மறுசீரமைப்பு தொடர்பாக

## அக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பாக அந்த கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றையதினம் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இந்த பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இதன்போது, ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் பீடத்தினால் பரிந்துரைக்கப்பட்டு, செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவி மாற்றங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்சியின் மறுசீர 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாணய பெறுமதி வீழ்ச்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் நாணயப் பெறுமதியை மேலும் வீழ்ச்சியடைய செய்ய யாராவது முயற்சித்தால் அதற்கு எதிராக மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

டொலர் விற்பனை விலையை தீர்மானிக்கும் விடயத்தில் தலையிடுவதில்லை என கடந்த வருடம் மார்ச் முதல் மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

மிதக்கும் நாணயமாற்று வீதக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கைப் பெறுமதி வீழ்ச்சியடைந்திருப்பதற்கு சந்தையில் ஏற்பட்ட மாற்றங்களே காரணமாகும் எனவும் அவர் கூறினார்.

2017 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையை நேற்று முன்தினம் நிதி அமைச்சரிடம் சமர்ப்பித்த பின்னர் மத்திய வங்கியில் இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் நாணயமாற்று இருப்பு 9.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. சந்தையிலிருந்து இந்த வருடம் 450 மில்லியன் அமெரிக்க டொலர்களை மத்திய வங்கி கொண்டு வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான பின்னணியில் கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது.

இருந்தபோதும் செயற்கையான தோற்றப்பாட்டை ஏற்படுத்த நாணயப் பெறுமதியை மேலும் வீழ்ச்சியடையச் செய்ய யாராவது முயற்சித்தால் அதனைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி தலையிடும் என்றார்.

அரசாங்கம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெற்றுக் கொண்ட கடன் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கியதன் இரண்டாவது கொடுப்பனவு என்பவை கிடைக்கும்போது டொலரின் வருகை அதிகரித்து நாணயப் பெறுமதி உயரும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் விளக்கமளித்த மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் கலாநிதி நந்தலால் விக்கிரமசிங்க, சித்திரைப் புத்தாண்டு காலத்தில் நாணயப் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படுவது வழமையானது.

புத்தாண்டுக்கு முன்னர் இறக்குமதிகளுக்காகவும், ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காகவும் பெருமளவு டொலர் செலவிடப்பட்டிருக்கும். புத்தாண்டின் பின்னர் டொலருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டமையால் மிதக்கும் நாணயமாற்று சந்தைக்கு அமைய நாணயப் பெறுமதி அதிகரித்துள்ளது. இதுவே இந்த நிலைமைக்குக் காரணமாகும் என்றார். (ம)

# ஆலய நிர்வாகங்கள் மறுப்புத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றைய வலம்புரியின் முன்பக்கத்தில் வெளிவந்த வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் இரு குழுவாகப் பிரிந்து மோதல் என்ற செய்தியில்,

ஏழாலை பெரியதம்பிரான் கோயிலுக்கும் குறித்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என ஏழாலை பெரியதம்பிரான் ஆலய நிர்வாகத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை முடிமன்னர் ஆலயத்தில் நிலவும் நிர்வாக ஊழல் முரண்பாடுகள் காரணமாகவே மோதல் சம்பவம் நடந்தது என்ற செய்தி தவறானது எனவும் அந்த ஆலயத்தில் நிர்வாக ஊழல் எதுவும் இல்லை எனவும் முடிமன்னர் ஆலயத்தின் பொருளாளர் சிவயோகவதனி வலம்புரிக்கு தெரிவித்துள்ளார். (ம)

## அரசு செய்த ஒப்பந்தமே ரூபாயின் வீழ்ச்சிக்கு காரணம்

### பந்துல குணவர்தன தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகராக, ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக, பொருளாதார ரீதியில் இலங்கை பாரிய பின்னடைவுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென, பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதும் இதன் பிரதிபலனே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரூபாயின் பெறுமதி இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளமையானது, தற்போதைய அரசாங்கம், சர்வதேச நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விளைவாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## சிகரெட் கடத்திய சீனப் பெண் கைது

(கொழும்பு)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்களை இலங்கைக்கு கொண்டு வந்த சீன நாட்டு பெண் ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சீன நாட்டு பெண் 44 வயது நிரம்பியவர் எனவும் டுபாய் நாட்டில் தயாரிக்கப்பட்ட 20 ஆயிரத்து 980 சிகரெட்களை அவரிடம் இருந்து மீட்டுள்ளதாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சிகரெட்களின் பெறுமதி சுமார் ஒரு மில்லியன் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட பெண் டுபாயில் இருந்து FZ-557 விமானத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இலங்கையை வந்தடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் 50,000 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்ட நிலையில், அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ம)

## வெசாக்கை முன்னிட்டு விசேட ரயில் சேவை

(கொழும்பு)

வெசாக் உற்சவத்தை முன்னிட்டு, மக்களின் வசதி கருதி விசேட ரயில் சேவைகளை முன்னெடுக்க, ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, இன்று தொடக்கம் இந்த விசேட ரயில் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

களுத்துறை தெற்கு, வெயங்கொடை, அநுராதபுரம், அலுத்கம, அவிசாவளை மற்றும் ரம்புக்கனை ஆகிய இடங்களுக்கு விசேட ரயில் சேவை இடம்பெறவுள்ளது. (ம)

# மோசடி செய்தவர்களுக்கு எதிராக விசாரணையை வலியுறுத்தி இராணுவத்தினர் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நிவாரண நிதியை மோசடி செய்த நபர்களுக்கு எதிராக விசாரணை நடத்தும்படி இராணுவத்தின் முன்னாள் சிப்பாய்கள் மற்றும் அங்கவீனமுற்ற சிப்பாய்கள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தினரை விற்பனை செய்து பிழைப்பு நடத்திவரும் நபர்களுக்கு எதிராக விசாரணை நடத்தும்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் இருந்து தலைநகர் கொழும்புக்கு வந்து ஒன்றுதிரண்ட இராணுவத்தின் முன்னாள் சிப்பாய்கள், அங்கவீனமுற்ற சிப்பாய்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் பேரணியாக ஜனாதிபதி செயலகம் வரை சென்றபோது அதனை இடைநிறுத்தும் வகையில் கலகத்தடுப்பு பொலிஸாரினால் தடுப்பு வேலிகள் இடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் செயலாளரிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளிப்பதற்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து அங்கவீனமுற்ற சிப்பாய் ஜயசேன கருத்து தெரிவிக்கையில்,

அமைப்பொன்றின் பிரதிநிதிகள் வந்து எமது விபரங்களை எடுத்துச் சென்றார்கள். இராணுவத்திலிருந்து காணாமல்போன மற்றும் அங்கவீனமுற்ற சிப்பாய்களின் குடும்பங்கத்தவர்களுக்கு 30 இலட்சம் ரூபா படிநிதி உதவி வழங்குவதாக வாக்குறுதி அளித்தனர். எனினும் 3 வருடங்கள் ஆகியும் ஒருசதமேனும் வழங்கப்படவில்லை. அந்த அமைப்பினருடன் எமது பிரதிநிதிகள் இருவரை தொடர்புபடுத்திக் கொடுத்தோம்.

அவர்களுக்கு குறித்த நபர்கள் கையூட்டல் வழங்கியதாக கூறப்படுகிறது. சேனக என்ற ஒருவருக்கு காசோலை ஒன்று வழங்கப்பட்டபோதிலும் அதனை மோசடி செய்ய முயற்சி இடம்பெறுகிறது. இராணுவத்தினரை விற்பனை செய்து பிழைப்பு நடத்துகிறார்கள்.

ஆகவேதான் இதுகுறித்து ஜனாதிபதியிடம் நாங்கள் எழுத்துமூலம் முறையிட்டுள்ளோம். ஒருவாரத்திற்குள் உரிய தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் காலத்தில் நாடு முழுவதிலும் இருந்துவந்து போராட்டம் செய்வோம் என்றார். (ம)

# இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திலங்க சுமதிபாலவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் திலங்க சுமதிபால உட்பட பலருக்கு எதிராக பிரதியமைச்சர் ரஞ்சன்ராமநாயக்க இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தனது முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளது என பிரதியமைச்சர் தெரிவித்துள் ளார்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் இடம்பெற்ற ஊழல்களிற்கு காரணமான பலருக்கு எதிராக நான் முறைப்பாடுகளை தாக்கல் செய்துள்ளேன் என தெரிவித்துள்ள பிரதியமைச்சர் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் மற்றும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோரின் பெயர்களை குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆட்டநிர்ணய சதி மற்றும் ஒலிபரப்பு உரிமையை வழங்குவதில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் குறித்து முறைப்பாடுகளை சமர்த்தியுள்ளேன் எனவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் குறித்து நான் கரிசனை கொண்டுள்ளேன் என தெரிவித்துள்ள பிரதியமைச்சர் இலங்கை அணி சமீபத்தில் சந்தித்துள்ள பின்னடைவுகளிற்கு மோசடிகளே காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

நான் மாத்திரம் இந்த முறைப்பாட்டை தாக்கல் செய்யவில்லை. கிரிக்கெட் வீரர்கள் உட்பட வேறு பலதரப்பினரும் முறைப்பாடுகளை தாக்கல் செய்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# வகுப்பாசிரியரின் வானில் சிக்கி 10 வயது மாணவி உயிரிழப்பு

(அம்பாந்தோட்டை)

வகுப்பாசிரியரின் வானின் சில்லில் சிக்கி 10 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாடசாலை நிறைவடைந்து வீடு நோக்கி சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவியொருவர் அவரின் வகுப்பாசிரியரின் வான் வாகனத்தின் சில்லில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

சூரியவெவ தேசிய பாடசாலையின் 5ஆம் தரத்தில் கல்வி கற்றுவந்த 10 வயது மாணவியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 1.40 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் 47 வயதுடைய குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த வான் பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

உயிரிழந்த மாணவியின் உடலம் சூரியவெவ மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் சூரியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)


வீடு, காணி விற்பனைக்கு

யா/மாநகர சபை எல்லைக்குள் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. (காலை 10 மணிக்கு பின் பார்வையிடலாம்)

தொடர்பு:0716274916

தவறவிடப்பட்டுள்ளது

உரும்பிராயில் இருந்து வல்லை சந்தி வரையும் வரும் பொழுது பேர்சோடு தங்கச்சங்கிலியும் தவறவிடப்பட்டுள்ளது. இதனை கண்டெடுத்தவர்கள் 0773933724 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு தந்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி-2428)

கார், வான் வாடகைக்கு தேவை

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை.

0710404978

# மே தினத்தை 7ம் திகதிக்கு மாற்றிய அரசால் ஜே.வி.பிக்கு வாய்ப்பு



(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் மே தினத்தை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு மாற்றியமை எமக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. இதனால் யாழ்ப்பாணத்தில் முதலாம் திகதியும், கொழும்பில் 7 ஆம் திகதியும் அனுஷ்டிக்க கூடியதாகவுள்ளது என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

மக்கள் விடுதலை முன்னணி என்பது வடக்கிற்கு தெற்கிற்கு வேறு கட்சி கிடையாது. நாட்டில் உள்ள அனைவருக்கும் எங்கள் கட்சி ஒ்ரே கட்சி தான். மேதினத்தை நாங்கள் கடந்த வருடங்களில் அனுஷ்டிக்கும் போது ஏப்ரல் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், மே முதலாம் திகதி கொழும்பிலும் அனுஷ்டித்து வந்தோம்.

இந்த நிலையில் தான் தற்போது மேதினத்தை அரசாங்கம் 7 ஆம் திகதிக்கு மாற்றியது வாய்ப்பாக அமைந்துள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் 1 ஆம் திகதியும், கொழும்பில் 7 ஆம் திகதியிலும் மேதினத்தை அனுஷ்டிப்பதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

மே தினம் ஒரு கட்சிக்கோ மதத்திற்கானதோ அல்ல, உலகத்தில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிய ஒன்றாகவே மே தினம் உள்ளது. ஆனால் தற்போது தொழிலாளர்களை நசுக்கியவர்களும், அரசுகளும் கொண்டாடுகின்றன. இலங்கையில் மே முதலாம் திகதி விடுமுறை நாளாக வரலாற்று ரீதியாக கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மாற்றியுள்ளனர்.

இந்த நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி வடபகுதி மக்களிடைய பிரச்சினைகளை வெளிக்கொணருவதற்கான களமாக பயன்படுத்தவுள்ளோம். வடக்கு மக்களின் உண்மையான பிரச்சினைகள் மறைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மேதின மேடையில் எங்கள் குரலை ஓங்கி ஒலிக்கவைக்கவுள்ளோம்.

தற்போதைய அரசின் திறனற்ற நடவடிக்கையால் முன்செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கை ஸ்தம்பித நிலைக்கு சென்றுள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து கடன் சுமை அதிகரித்துள்ளது.

மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றார்கள். இதன் பின்னரும் இன,மத, சாதி ரீதியாக பிரிந்து நிற்பதை தவிர்த்து தொழிலாளர் உரிமைகளுக்காக அனைவரும் ஒன்றுசேர வேண்டும்.

எமது மேதினக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி யாழ். மாநகரசபை மைதானத்தில் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினர் லால்காந்த ஆகியோர் பங்கேற்புடன் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வெசாக் பௌர்ணமிக்குப் பின்னர் அமைச்சரவையில் மறுசீரமைப்பு

(கொழும்பு)

அமைச்சரவை மறுசீரமைப்பு, எதிர்வரும் வெசாக் பௌர்ணமிக்குப் பின்னர் இடம்பெறுமென, அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர், இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறுமென, ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில், நேற்று இந்த மறுசீரமைப்பு இடம்பெறுவதாக இருந்தது.



இருப்பினும், அமைச்சுப் பதவிகளைத் தீர்மானிக்கும் பணிகள் இன்னமும் முடிவடையாத நிலையில், வெசாக் பௌர்ணமிக்குப் பின்னரே, இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# ஜனாதிபதியா, பிரதமரா என்பதல்ல மகிந்த தான் அடுத்த தலைவராம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்நாட்டின் அடுத்த தலைவர் என்பதே தமது எதிர்பார்ப்பு என கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

கூட்டு எதிர்க் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.



தலைவர் என்பது இந்த நாட்டின் ஜனாதிபதியா? அல்லது பிரதமரா? என்பது அல்லவெனவும் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கினால் மகிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ வர முடியாது எனக் கூறப்படுகின்றதே என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு 100 மில்லியன் டொலர்கள்

## உலக வங்கி ஒப்புதல்

(கொழும்பு)

கல்வி கட்டமைப்பை வலுப்படுத்தும் மற்றும் நவீனமயப்படுத்தும் இலங்கையின் முயற்சிக்கு ஆதரவளிக்க உலக வங்கி முன்வந்துள்ளது.

அதன்படி, குறித்த செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கும் வகையில் 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்குவதற்கு உலக வங்கி நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.

General Education Modernization Project (GEM) என்ற பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ், இலங்கைச் சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களுடன் இணைந்ததாக பொதுக்கல்வியின் பாடவிதானங்கள் நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

இதில், பல்வகைப்படுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானதாக பார்க்கப்படும். ஆங்கிலம் மற்றும் கணிதம் போன்ற மூலோபாய பாடங்களுக்கு பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

இத்திட்டத்தினூடாக, க.பொ.த உயர்தரத்தில் தெரிவுகள் விரிவாக்கப்படுவதுடன், அந்த வகையில் மாணவர்கள் கலை, முகாமைத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்விப் பிரிவுகளில் இருந்து தமக்குப் பொருத்தமான பாடங்களை தேர்ந்தெடுக்கும் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருப்பர்.

மேலும், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கான பாடவிதானங்கள் டிஜிட்டல் முறையில் கணனிகளூடாக பயன் படுத்தக்கூடியதாக விருத்தி செய்யப்படும். அதிகமாக பின் தங்கிய பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளைச் சேர்ந்த சிறுவர்கள் குறித்தே இத்திட்டத்தில் கவனம் குவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நல்லாட்சி வேண்டாம்; நாலகதேரர் எதிர்ப்பு

(கொழும்பு)

நல்லாட்சி என்ற எண்ணக்கருவின் மூலம் நாட்டுக்கு தேவையான ஆட்சி நடைபெறாது என சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் பிரதிநிதியான பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளுக்கு மக்கள் விடுதலை முன்னணியே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பெங்கமுவே நாலக தேரர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினருக்கு ஆதரவான பிக்குகள் அணியில் அங்கம் வகிக்கும் மதகுரு என்பதுடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை தீவிரமாக ஆதரித்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஊடகப் படுகொலைகளுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் இன்று போராட்டம்




(ஏறாவூர்)

ஊடகப் படுகொலைகளுக்கு நீதி கோரி, வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்கள் மட்டக்களப்பில் இன்று பாரிய கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

ஊடகவியலாளர் டி.சிவராமின் 13 ஆவது நினைவு நாளை முன்னிட்டு இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட 41 தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களின் மரணத்துக்கு நீதி வழங்கக் கோரி இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணியளவில் மட்டக்களப்பில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (இ-7)

# விரக்தியின் விளிம்பில் ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் விரக்தியடைந்துள்ளனர்.

இதற்கிடையே ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மூலம் நியமிக்கப்பட்டுள்ள புதிய நியமனங்கள் தொடர்பில் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் தாம் எதிர்பார்த்தது போன்று கட்சி மறுசீரமைக்கப்படவில்லை என்று அதிருப்தியடைந்துள்ள பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரணில் விக்கிரமசிங்கவின் பின் கட்சிக்கான தலைவர் ஒருவர் அடையாளம் காட்டப்படாமை குறித்தும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பில் அதிருப்தியடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிருப்தியாளர்கள் தரப்பில் பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் சிலரும் இணைந்துள்ளதுடன் அவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் நாட்களில் அதிருப்தியாளர் தரப்பினர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர்களுக்கு நெருக்கமான தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# எதிர்க்கட்சித் தரப்பில் அமர ஆசனங்களை ஒதுக்கித்தருக

## 16 சு.க.உறுப்பினர்கள் கோரிக்கை


(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி தரப்பில் தமக்கு ஆசனங்களை ஒதுக்கித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற செயலாளரிடம் நேற்று அவர்கள் கடிதம் மூலம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த முன்னாள் அமைச்சர்கள் 16 பேரே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# சபாஷ் ஸ்ரேயாஸ்! முதல் போட்டியில் டில்லி வெற்றி



அணித் தலைவராக களமிறங்கிய முதல் போட்டியில் டில்லி அணிக்கு வெற்றி பெற்றுக் கொடுத்தார் ஸ்ரேயாஸ் ஐயர். இவர் 40 பந்துகளில் 93 ஓட்டங்கள் விளாச, 55 ஓட்டங்களால் டில்லி வெற்றி பெற்றது.

இந்தியாவில் 11ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கின்றது. இதன் 26ஆவது லீக் போட்டியில் கொல்கத்தா - டில்லி அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித தலைவர் தினேஷ் கார்த்திக், முதலல் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

டில்லி அணியில் கம்பீர் களமிறங்கவில்லை.

**நல்ல ஆரம்பம்**

டில்லி அணிக்கு பிரித்வி ஷா, முன்ரோ (33) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. இளம் வீரர் பிரித்வி ஷா, 38 ஆவது பந்தில் ஐ.பி.எல்., அரங்கில் முதல் அரைச் சதம் எட்டினார். இவர், 62 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழுந்தார். ரிஷாப் பன்ட் 'டக்' அவுட்டாக, மக்ஸ்வெல் (27) ரன் அவுட்டானார்.

முதன் முதலாக அணித் தலைவராக களமிறங்கிய ஸ்ரேயாஸ், அரைச்சதம் கடந்தார். ஷிவம் மாவி வீசிய கடைசி ஓவரில் ஸ்ரேயாஸ் 4 சிக்சர்கள், ஒரு பவுண்டரி விளாச, மொத்தம் 29 ஓட்டங்கள் கிடைத்தன.

20 ஓவர்களில் டில்லி அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்கள் குவித்தது. ஸ்ரேயாஸ் (93 ஓட்., 40 பந்து, 10 சிக்சர், 3 பவுண்டரி) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ரசல் ஆறுதல்**

கடின இலக்கைத் துரத்திய கொல்கத்தா அணியின் 'ரொப் ஓர்டர்' சரிந்தது. கிறிஸ் லின் (5), உத்தப்பா (1), நரைன் (26 ஓட்., 9 பந்து), ராணா (8) என, வரிசையாக கிளம்பினர். தினேஷ் கார்த்திக் நீடிக்கவில்லை. சுப்மன் (37), ஷிவம் (0) அடுத்தடுத்து கிளம்பினர்.

ரசலும் (44) போல்டாக, கொல்கத்தாவின் தோல்வி உறுதியானது.

20 ஓவர்களில்கொல்கத்தா 9 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 55 ஓட்டங்களால் வீழ்ந்தது.

குல்தீப் (7), மிட்சல் ஜோன்சன் (12) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**இளம் அணித் தலைவர்**

ஸ்ரேயாஸ், தனது 23 வயது, 142ஆவது நாளில், டில்லி அணியின் தலைவராக நேற்று களமிறங்கினார். இதையடுத்து, ஹோலி (22 வயது, 187 நாள்), ஸ்மித் (22 வயது, 344 நாள்), ரெய்னாவுக்கு (23 வயது, 112 நாள்) அடுத்து, ஐ.பி.எல்., அரங்கில் குறைந்த வயதில் தலைவராக களமிறங்கிய, நான்காவது வீரர் ஆனார்.

**8**

கடந்த 2010, மார்ச் 25ல் பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் கம்பீர் பங்கேற்கவில்லை. தற்போது 8 ஆண்டுகள் கழித்து ஐ.பி.எல்., போட்டியில் பங்கேற்காமல் இருந்தார் கம்பீர்.

**மோரிஸ் விலகல்**

டில்லி அணிக்காக ரூ. 11 கோடிக்கு வாங்கப்பட்டவர் 'சகலதுறை வீரர்' கிறிஸ் மோரிஸ். இதுவரை 4 போட்டிகளில், 46 ஓட்டங்கள் மட்டும் எடுத்து, 3 விக்கெட் வீழ்த்திய இவர், முதுகுவலியால் அவதிப்பட்டார். இதையடுத்து, கிறிஸ் மோரிஸ் தொடரில் இருந்து விலகிக் கொள்ள, மற்றொரு தென்னாபிரிக்க வீரர் ஜூனியர் டலா, டில்லி அணியில் சேர்க்கப்பட்டார்.




# மீண்டும் தெறிக்கவிடுவாரா தல தோனி

## இன்று மும்பையுடன் 2ஆவது மோதல்

ஐ.பி.எல்., 27ஆவது லீக் போட்டியில் சென்னை - மும்பை அணிகள் மோதுகின்றன.

இதில் தோனி மீண்டும் விளாசும் பட்சத்தில், சென்னை அணி வெற்றியை பதிவு செய்யலாம்.

இந்தியாவில் 11ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இன்று புனேயில் நடக்கும் லீக் போட்டியில் தோனியின் சென்னை அணி, 'நடப்பு சம்பியன்' மும்பையை சந்திக்கிறது.

இந்த சீசனில் முதல் போட்டியில், மும்பையை ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி 'திரில்' வெற்றியுடன் தொடரை ஆரம்பித்தது சென்னை.

இந்த அசத்தல் தொடர, இதுவரை 5 வெற்றியுடன் (6 போட்டி), பட்டியலில் 'நம்பர்-1' ஆக உள்ளது.

தவிர, இத்தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் 'நம்பர்-1' இடத்தில், சென்னையின் அம்பதி ராயுடு (283) தான் உள்ளார். அடுத்து 'சீனியர்' தோனி (203), வோட்சன் (191), பிராவோ (118) என, பலரும் நல்ல 'போர்மில்' உள்ளனர்.

இதனால், எப்படிப்பட்ட இலக்கையும் நம்பிக்கையுடன் 'சேஸ்' செய்கின்றனர். ரெய்னா (129) தான் சற்று தடுமாறுகிறார்.

**பந்துவீச்சு முன்னேற்றம்**

சென்னை அணியின் பந்துவீச்சில் சற்று முன்னேற்றம் காணப்படுகிறது. 8 விக்கெட்டுக்கள் வீழ்த்திய ஷர்துல் தாகூருக்கு, வோட்சன் (6), பிராவோ (6), தீபக் சகார் (6) என, எல்லோரும் கைகொடுப்பது, கூடுதல் பலம். இந்த கூட்டணியில் இம்ரான் தாகிரும் (6) சேர்ந்துள்ளார்.

**துடுப்பாட்டம் மந்தம்**

மும்பை அணியை பொறுத்தவரையில் எதுவுமே 'செட்' ஆகவில்லை. அணித் தலைவர் ரோகித் சர்மா, பெங்களூருக்கு எதிராக 94 ஓட்டங்கள் எடுத்தது தான் அதிகம். மற்ற 5 போட்டிகளில் 46 ஓட்டங்கள் தான் எடுத்தார். பொலார்ட்டும அப்படித்தான். இந்த சீசனில் விளையாடும் அந்நிய வீரர்களில் மிக மோசமான சராசரி (15.75) இவருடையது தான். தவிர, எவின் லீவிஸ், ஹர்திக் பாண்ட்யா, குர்னால் பாண்ட்யா என, எவரும் கைகொடுக்க மறுப்பதால, துடுப்பாட்டம் மோசமாக உள்ளது. இன்று, ரோகித் தொடக்க வீரராக களமிறங்கி அசத்தினால், சென்னைக்கு பதிலடி தரலாம்.

**பும்ரா ஏமாற்றம்**

பந்துவீச்சில் 6 போட்டியில் 10 விக்கெட் சாய்த்த, இளம் வீரர் மார்க்கண்டே மட்டும் ஆறுதல் தருகிறார். கடைசி கட்ட ஓவர்களில் கலக்கும் பும்ரா, முஸ்தபிசுர் இருவரும், எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பட செயல்படவில்லை.

இதுவரை களமிறங்கிய 6 போட்டிகளில் ஒன்றில் தான் வென்றது மும்பை. மீதமுள்ள 8 போட்டிகளில் 7இல் வென்றால் மட்டுமே, 'பிளே ஓப் செல்ல வாய்ப்பு என்பதால், இன்று கட்டாயம் வென்றாக வேண்டும் என்ற நிலையில் களமிறங்குகிறது.

**12**

சென்னை, மும்பை அணிகள் இதுவரை 25 போட்டிகளில் (23 ஐ.பி.எல்., மற்றும் 2 சம்பியன்ஸ் லீக்) மோதின. இதில் சென்னை 12, மும்பை அணி 13இல் வெற்றி பெற்றன.

# ஹெயிலை வாங்கியது எப்படி?

## மனம் திறந்த சக பஞ்சாப் உரிமையாளர்

ஐ.பி.எல்., ஏலத்தில் கிறிஸ் ஹெய்லை வாங்க, எங்களிடம் போதிய பணம் இல்லாமல் இருந்தது. நல்லவேளை, இவர் எங்களுக்கு கிடைத்து விட்டார்," என நெஸ் வாடியா தெரிவித்தார்.

ஐ.பிஎல்., 11ஆவது சீசனில பஞ்சாப் அணி, 7 போட்டிகளில் 5ல் வெற்றி பெற்று, முன்னணியில் உள்ளது.

இந்த அணியில் இடம் பெற்றுள்ள ஹெய்ல், ஒரு சதம், அரைச்சதம் என விளாசி வெற்றிக்கு கைகொடுத்து வருகிறார். கடைசி நேரத்தில் சேவாக் பரிந்துரை செய்ததால்தான், இவரை பஞ்சாப் அணி வாங்கியதாக செய்திகள் வெளியாகின.

இதனிடையே, இவரை ஏலத்தில் வாங்கியது குறித்து, பஞ்சாப் அணி சக உரிமையாளர் நெஸ் வாடியா கூறியதாவது,

ஏலத்தில் முதலில் யுவராஜ் சிங்தான் எங்களது தேர்வாக இருந்தார். இவர், எப்படியும் மீண்டு வருவார் என நம்பினோம். இரண்டாவது நாள் ஏலத்தின் முடிவில், எங்களிடம் ரூ. 2.1 கோடி தான் கையில், மீதத் தொகை இருந்தது.

ஒருவேளை, ஏலத்தில் ஹெய்லை எடுக்க, மற்ற அணிகளும் போட்டிக்கு வந்திருந்தால், எங்களால்அவரை வாங்கியிருக்க முடியாது. ஏனெனில், போதிய பணம் எங்களிடம் இல்லை. ஒரு வழியாக ரூ.2 கோடிக்கு பஞ்சாப் அணிக்கு வந்து சேர்ந்தார் ஹெய்ல். இது, உண்மையில் எங்களது அதிர்ஷ்டம்தான்.

**அஷ்வின் எப்படி**

பஞ்சாப் அணியை நீண்ட கால திட்டம் அடிப்படையில் சிறப்பாக உருவாக்க விரும்பினோம். இதற்காக அதிக பணம் செலவு செய்தோம். இந்திய வீரர்தான் தலைவராக வேண்டும் என எண்ணினோம். இதனால், என்ன விலை கொடுத்தாவதும், சிறந்த வீரரான அஷ்வினை வாங்கியே தீருவது என திட்டமிட்டு, கடைசியில் சாதித்தோம். இவ்வாறு நெஸ வாடியா கூறினார்.

# 2028 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட்

## ஐசிசி நம்பிக்கை

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 2028 ஆம் ஆண்டு நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் சேர்க்கப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கொல்கத்தாவில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) 5 நாள் நிர்வாக ரீதியிலான கூட்டம் நடந்தது.

இக்கூட்டத்தின் இறுதி நாளில் ஐசிசி தலைமை நிர்வாக அதிகாரி டேவ் ரிச்சர்ட்சன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

"ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டைச் சேர்க்க ஐசிசி தீவிரமாக முயன்று வருகிறது. அதற்கான நடவடிக்கைகளை வேகமாக எடுத்து வருகிறோம். எங்கள் முயற்சிகள் சரியான திசையில் சென்றால், 2028ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் நிச்சயம் கிரிக்கெட் இடம்பெறும்.

கடந்த 1900ஆம் ஆண்டு பாரிஸில் நடந்த கோடை கால ஒலிம்பிக் போட்டியில் மட்டுமே கிரிக்கெட் இடம் பெற்றது அதன்பின் இன்னும் இடம்பெறவில்லை.

2024ஆம் ஆண்டு நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட்டைச் சேர்க்கக் கோரும் மனுவை சர்வதேச

International Cricket Council

ஒலிம்பிக் சங்கத்தில் அளிக்கும் காலக்கெடு முடிந்துவிட்டது. ஆதலால், 2028ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியில் சேர்க்க தீவிரமாக முயற்சிகள் நடந்து வருகின்றன. எங்களின் பேச்சுவார்த்தை சிறப்பாகச் செல்லும் பட்சத்தில் 2028 ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம்பெறும்." இவ்வாறு ரிச்சர்ட்சன் தெரிவித்தார்.


# சென்னை சுப்பர் கிங்ஸின் புதிய அப்ஸ் வெளியீடு

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் "பேட்டிள் ஒப் சேப்பாக் 2" அப்ஸுக்கு ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பு கிடைத்துள்ளது.

சென்னை அணி, இரண்டு ஆண்டு தடை முடிந்து இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டிகளில் மீண்டும் களமிறங்கி உள்ளது.

தோனி தலைமையில் களமிறங்கி இருக்கும் சென்னை அணி இதுவரை விளையாடி உள்ள ஆறு போட்டிகளில் ஐந்தில் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

இந்நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அதிகாரபூர்வ அப்ஸ் ஒன்று





தற்போது வெளியாகியுள்ளது. பேட்டிள் ஒப் சேப்பாக் 2 (Battle Of Chepauk 2) என பெயரட்டப்பட்டுள்ள அந்த அப்ஸ மூலம் ரசிகர்கள் செல்போனில சென்னை அணிக்காக கிரிக்கெட் விளையாடலாம்.

அந்த அப்ஸில் சுப்பர் ஓவர், மல்டி பிளேயர் உள்ளிட்ட வசதிகள் உள்ளன.

முன்னதாக வெளியிடப்பட்ட சென்னை சுப்பர் கிங்ஸ (சிஎஸ்கே அப்ஸ்) என்ற அப்ஸுக்கு ரசிகர்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பு இந்த அப்ஸுக்கும் கிடைத்துள்ளது.

## சுகாதாரத்திற்கு கேடு

# பரு.நீதிமன்றத்தில் 22 வழக்குகள் தாக்கல்; 2 இலட்சம் அபராதம், ஒரு நிலையத்திற்கு சீல்




(கரணவாய்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பருத்தித்துறை நீதிமன்றில் 22 வழக்குகள் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டன.

காலாவதியான உணவுப் பொருட்களின் விற்பனை, பதமிழந்த உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, பூச்சிமொய்த்த உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, பிழையான விதத்தில் சுட்டுத்துண்டிடு உணவுப் பொதிகளை விற்பனைக்காக வைத்திருந்தமை மற்றும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது உணவுப் பொருட்களைக் கையாண்டமை, சுகாதார விதிமுறைகளை மீறும் வகையில் நடமாடும் உணவு விற்பனையை மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு அமைய இவ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் பருத்தித்துறை பிரிவு II பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட்டினால் 9 வழக்ககளும் புலோலி பொதுச் சுகாதார பரிசோதகர் ச.சயந்தனால் 5 வழக்குகளும், பொலிகண்டி பொதுச் சுகாதார பரிசோதகர் ஆதவனால் 8 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் விசாரணை செய்யப்பட்ட 17 வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டதற்கமைய இரண்டு இலட்சம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டதோடு சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக இயங்கி வந்த ஒரு உணவு கையாளும் நிலையம் நீதிமன்ற உத்தரவுக்கமைய சீல் வைத்து மூடப்பட்டது. (இ)

# இலங்கையில் நேர்முகத் தேர்வுக்கு மணப்பெண் கோலத்துடன் சென்ற பெண்



(கொழும்பு)

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு நேர்முகத் தேர்வுக்கு மணப்பெண் ஒருவர் சமுகமளித்துள்ளார். இந்தச் சம்பவம் மாத்தறையில் இடம்பெற்றது.

மாத்தறை மாவட்டம் கெட்டவலகமவில் வசிக்கும் பட்டதாரியான கே.ஆர். அமாலி ப்ரியதர்ஷன ஜயரத்ன என்பவர் மணப்பெண் கோலத்துடன், மணமுடித்த கணவருடன் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளித்துள்ளார்.

மணமகனின் வீட்டிற்கு புதுத் தம்பதிகளை வரவேற்கும் வைபவத்திற்கு கலந்து கொள்ளும் நாளில் குறித்த பெண்ணுக்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையிலேயே மணப் பெண் கோலத்துடன், நேர்முகத் தேர்வுக்குச் சென்றார் என்று கூறப்படுகிறது. (இ-7)

# சர்வதேச இளம் விஞ்ஞானிகளுக்கான போட்டியில் இலங்கைக்கு இம்முறை மூன்று தங்கப்பதக்கங்கள்

(கொழும்பு)

சர்வதேச இளம் விஞ்ஞானிகளுக்கான போட்டியில் இலங்கை இம்முறை மூன்று தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளது. 25வது தடவையாக இந்தப் போட்டி சமீபத்தில் சேர்பியாவின் தலைநகர் பெல்கிரேட் நகரில் நடைபெற்றது.

இலங்கையின் சார்பில் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த சமாஷி விஹங்க முனவீர, கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த சவந்தி சேனாநாயக்க, கொழும்பு நாலந்தா கல்லூரியைச் சேர்ந்த ரகிந்து விக்ரமரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்கள் மூவரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சுவரொட்டிகள் ஆகிய பிரிவுகளில் போட்டியில் கலந்து கொண்டனர். சுவரொட்டிப் பிரிவில் மூவருக்கும் தங்கப் பதக்கம் கிடைத்தது.

இளம் விஞ்ஞானிகளுக்கான போட்டியில் ரஷ்யா, ஜேர்மன், நெதர்லாந்து, இந்தியா, பிரான்ஸ், பிரேசில், இந்தோனேஷியா முதலான நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 215 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-2)


# மரண அறிவித்தல்

## அமரர் பொன்னம்மா கோபாலன்
## (பார்வதி அம்மன் பூசகர்-ஆவரங்கால்)



சிவன்வீதி ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கோபாலன் அவர்கள் 25.04.2018 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கோபாலனின் அன்பு மனைவியும் தவநந்தினி, தவபவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும். அமரர் செல்லத்துரை, மார்க்கண்டு, திரவியம் (CO), சின்னராஜா (Banker) ஆகியோரின் சகோதரியும் குணதாசன் (சவுதி), செல்வசாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் கணபதிப்பிள்ளை, பூபாலன், தனபாலன், அமரர்களான மயில்வாகனம், இலட்சுமி, கண்மணி, பாக்கியம், தர்மதேவி மற்றும் செல்வபாக்கியம், சித்ரா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் வர்ணன் (சவுதி), நிதர்சனா, நிரோஜன், சரண்யா, சாகித்தியன், சார்மீகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யுகேனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக 29.04.2018 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவன்வீதி,**
**ஆவரங்கால்**
**077 615 8940** (3774)

**தகவல்:**
**கணவர் ச.கோபாலன்.**


# இராசி பலன்

**மீனம்:** உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், களஸ்திர நன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்:** கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி வரும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும்.

**இடபம்:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.

**மிதுனம்:** தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** பொதுவாழ்வில் வீண் பணிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணத்தால் .மன உளைச்சல் ஏற்படலாம், தொழிலில் கவனம் தேவை.

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | சுக் | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம், பூரட்டாதி<br>இரவு 2.12 மணிக்கு<br>துலா-சந் | | |
| செவ், சனி | | குரு | |

28.04.2018
சித்திரை 15, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திரயோதசி முற்பகல் 7.33 மணிவரை
அத்தம் பிற்பகல் 2.10 மணிவரை
சுபநேரம் 2.58-4.28 மணிவரை
இராகுகாலம் 8.58-10.28 மணிவரை
வளவன்

**கடகம்:** உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

**மகரம்:** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** நினைத்தது நடந்து சந்தோசம் அடையும் நாள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**தனுசு:** உறவினர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள்வர், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**துலாம்:** காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், உற்றார், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றியமைப்பீர்கள்.

**கன்னி:** நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தினர் மனங்கோணாது நடந்து கொள்வது நல்லது, வரவுக்கேற்ப செலவுகள் ஏற்படலாம்.



தந்தை செல்வாவின் 41ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 5மணியளவில் தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் அதன் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெற்றது.

## தாதியியல் இளமாணிக்கற்கைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் தாதியியல் இளமாணி பட்டக்கற்கைநெறிக்குரிய (Bachelor of Science Honors in Nursing) 2018/2019 அம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www. ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 22.05.2018 இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சந்தியில் கூடி பொழுதைப் போக்குவோர் குறித்து பொலிஸார் கூடிய கவனம் செலுத்த வேண்டும்

### பொது மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

உடுப்பிட்டி சந்திப் பகுதியில் தேவையற்ற வகையில் நின்று பொழுது போக்கும் இளைஞர்கள் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் கவனம் செலுத்த வேண்டும் எனப் பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்களிலும் அதேவேளை தனியார் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கும் நேரங்களிலும் முடிவடையும் நேரங்களிலும் சந்திப் பகுதியிலும் இளைஞர்கள் பலர் கூடுகின்றனர்.

இதனால் பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் செல்லும் மாணவிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதனால் பெற்றோர்களே தமது பிள்ளைகளை அழைத்து வந்து பின்னர் கூட்டிச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே அப் பகுதியில் பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்களிலும் தனியார் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கும் ,முடிவடையும் நேரங்களிலும் நின்று வீண் பொழுதினைப் போக்குவோரை கட்டுப்படுத்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் கவனம் செலுத்த வேண்டும் எனப் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

## இலக்கியப் போட்டித் தொடருக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவினர்களுக்கான பிரதேச மாவட்ட தேசிய இலக்கியப் போட்டித் தொடர் (2017/2018ஆண்டுக்கான) நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் தேசிய ரீதியில் நடத்தப்படுகின்ற ஒரு நிகழ்வாகும். இப்போட்டி நடத்துவதற்கான நோக்கம் மாணவர்களிடையே இலக்கிய ஆர்வத்தை மேம்படுத்துவதற்காகவும் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும் ஆகும்.

எனவே இப்போட்டிக்கான சுற்றுநிருபம், விண்ணப்பப் படிவம் என்பவற்றினை 2018. 05.01ஆம் திகதியிலிருந்து பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

போட்டிக்கான ஆக்கங்களை விண்ணப்பபடிவத்தோடு எதிர்வரும் 2018.05.25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் திருமதி.யு.யசோதா அறிவித்துள்ளார். (இ)

## "துருணு சிரமசக்தி" திறமைமிக்க இளைஞர் தேசிய விருதில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் மாவட்ட ரீதியில் இரண்டாமிடம்




(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட கிராமத்திற்கு ஒரு கோடி மக்கள் கருத்திட்ட மதிப்பீட்டில் (துருணு சிரமசக்தி) Youth with talente தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தினர் 3000 லீற்றர் நீர் கொள்ளக் கூடிய நீர்த்தாங்கியை நிறுவி மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டனர்.

அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற தேசிய விருது வழங்கும் நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச சம்மேளன இளைஞர் சேவை அதிகாரி, கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சம்மேளன இளைஞர் கழகத்தினர் ஆகியோருக்கு சான்றிதழும் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலையும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேற்படி திட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் 7 கருத்திட்டங்களை முன் அமைத்திருந்தது. மேற்படி நிகழ்வில் நாடளாவிய ரீதியில் 3500 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-78)

## நாடகக் கலைஞர் ஜெனத்தின் நினைவஞ்சலியும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் புகழ்பூத்த நாடகக்கலைஞராகிய அமரர் அ.பிரான்சிஸ் ஜெனத்தின் மறைவின் ஓராண்டு அஞ்சலி நிகழ்வும் "ஈழத்து அரங்கில் பிரான்சிஸ் ஜெனம் தன்மையும் படர்க்கையும்" என்னும் நூல்வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள புனித பெனடிக்ற் ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

நாடக அரங்கக் கல்லூரியின் ஸ்தாபகர் குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் அருட்திரு செ. அன்புராசா, கலாநிதி க.சிதம்பரநாதன், சோ.தேவராஜா, ஜி.பி.பேர்மினஸ், வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன், எவ்.யூல்ஸ் கொலின் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

பிரான்சிஸ் ஜெனம் எழுதிய அவரது அனுபவங்களும், அவரைப்பற்றி பலரும் எழுதிய கட்டுரைகளும் யோ. யோண் சன் ராஜ்குமாரால் நூலாகத் தொகுக்கப்பட்டு "ஈழத்து அரங்கில் பிரான்சிஸ் ஜெனம் - தன்மையும் படர்க்கையும்" என்ற பெயரில் விழாவில் வெளியிடப்படவுள்ளது.

இந் நூலுக்கான நயப்புரையை கலாநிதி கந்தையா சிறீகணேசன் நிகழ்த்தவுள்ளார்.

அமரர் பிரான்சிஸ் ஜெனம் ஈழத்தின் புகழ்பூத்த நாடக நடிகரும் நெறியாளருமாவார். ஈழத்தில் இயங்கிய நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றம், வண்ணை கலைவாணர் நாடகமன்றம் திருமறைக் கலாமன்றம், நாடக அரங்க கல்லூரி உட்பட பல அரங்க இயக்கங்களுடன் சேர்ந்து இயங்கியவர், கலை அரசு சொர்ணலிங்கம், பூந்தான் யோசேப்பு, நீ.மரிய சேவியர் அடிகள், தாசீசியஸ், சி.மௌனகுரு, சுஹையர் ஹமீட், குழந்தை ம.சண்முகலிங்கம், க.சிதம்பரநாதன் போன்ற பல நெறியாளர்களின் நாடகங்களில் நடித்தவர்.

பல நாடகங்களை நெறிப்படுத்தியவர், சிறந்த நடிகனுக்கான ஜனாதிபதி விருதினையும் பெற்றவர்.

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



"யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படை தலைமையகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாண பட்டினமும் தர்ம எழுச்சியும்" வெசாக் விழாவிற்கான முன்னாயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் முதலாம் ஆம் திகதி வரை யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தின் முன்பகுதியில் இவ்விழா நடைபெறவுள்ளது. இதன்போது முதன்முறையாக யாழ்ப்பாண பட்டினத்தில் புனித தாதுக்கள் காட்சிப்படுத்தல், வெசாக் வர்ண அலங்காரக்கூடு மற்றும் வெளிச்சக் கூடுகள் காட்சிப்படுத்தல், பக்திப்பாடல் இசைத்தல் மற்றும் மூன்று நாட்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:ஐ.சிவசாந்தன்)

# இரண்டாவது வர்த்தமானி அறிவித்தலிலும் தவறு

எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதியன்று ஆரம்பிக் கப்படவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கான அழைப்பு விடுப்பதற்காக வெளியிடப்பட்ட இரண்டாவது வர்த்தமானி அறிவித்தலிலும் தவறு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தலை விடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதென, பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற கூட்டத் தொடருக்கான அழைப்பு விடுக்கும் முதலாவது வர்த்தமானியில், திகதி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நேரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதனால், நேரத்தைக் குறிப்பிட்டு, இரண்டாவது வர்த்தமானி வெளியிடப்பட்டது. இவ்வாறு, இரண்டாவதாக வெளியிடப்பட்ட வர்த்தமானியில், சம்பந்தமே இல்லாமல், அரசமைப்பு உறுப்புரையொன்று குறிப்பிடப்பட் டிருந்தது. இத னால், அவ்வர்த்தமானி அறிவித்த லைத் திருத்தி, மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தலை விடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, பாரா ளுமன்ற அதிகாரிகளால் ஜனாதிபதி செயலகத் துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## துப்பாக்கிச்சூடு நாடகம்; வாக்குமூலம் பதிவு

சைட்டம் வைத்தி யக் கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் சமீரசேனாரத்னவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்துள்ளது.

கடந்த வருடம்பெப்ரவரி 6ஆம் திகதி, வைத்தியக் கல்லூரிக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வருகைதந்த இருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சமீர சேனாரத்ன உயிர் தப்பியிருந்தார்.

எனினும், இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் சமீர சேனாரத்னவினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகம் எனவும், தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக காட்டிக் கொள்வதற்காக அவர் இந்த நாடகத்தை நடத்தியுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

எவ்வாறெனினும் கடந்த வருடம் ஏப்ரல் 18ஆம் திகதி குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில், கடுவளை நகர சபையின் தலைவர் லக்மால்குஷாந்த கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமற்ற 1992 இல் பிறந்த, பூராடம் கி.பா: 22, உயரம் 5'1" உடைய கொழும்பில் பணிபுரியும் பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த வரனை (உள்நாடு அல்லது வெளிநாடு) பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 077 036 6059 (3783)

உ

முத்துமாரி அம்மன் துணை

## வல்லையின் இந்திர விழா



வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால் நாளைய தினம் (29.04.2018) ஞாயிற்றுக்கிழமை இந்திரவிழா மிகச் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

## இந்திர விழா

- 3 கிலோ மீற்றர் தூரத்திற்கு வீதிச் சோடனைகள்
- வானுயர தெய்வ உருவங்கள் (போட்டிக்கோ)
- அதி உச்ச மின் அலங்காரங்கள்/ மின்னொளிகள்
- வரலாற்றில் முதல் தடவையாக 100 அடிக்கு மேற்பட்ட இராட்சத புகைக்கூடு உட்பட புகைக்கூடுகள் வான்நோக்கி ஏவுதல்
- சம நேரத்தில் 10 மேடைகளில் கலை நிகழ்வுகள்
- இன்னும் பல கண்கவர் காட்சிகள்/ கலை அம்சங்கள்

என்பன நடைபெறவுள்ளன என்பதை மிகவும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

முக்கிய குறிப்பு: 3 பிரதான வீதிகளிலும் சைக்கிள் உட்பட வாகன பாதுகாப்புக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வண்ணம்
வல்வை மக்கள் சார்பில்
வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புக்குழுவினர்.

## சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்

திரு. கனகசபை அப்புகாமி



அரச சேவையில் 18 ஆண்டுகள் அரும்பணியாற்றி 27.04.2018 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் செல்லும் திரு.கனகசபை அப்புகாமி அவர்களின் சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

மேலும் அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(F-2423)

## வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு பட்டின சபை
## உப அலுவலகம் பண்டத்தரிப்பு

ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்
வட்டாரம்:- 01
உத்தேச ஆதன இல:- 41
வீதி:- உந்துவத்தை சாந்தை வீதி
கிராம சேவையாளர் பிரிவு:- J/149



வட்டாரம் 01, உந்துவத்தை சாந்தை வீதி, உத்தேச ஆதன இல 41 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென் மேற்கு) பகுதி இறை J/149 கிராமசேவகர் பிரிவில் உள்ள "வண்டுவத்தை வையந்தொழுதல் வளவு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குழி 10 கொண்ட இவ்வாதனம் சில்லாலையை சேர்ந்த கௌரிமணி தேவி டொன் பொஸ்கோ அவர்களால் வெளிப்படுதல் உறுதி மூலம் பிரசித்திபெற்ற நொத்தாரிஸ் V.பாலசுப்பிரமணியம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 5983 இலக்க 22.09.2017 ம் திகதிய உறுதிமூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.S.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2016/2/529 ம் இலக்க 2016.12.30 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது "வண்டுவத்தை வையந்தொழுதல் வளவு" நிலப்பரப்பு 02 குழி 10 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கௌரிமணி தேவி டொன் பொஸ்கோ எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (3776)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L காசாளர்
கனடா குடியுரிமை:
தொ.இ: B/7631

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: 10ம் தரம்
கட்டார்
தொ.இ: B/7634

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 33 செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Diploma தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/7636

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16 செவ் 7இல்
உயரம்: 161cm
தகைமை/தொழில்பட்டதாரி வங்கியாளர்
தொ.இ: B/7637

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து சைவம்
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பட்டதாரி சுவிஸ் குடியுரிமை
தொ.இ: G/7692

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BAMS
தொ.இ: G/7698


பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/7700

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 19
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSc/ விரிவுரையாளர்
தொ.இ: G/7701

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வு







(பூநகரி)

பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முற்பகல் 9 மணியளவில் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச இணைப்புக்குழு இணைத்தலைவர்களில் ஒருவரான யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஷ்னேந்திரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ப.அரியரட்ணம், த.குருகுலராசா, சு.பசுபதிப்பிள்ளை, பூநகரி பிரதேச சபைத்தலைவர் அஜயம்பிள்ளை, பிரதேச சபை உபதலைவர் சி.ஶ்ரீரஞ்சன் உட்பட பொலிஸ் பொறுப்பதிகாரி, படைத்தரப்புக்களின் பொறுப்பதிகாரிகள், சுகாதார சேவைகள் அதிகாரிகள் என பல திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டு பொது மக்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி பதிலளித்தனர்.

முக்கியமாக கல்வி சார்ந்த பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதுடன் இதுவரை மூடப்பட்டிருக்கும் பூநகரி கௌதாரி முனை அ.த.க. பாடசாலை, பூநகரி பல்லவராயன் கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பூநகரி தம்பிராய் அ.த.க. பாட சாலை ஆகியவை மீளவும் திறக்கப்பட வேண்டுமென பிரதேச சபை உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

இப்பாடசாலைகளை திறப்பதில் பல்வேறு சிரமங்கள் இருப்பதாகவும் இது தொடர்பில் ஆராயப்படும் எனவும் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தருமரட்ணம் பதிலளித்தார்.

அத்தோடு பூநகரி விநாசியோடை அ.த.க. பாடசா லையில் முதன்முறையாக க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றி இம்முறை 9 மாணவர்கள் சித்தியடை ந்துள்ளனர்.

ஆகவே இம் மாணவர்கள் கல்வியைத் தொடருவதற்கு வசதியாக பூநகரி விநாசியோடை பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்து மாணவர்கள் தொடர் கல்வியை கற்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் கோரிக்கை முன்வைத்தார்.

நீர்ப்பாசனத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

பூநகரியிலுள்ள கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் ஆயிரத்து 200 ஏக்கரில் சிறுபோகம் செய்வதற்கு வசதி உள்ளதால் அக்குளத்திற்கு போதுமான நிதியொதுக்கீடு செய்யப்பட வேண்டுமென பல்லவராயன்கட்டு கமக்கார அமைப்பினர் கோரிக்கை முன்வைத்தனர்.

அதற்கு பதிலளித்த கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பிரதிநிதி;

இம்முறை மேற்படி குளத்தை புனரமைப்பதற்காக ஒரு கோடியே 20 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேபோன்று விவசாயம், நீர்ப்பாசனம், சுகாதாரம், கால்நடைவளர்ப்பு ஆகிய பல்வேறு பிரச்சினைகள் பொது மக்களின் பிரதி நிதிகளால் முன்வைக்கப்பட்டதுடன் அவற்றுக்கான தீர்வுகளும் பதில்களும் உரிய திணைக்களங்களின் அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்டன.

இறுதியாக கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களில் ஒருவரான சி.சிறீதரன் எம்.பி.,

ஒவ்வொரு மாதமும் இச்செயலகத்தில் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நடைபெறுமெனவும் ஒவ்வொரு திணைக்கள அதிகாரிகளும் தாங்கள் பிரதிகளை கூட்டத்திற்கு அனுப்பி வைக்காது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் சமுகமளித்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். (2-84)

# முல்லையிலிருந்து மல்லாவி வரை அதிகாலை பேருந்து சேவை ஆரம்பிப்பு

(மல்லாவி)

அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் ஆகியோரின் நலன் கருதி இலங்கை போக்குவரத்து சபையின் முல்லைத்தீவுச் சாலையினால் முல்லைத்தீவில் இருந்து மல்லாவி வரையிலான அதிகாலைப் போக்குவரத்துச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் முல்லைத்தீவுச் சாலை முகாமையாளர் நடராஜப் பெருமாள் குணசீலன் தெரிவித்துள்ளார்.

இந்த போக்குவரத்துச் சேவை கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

துணுக்காய், மாந்தைக் கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு கடமை நிமித்தமாகவும் மற்றும் ஏனைய தேவை களுக்காகவும் சென்று வரும் யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் உட்பட பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் தமக்கு மாங்குளத்தில் இருந்து செல்வதற்கு காலை 6 மணிக்கு முன்னதாக பேருந்து வசதிகள் இன்றி பாதிக்கப்படுவதாகவும் தமக்கு மாங்குளம் ஊடாக பேருந்து சேவையை ஏற்படுத்தி தருமாறு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களிலும் மற்றும் கடிதம் மூலமாகவும் முல்லைத்தீவு சாலைக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து முல்லைத்தீவில் இருந்து மல்லாவி வரையிலான தினசரிப் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவை முல்லைத்தீவில் இருந்து தினசரி அதிகாலை காலை 5.45, மணிக்கு ஆரம்பித்து மாங் குளத்திற்கு காலை6.55, மணிக்கு சென்றடைந்து பின்னர் அங்கிருந்து 7.10, மணிக்கு புறப்பட்டு மல்லாவிக்கு 7.30 மணிக்கும் சென்றடைகின்றது.

பின்னர் மல்லாவியில் இருந்து காலை 7.35, மணிக்கு புறப்பட்டு மாங்குளத்திற்கு 8.05, மணிக்கு சென்றடைந்து பின்னர் 8.10 மணிக்கு புறப்பட்டு முல்லைத்தீவை 9 மணிக்கு சென்றடைவதாக சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (2-15)




### கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. (2)

# டைனமெற் பயன்படுத்திய சந்தேகத்தில் பள்ளிமுனை நான்கு வாடிகளில் 200 கிலோ மீன் வகைகள் பறிமுதல்

## கடற்றொழில் நீரியல்வளத்துறையினர் அதிரடி

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை கடற்கரையில் அமைந்துள்ள மீனவர்களின் 4 வாடிகளில் இருந்து டைனமெற் வெடி பொருட்களைப் பயன்படுத்தி பிடிக்கப்பட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் சுமார் 200 கிலோ கிராம் மீன் வகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேகத்தின் அடிப்படையில் இதனை வைத்திருந்த நான்கு மீனவர்களும் மன்னார் மாவட்ட நீதிமன்றில் மீன்வகைகளுடன் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,



தடை செய்யப்பட்ட டைனமெற் வெடி பொருட்களைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளதாக கடற்படை அதிகாரிகளினால் தகவல் வழங்கப்பட்டது.



இந்த நிலையில் விரைந்து செயற்பட்ட மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் டைனமெற் வெடி பொருட்களைப் பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள் என்ற சந்தேகத்தில் ஒரு தொகுதி மீன்களை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஒரு தொகை மீன்களும் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கடற்றொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நான்கு மீனவர்களும் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# வதிவிட இளைஞர் முகாம் துணுக்காயில் இன்று ஆரம்பம்

(பனிக்கன்குளம்)

இளைஞர் விவகார திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் என்பன இணைந்து நாடளாவிய ரீதியில் வதிவிட இளைஞர் முகாம் வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது.

அதன் அடிப்படையில் மேற்படி வேலைத்திட்டத்தை முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அறுபது இளைஞர், யுவதிகளை தெரிவு செய்து இன்று பி.ப 2 மணி தொடக்கம் நாளை மறுதினம் வரை மு/மல்லாவி மத்திய கல்லூரியில் மேற்படி வேலைத்திட்டம் நடைபெறும் என துணுக்காய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஜெ. சுகந்தன் தெரிவித்துள்ளார்.

அதனுடன் இணைந்து நாளை மறுதினம் 2018ஆம் ஆண்டுக்கான இளைஞர் கழக துணுக்காய் பிரதேச சம்மேளன புதிய நிர்வாக தெரிவுக் கூட்டமும் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார். (2-281)

# குடும்பஸ்தர் விபத்தில் படுகாயம்

(பனிக்கன்குளம்)

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வவுனியா நகர்ப்பகுதியிலிருந்து ஹொரவப் பொத்தானை வீதியூடாக வெளிக்குளம் பகுதி நோக்கி பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

குறித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களின் பின்புறமாக பயணித்த மோட்டார் சைக்கிளின் ஸ்டான்ட் சரியான முறையில் இல்லாதமையினால் வீதியில் உராய்ந்து முன்னால் பயணித்த குடும்பஸ்தரின் மோட்டார் சைக்கிளில் மோதியே விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் இளைஞனை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-281)

# பெண்கள் விவசாய விரிவாக்க அமைப்பின் அங்கத்தவர்களுடன் கலந்துரையாடல்

(வவுனியா)

விவசாய ஊக்குவிப்பு விசேட செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண வாரத்தினை முன்னிட்டு பெறுமதிசேர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பெண்கள் விவசாய விரிவாக்க அமைப்பின் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தை பாடவிதான உத்தியோகத்தர் திருமதி இ.அல்ஜின் குரூஸ் தலைமை தாங்கி நடத்தினார்.

பிரதம விருந்தினர்களாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், வவுனியா மாவட்ட விவசாயப்பணிப்பாளர், வவுனியா, உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தி திணைக்களம் வவுனியா வங்கி முகாமையாளர், வவுனியா தேசிய சேமிப்பு வங்கியைச் சேர்ந்தவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பெறுமதிசேர் நடவடிக்கையை ஊக்குவித்தலும் பெண்கள் விவசாய விரிவாக்க அமைப்பின் நடவடிக்கைகளை பிரபல்யப்படுத்தலும் எனும் நோக்கத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

மேலும் கீழ்வரும் விவசாயப் பெண்கள் அமைப்புகளினால் தங்களது உற்பத்திகள் விற்பனை செய்யப்பட்டது.

இதில் சுடர்ஒளி விவசாயப் பெண்கள் அமைப்பு, தாமரை விவசாயப் பெண்கள் அமைப்பு, வீரசக்தி விவசாயப் பெண்கள் அமைப்பு, அம்பாள் விவசாயப் பெண்கள் அமைப்பு, எக்கமுத்து விவசாயப் பெண்கள் அமைப்பு, திரிய விவசாயப் பெண்கள் அமைப்பு, திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் அடங்கலாக 75 பேர் கலந்து கொண்டிருந்தனர். (2)




# கிளிநொச்சி மாவட்டத்தில் நல்லிணக்க அமைச்சினால் வேலைத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கையளிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினுடைய செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் ஊடாக ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறை, உதயநகர் மேற்கில் இந்து இளைஞர் பேரவை புனரமைத்தல், உருத்திரபுரம் நான்காம் குறுக்கு புனரமைத்தல், வட்டக்கச்சி பாலத்தை இணைக்கும் வீதி புனரமைத்தல், போன்ற வேலைகள் முன்னெடுக்கப்பட்டு இவற்றை கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றுள்ளது.

மேலும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவினை மேம்படுத்துவதற்காக ICU ventilator, portable ventilator, video laryngoscope என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கான மொத்தக்கிரயம் ரூபா 9.5 மில்லியன் எனவும் அவர் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு 220 துவிச்சக்கர வண்டிகள் 3.5 மில்லியன் ரூபாவிலும் வாழ்வாதார உதவிகள் 15 மில்லியன் ரூபாவிலும் கையளிக்கப்பட்டன.

இவை தவிர 2018 ஆம் ஆண்டில் கரைச்சி சுகாதாரப் பிரிவின் மாவட்ட வைத்திய சாலைக்கு 38 மில்லியன் ரூபா செலவில் Laparos copy machine, Digital Plain Radiograph machine, Dental X-Ray machine ஆகிய வைத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

மேலும் வளர்மதி இறங்கு துறையும் இரணைமதநகர் இறங்குதுறையும் ஞானிமட கடலுணவு விற்பனை நிலையமும் ரூபா. 7.5 மில்லியன் செலவில் 2018 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படவுள்ளன. அத்துடன் பனைசார் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு ரூபா. 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், அரச அதிபர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின் இறுதியில் கருத்துத்தெரிவித்த அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி, ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பிரதமரின் ஒத்துழைப்புடன் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பொருளாதார கட்டமைப்பு, வாழ்வாதாரம், சமூக உட்கட்டமைப்பு, அபிவிருத்தி எனப் பல்வேறு வேலைத்திட்டங்கள் இந்தாண்டிலே 1750 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சியில் இந்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை சுகாதார வசதிகளை மேம்படுத்தும் வகையில் 9.5 மில்லியன் செலவில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஞானிமடத்தில் கடல் உணவு விற்பனை நிலையம் அமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## வவுனியா வெங்கல செட்டிகுளம்

# பிரதேசசபை உறுப்பினர்களின் வரவேற்பும் கன்னி அமர்வும்



(பனிக்கன்குளம்)

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் செட்டிகுளம் பிரதேச சபைக்கு முன்பாக உறுப்பினர்கள், விருந்தினர்கள் ஆகியோருக்கு பூ மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தேசியக் கொடியை சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் வாசல, மாகாண கொடியை சிறீரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசாவும் சபைக் கொடியை தவிசாளர் அந்தோனி ஆகியோர் ஏற்றி வைத்ததுடன் சமய தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் சிறீரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் வாசலவும் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி, கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் நெல்சன், அக்கட்சியின் சர்வதேச அமைப்பாளர்களில் ஒருவரான மலரவன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். (2-281)

# இரணைதீவில் குடியேறுவதற்கு எமது உறுதியான போராட்டமே காரணம்



(இரணைதீவு)

எமது உறுதியான சாத்வீக போராட்டமே இரணைதீவில் எம்மை குடியேற வைத்துள்ளது என இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மக்களை நேற்று முன்தினம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சந்தித்து கலந்துரையாடினார் இரணைதீவுக்கு சென்ற அவர் குறித்த பகுதியில் தங்கியுள்ள மக்களிற்கு உலர் உணவு பொருட்களையும் வழங்கி வைத்தார். இதன் போது அவருடன் பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் சென்றிருந்தனர். ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அவர். மக்கள் தமது பூர்வீக மண்ணில் குடியேறுவதற்காக நீண்ட காலமாக போராடி வந்தனர். இந்நிலையில் இன்று அவர்கள் தாமாகவே குறித்த பகுதியில் குடியேறியுள்ளனர். இவர்களின் இந்த துணிகரமான செயல் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அனைத்து போராட்டகாரர்களிற்கும் முன்னுதாரணமாகும். இன்று இவர்கள் குடிநீர் உட்பட அடிப்படை தேவைகள் இல்லாது வாழ்கின்றனர். இவர்கள் குடிநீர் பெற்று கொள்வதற்கு பொருத்தமான வாகனங்கள் வழங்கப்பட வேண்டும், அதே வேளை இவர்கள் கொட்டகை அமைத்து வாழ்வதற்கு ஏற்ற வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இவர்கள் தொடர்பில் விசேடமாக வடமாகாண சபை விசேட கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக வடமாகாண முதலமைச்சர் இவர்களை நேரில் வந்து பார்வையிட்டு இவர்களின் குறை நிறைகளை கேட்டறிந்து, இவர்களுக்கு உதவ முன்வர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இரணைதீவு மக்கள் தமது காணிகளில் கிடைத்த தென்னை ஓலைகளை பின்னி வருகின்றனர். அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

'இந்த தென்னை மரங்கள் எமது மூதாதையர்கள் வைத்த தென்னைகள் மாத்திரமல்ல நாமும் நாட்டி சென்றிருந்தோம். இன்று 26 வருடங்களின் பின்னர் நாங்கள் எமது காணிகளில் சென்று தென்னை ஓலைகளை வெட்டி இப்போது பின்னி வருகின்றோம். இவற்றைக் கொண்டு மலசலகூடங்கள், கொட்டகைகள் ஆகியவற்றை அமைக்கவும் எண்ணியுள்ளோம். எமது காணியில் உள்ள இவ்வாறான எமது வளங்களை நாம் பயன்படுத்த கிடைத்தது மிகவும் மகிழ்ச்சி. (2)

# கிளிநொச்சி பொதுச்சந்தை மே தினத்தன்று மூடப்படும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிமாவட்டத்தில் மேதினக் கூட்டம் இவ்வருடமும் வழமை போல் முழங்காவிலில் மே முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் கிளிநொச்சி பொதுச் சந்தையின் வளாகத்திலுள்ள அனைத்து கதவுகளும் மூடப்பட்டு வியாபார நடவடிக்கை இடம் பெறாது.

ஆதலால் வர்த்தகர்கள் அனைவரையும் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கரைச்சி பிரதேசசபை தலைவர் அ. வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார். (2-27)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 153

## மறந்ததும் மறைந்ததும் மறைத்ததும்!

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வேளாண் குடிமக்களாகிய எமக்கொன்றொரு வாழ்வியல் உண்டு. வரலாறு உண்டு. அடையாளமும் உண்டு. நாமாக அதனை அழியவிட்டாலன்றி எவராலும் அதனை அழித்து விடமுடியாது. இது ஒன்றும் விசித்திரமான விடயமுமல்ல.

எம்மை நாம் முதலில் யார் என உணராதிருப்பதன் விளைவே இதுவாகும். இலங்கைத்தீவு பல்லின மக்களைக் கொண்ட அழகானதீவு. இங்கிருக்கும் பல்வகைத் தன்மை மனிதர்களிடம் மட்டுமல்ல அனைத்து உயிரினங்களிலும் இருக்கின்றதனை காணலாம்.

சொல்லிச் சென்ற பல விடயங்களை அவ்வப்போது மீட்டிப் பார்த்துக் கொள்வது என்றென்றும் நல்லது. என்றென்றும் எமக்கான பாடமாகவும் அவர்களது அனுபவம் எமக்கான பாடத்திட்டமாகவும் உருமாறுவதை அவதானிக்கலாம்.

விவசாயத்தில் பல நுணுக்கங்களை எம் முன்னவர்கள் அனுபவமாகச் செய்து காட்டிச் சென்றதனை நாம் முற்றாகவே மறந்திருக்கின்றோம். இப்போது பலவிதமான ஆராய்ச்சிகளைச் செய்து முன்னையவர் சொல்லிச் சென்றவை விஞ்ஞானபூர்வமான தீர்க்கமான முடிவுகள் என தீர்ப்பளித்திருக்கின்றார்கள். பயிரொன்றை விளைநிலத்தில் பயிரிட முன்பு அது அந்த இடத்திற்கு

எமக்கெல்லாம் கிடைக்க வேண்டிய விடயங்களனைத்தும் இவ்வாறான உயிரினங்களில் அருமை பெருமையாகக் காணப்படுகின்றன. ஆனால் நாம் அதற்கான முன்முயற்சிகளில் ஈடுபட்டாலன்றி எதனையும் நாம் அடைந்துவிட முடியாது.

மறைந்தவை மறைந்தவையாகவும் மறந்தவையாகவுமே போய்விடும். எமது அடையாளப்படுத்தலில் மறைக்கப்படவும் மறக்கப்படவும் பல நிகழ்வுகள் கோர்வையாக உருவாக்கப்பட்டு தற்போது இளையவர்களை அந்த மாயைக்குள் சிறைவைக்கும் நடைமுறைகள் அரங்கேறி வருகின்றன.

மக்களுக்கான நலனை கருத்தில் கொண்டதான அரங்கி

வாங்கிக் குவிக்கும் முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு கிளைபோசேற்று என்னும் களைநாசினியினால் மத்திய பிரதே சமக்கள் குறிப்பாக மதவாச்சி அநுராதபுர மக்கள் பாதிக்கப்பட்டதனை நாமெல்லோரும் அறிவோம். இதனால் உடல் நலக் குறைபாடு ஏற்பட்டு பலர் சிறுநீரகக் கோளாறுகளுக்குட்பட்டதை அறிந்தும் நாம் அதனை மறக்க முயற்சிப்பது நல்லதல்ல.

மறந்தாலும் அதனை மறைக்கவும் தற்போது பலர் முண்டியடித்துக் கொண்டிருப்பதனை அறிய மனம் அழுகின்றது. களைநாசினிகளின் பாவனை அதீதமாக வந்ததன் விளைவு என பல ஆய்வறிக்கைகள் எடுத்துக் காட்டிய பின்னும் அதனையும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

நாட்டுக்குள் இறக்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கான காரணங்களாக இவற்றினை எமது விவசாயிகள் இன்னமும் பாவிக்கத் தலைப்படுகின்றார்கள்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 168

ஆனால் நாம் அதனை அடையாளப்படுத்த மறந்து விட்டோம்.

இருக்கின்ற உயிரினங்களனைத்தும் எமது சொத்துக்கள். இத்தீவின் உயிரினங்கள் என அடையாளப்படுத்துவதில் அலட்சியமாக இருந்து விட்டோம். இதில் தாவரங்கள், பல்லின விலங்குகள், இன்னும் நுண்ணங்கிகள் என பலவும் அடங்கும். எமது வளத்தை நாமே சிதைவடைய விட்டு விட்டோம்.

இத்தீவில் நடைபெற்ற போர் பலவுயிரினங்களை அழித்தொழித்து விட்டது. எமக்கென்றிருந்த வளங்களாக அவை இருந்தும் அவை தற்போது எம்மை விட்டு மறைந்து விட்டன.

இருக்கின்றனவற்றை நாம் பாதுகாக்கத் தவறினால் இன்னும் பல சிரமங்களுக்குள் உள்ளாக வேண்டிவரும் என்பதனை இன்னமும் நாம் புரிந்து கொள்ளவில்லையே. எமது வளங்களை நாம் வெளிக்கொணராமல் இன்னமும் மறைத்து வைத்துக் கொண்டிக்கின்றோமா? என வினாவும் எழுகின்றது.

வாருங்கள் உள்ளார்ந்து விடயத்திற்குள் வருவோம். எமது வாழ்வியலை மூதாதையர் வாழ்ந்த வாழ்க்கையை மறந்தது ஏன் என்பதற்கு பல காரணங்களை முன்வைத்தாலும் மேல் நாட்டு மோகமும் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியும் காரணங்களாக முன்னெழுகின்றன.

எது வந்திடினும் நாம் வாழ்ந்த வாழ்க்கையை, வரலாற்றை மறந்துவிடமுடியாது. தீமையான விடயங்களை மறப்பதற்கு முயற்சி செய்தால் நல்லது. ஆனால் முன்னையவர்கள்

ஏற்றதா? இல்லையா? என்பதனை தங்களது தீர்க்கமான

நிகழ்வுகளை வரவேற்கும் அதே நேரத்தில் மக்களின் திசை திருப்பு

இதனையும் ஒப்பிட்டு இவ்வாறான இரசாயன பாவனைக்கு







அறிவினால் கண்டறிந்த எமது பாட்டன், முப்பாட்டன் கூறிச்சென்றவையெல்லாம் முத்துக்கள் அன்றோ. புதுமைகள் காணப் புறப்பட்டிருக்கும் இளையோரே எதைத் தேடுகின்றீர்களோ அவை அங்கே இருக்கின்றன. ஆதலால் மீட்டிப்பாருங்கள். பலவிதமான புத்தாக்கங்களுக்கு விடை கிடைக்கும்.

எமது பிரதேசத்திலுள்ள வளங்களை போர் என்னும் கொடிய அரக்கன் அழித்து விட்டான். மனித வளம் தொடங்கிபல உயிர்கள் காவுகொள்ளப்பட்டு விட்டன. இனியொரு முறை இத்தகையதொரு நிலை இத்தீவிற்கு வந்து விடக்கூடாது.

இருக்கின்ற மிஞ்சிய உயிரினங்களையாவது பாதுகாக்க தலைப்படுவோம். மறைந்த பல தாவர இனங்கள், விலங்கினங்களை நாம் இயன்றளவில் புதுப்பிக்கலாம் என்றால் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம்.

கின்ற மேலும் கலை கலாசார சீரழிவுகளுக்கு துணை போகின்ற நிகழ்வுகளை அரங்கேற்ற அனுமதிக்கக் கூடாது. அதுவும் மதத்தின் பேரால் மதம் பிடிக்கும் நிகழ்வுகளை அவசரம் தடுத்தேயாக வேண்டும்.

மக்களை சுதந்திரமாக, அமைதியாக, மகிழ்ச்சியாக வாழ வழி செய்து கொடுத்தல் அவசியம். பலவிதமான இன்னல்களுக்கிடையே வாழத்தலைப்படும் மக்களை மீண்டும் எரிச்சலூட்டும் வைபவங்களும் நடக்கின்றன என எங்களூர் பண்டிதர் விசனப்பட்டுக் கொண்டார்.

விவசாய செய்கையில் சேதன விவசாயத்தை நோக்கிய பாதை மெதுவாக செப்பனிடப்படுகின்றது. ஆனாலும் அதற்கான அடித்தளத்தை அசைக்கும் பலவிதமான நிகழ்வுகளும் நடந்த வண்ணமே இருக்கின்றன.

ஒரு பக்கத்தில் இன்னும் விவசாய அசேதன இரசாயனங்களை

நியாயம் கற்பிக்க முற்படுவதனை என்னவென்பது. எமது சூழலை அழித்ததை மறந்து விட்டு நாம் எப்படி வாழப் போகின்றோம்.

மேலும் இனி வருங்காலங்களில் இவற்றினால் ஏற்படக் கூடிய தீங்குகள் பல என ஆய்வுகள் பட்டியலிட்ட பின்னும் நாம் அசேதன இரசாயனங்களின் வருகையினை மிகவும் கவனமாக கையாளவேண்டும். பல்தேசிய கம்பனிகளின் சந்தை இலங்கை என எப்போதிருந்தே இலக்கு வைத்து பல நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பல்தேசிய கம்பனிகள் பணத்தை வாரியிறைத்து தங்களது அசேதன இரசாயனங்களை இலங்கைக்குள் திணிப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் கைப்பற்றப்பட்ட தடைசெய்யப்பட்டகிளைபோசேற்று களைநாசினியை ஏதோவொருகம்பனி மறைத்து உள்

என்பதற்கப்பால் அதிலிருந்து இன்னமும் ஆதாயத்தை தேடிக் கொள்ளலாம் என்பதுதான் என்பது புரிகின்றதுஅல்லவா.

எமது வாழ்வியலின் அர்த்தத்தினை எமது இளஞ் சந்ததிக்கு மறைத்துவிடாதீர்கள். கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு என்பன ஒவ்வொரு இளையவர்களிடமும் சொல்லிக் கொடுக்க வேண்டும். வீட்டில் ஒருவயதானவர் இருக்க வேண்டும் என்பதன் அர்த்தமும் அதுதான்.

முன்னையவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளை, இயற்கையை நேசித்ததை, சூழலை பாதுகாத்ததை, சத்துணவு தயாரித்து உண்டதை, சுகதேகியாக நீண்டகாலம் மகிழ்ச்சியாக வாழ்வதை சொல்லிக் கொடுங்கள்.

எமது வாழ்க்கையின் அர்த்தம் மற்றையவரை சந்தோசப்படுத்திப் பார்ப்பதேயன்றி மற்றையவர் பற்றிகோள் சொல்வதும் அவரவருக்கு தலையிடி கொடுப்பதுவுமல்ல. வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்து கொண்டால் விவசாயியின் வியர்வையின் ஒவ்வொரு துளிக்கும் அர்த்தம் புலப்படும்.

வாழ்ந்து வரலாறானவர்களைப் பற்றி அசைமீட்டிப் பார்ப்பது நல்லது.

நல்ல விடயங்களை நாம் கவனத்திற்கெடுத்து அவற்றை இயன்றவரை மற்றையவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கும் அதேநேரத்தில் எமது அடையாளமாக இருக்கின்ற விடயங்களை நாமே பாதுகாத்துக் கொள்வது நாம் அந்த வரலாற்றில் எம்மையும் இணைத்துக் கொள்வதற்கான வாய்ப்பாக இருக்கும். முயற்சி செய்வோம் வாருங்கள்.

# மணிவிழாக் காண்கிறார் தமிழாசிரியர் த.நாகேஸ்வரன் அவர்கள்



## இளமையோடு இன்றும் என் நெஞ்சில் இருப்பவர்!

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

உள்ளம் மகிழ்கிறது. நண்பர் நாகேஸ்வரன் மணிவிழா காண்கிறாராம்.
காலம் எவ்வளவு வேகமாக ஓடுகிறது.
கால்நூற்றாண்டுக்கு முன் இளைஞனாய் சந்தித்த,
நாகேஸ்வரனை நினைத்துப் பார்க்கிறேன்.
பேச்சுத்திறன், கவிதைத்திறன், எழுத்துத்திறன் என
தமிழின் பல ஆற்றல்களையும் உள்ளடக்கிய, ஆழ்ந்த தமிழ் அறிவு,
அதனை மற்றவர்க்கு உரைக்கும் வன்மை,
மாணவர்களை உருவாக்கும் தனித்துவ திறமை என
பன்முக ஆற்றல் கொண்ட ஓர் இளைஞனாய் அன்று அவரை சந்தித்தேன்.
தமிழறிஞர்கள் கற்பனை உலகில் சஞ்சரிப்பார்களேயன்றி,
அருகிருக்கும் சமூகம் பற்றிய அக்கறை இல்லாதவர்கள் என்பதாய்
தமிழ் கற்றவர்கள்மேல் எப்போதும் சிலர் குற்றம் சாட்டுவர்.
அக்குற்றச்சாட்டை உடைத்தெறிந்து அருகிருக்கும் சமூக பாதிப்புக்கள் அனைத்தையும்,
அன்று தொட்டு இன்று வரை பிரதிபலிக்கும் ஒருவராய் நாகேஸ்வரன் திகழ்கிறார்
தமிழால் வந்த உறவால் என்மேல் தனித்த அக்கறை காட்டுவோரில் ஒருவராய்,
என் உள்ளத்தில் பதிவாகியிருக்கிறார் அவர்.
அவரது தனித்துவ ஆற்றல்களால், பலதரம் எங்கள் கம்பன் மேடைகளைச்
சிறப்பித்த பெருமை அவருக்கு உண்டு.
இன்று அவர் மணிவிழாக் கண்டாலும் என் மனதில்,
அன்றைய இளைஞனாகவே பதிவாகியிருக்கிறார்.
அவ் இளமை தமிழன்னை தந்த வரம்.
இன்னும் பல்லாண்டுகள் அவ் இளமையோடு தமிழ் வளர்க்க
அவருக்கு நல்லாசிகளைத் தரவேண்டுமென,
இறைவனை நானும் கழகத்தாரும் பிரார்த்தித்து நிற்கிறோம்.
அவரது மணி விழாவை ஒட்டி " அரங்கில் பொழிந்த அமுத மழை"
எனும் அவரது கவிதை நூல் வெளியிடப்படுவது இரட்டிப்பு மகிழ்ச்சி
அடுக்கு மொழிகளாலும் நெஞ்சை அள்ளும் கவித்துவத்தாலும் அனைவரையும்
ஈர்க்கும் அவரின் அரங்கக் கவிதைகள்
நூலுருப் பெறுவது வரவேற்கத்தக்கது.
அவரது நூற்பணிகள் மென்மேலும் வளர்க என வாழ்த்துகிறேன்.

*"சாதனை செய்க பராசக்தி"*
*"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"*

## உற்றவரே அனைவரையும் உரிமையுடன் அழைக்கின்றோம்

நற்றமிழாம் சொல் எடுத்து நயமாகக் கவிதொடுத்து
நாமெல்லாம் தமிழ் இரசிக்க நாளெல்லாம் உழைக்குமகான்.
மற்றவரை உயரவைத்து மாட்சிமையாய் அதை இரசித்து
வித்துவமே உருவாக வினயமொடு வாழுமகான்.
உற்றவரை ஊரவரை உயிரெனவே தான் போற்றி
உள்அன்பால் உறவாடி ஊருக்காய் மாழுமகான்
கற்றவர்கள் என்றென்றும் களிப்புடனே தாம் விரும்பும்
கண்ணணைய தமிழ் அதனை காலமெலாம் ஆழுமகான்
நற்தமிழால் நாமடைந்த நாகேசுவரக் கவிஞன்
பொற்புறுநல் அகவையதாம் அறுபதிலே கால்வைத்தான்
சுற்றமொடு சூழ் உறவும் சுந்தரமாம் விழாவெடுக்க
உற்றவரே அனைவரையும் உரிமையுடன் அழைக்கின்றோம்

***மணிவிழா குழு சார்பாக இணைச்செயலர்கள்***
***திரு.செ.சிவபாதசுந்தரம் திரு.கா.சிவஞானசுந்தரம்***

## என்னுடை வசிட்டன் வாழி

தன்னிகர் இல்லாத தன் தமிழறிவால் தென்மராட்சி வாழ் மாணவர்களை நிமிர்வுறச் செய்த பெருமைக்கு உரியவர் தமிழாசிரியர் த. நாகேஸ்வரன் அவர்கள். தன் நாற்பது வருட ஆசிரியப் பணியை பெருமையோடு பேணிய திருப்தியோடு இன்று நம்மத்தியில் நிமிர்ந்து நிற்கிறார் அவர். அப்பெருந்தகை இன்று (28.04.2018) தன் அறுபதாம் அகவையை நிறைவு செய்கிறார். இன்று தென் மராட்சிச் சமூகம் அனைத்தும் ஒன்றிணைந்து அவருக்கு மணிவிழா எடுத்து மகிழ்கிறது. மணிவிழா என்பதற்கு அறுபதாம் ஆண்டின் நிறைவு என்ற பொருள் இருக்கின்ற அதேவேளை அழகு விழா எனவும் பொருள் கொள்ள முடியும் என்று நம்புகிறேன். மற்றவர் விழாக்களில் அப் பொருள் எத்துணை பொருந்துமோ இல்லையோ அழகு தமிழால் ஆயிரமாயிரம் மாணவர் வாழ்வை அழகூட்டிய ஆசிரியர் திரு த.நாகேஸ்வரன் அவர்களின் விழா, அழகு விழாவாயும் பொருள் கொள்ளத்தக்கது என்பதில் இருவேறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

குன்றாப் புகழோடு இன்றளவும் அவர் செய்த சாதனைகள் அறப்பணிகள் சொல்லில் அடங்காதவை. ஒரு தமிழாசிரியனுக்கு இன்றியமையாதது, இருக்க வேண்டிய அன்பும் கருணையும் அவரிடத்தில் என்றும் பொலிந் திருப்பதை அவரை அறிந்த அத்தனை பேரும் ஏற்பர். ஏழைகளாயும் ஏதிலிகளாயும் திக்கற்று நிக்கும் எத்தனையோ மாணவர்களுக்கு என்றும் அவர் இல்லம் அடையாநெடுங்கதவோடு காத்துக் கிடப்பதை ஊர் அறியும். துன்னை நாடி தயக்கத்தோடும் ஏக்கத்தோடும் வரும் மாணவர்க்கு அஞ்சேல் என அபயகரமுயர்த்தி அணைத்து, அவர்களை வெல்ல வைத்து வெற்றி பெறும் சமர்த்தராய் கருணாகர மூர்த்தியாய் அவர் திகழ்கிறார்.

அவரைப்போலவே அவருக்கு வாய்த்த அவரது வாழ்க்கைத்துணைவியும் அறப்பணிக்குத் துணை நிற்கும் தன்மையர். ஆசிரியர் அவர்கள் இலக்கியப்பாடல்களை இங்கிதமாய் மாணவர்க்கு ஊட்டும் பாங்கு நயக்கத்தக்கது மட்டுமல்ல வியக்கத்தக்கதும் தான். அவருடைய மாணவனாய் இருந்து, நான் இதை இரசித்திருக்கிறேன். ஆனால் பின்னாளில் நானும் ஓர் தமிழாசிரியனாய் ஆனதின்பின் அவரது இவ் ஆற்றலை பேண முனைந்து தோற்ற போதெல்லாம் அவர் மீது அடங்காத, இன்றளவும் தணியாத, பொறாமை என்னுள் உண்டாகி நிற்பதனையும் வெட்கத்தை விட்டுச் சொல்லத்தான் வேண்டும். மாணவர்களின் பொறுப்பின்மைகளை, அக்கறையீனங்களை கண்டிக்கும் போது அவர் கொள்ளும் கோபம் சொல்லுந்தரமன்று. இலக்கிய உலகில் துருவாசமுனிவர் இருக்கிறாரே அவரைத்தான் இவரது கோபம் நினைவூட்டிக் கொள்ளும் அடிக்கடி கோவப்படுவார். ஆனால் எதையும் மனதில் வைத்துக் கொள்ளமாட்டார். மறுகணம் மறந்து விடுவார்.

கல்லூரியில் படித்த காலத்தில் நான் அவரிடம் கற்றுக் கொண்டதை விட, அதன் பின்னான இலக்கிய வாழ்வில் தான் அதிகம் பயன்பெற்றுக் கொண்டேன். அவரின் வழி காட்டலில் கற்பித்த காலத்திலும் அதன் பின் தென்மராட்சியில் இலக்கியப்பணி செய்ய அணியாய் இணைந்து செயற்படுகின்ற இன்றும் அவர் எமக்கு நல்கும் துணைகள் அளவிறந்தவை. தென்மராட்சி இலக்கிய அணியின் பெருந் தலைவராக இருந்து இளைஞர்களான எமக்கு அவர் காட்டும் பாதைகள் எம்மை நாளுக்கு நாள் வளர்த்து வருகிறது என்பதை எம்மை அறிந்த யாவரும் அறிவர்.

இதுவரை நான் சொல்லிவந்ததெல்லாம் பொதுவான அவர் பெருமைகள். என் வாழ்வில் என் வளர்ச்சியில் மிகமுக்கியமான ஒருவராக அவர் மிளிர்கிறார். என்னிடம் இன்று குறிப்பிடும் படியாக ஏதேனும் ஒருசில ஆற்றல்கள் இருக்குமாயின் அதனை உண்டாக்கி, துலங்கவைத்த வளர்த்தெடுத்த பெருமனிதர் அவர்தான். என் உயிர் உள்ளவரை என் உடம்பிலுள்ள அத்தனை அணுக்களும் அவருக்கு நன்றியுரைத்த வண்ணம் இருக்கும் என்பது சத்தியம். ஒரு பேச்சாளனாக நிமிர்வோடு மேடையில் இன்று என்னால் ஓரளவு வலம்வரமுடிகிறது என்றால் அதற்கான அத்திவாரம் அவர் இட்டது. மனத்துணிவோடு மரபு தமிழ்ப் பாட்டெழுத என்னால் ஓரளவு முடிகிறது என்றால் அதற்கான விதையை எனக்குள் விதைத்த கவி விவசாயி அவர்தான். நான் பேச்சு மேடையில் கன்னிப்பேச்சாளனாய் அரங்கேறிய சமயம் குருவணக்கப்பாடல் ஒன்றை உருவாக்கி பேச்சின் தொடக்கத்தில் சொல்லிவந்தேன்.

அந்தப்பாடல் சொல்லாமல் இன்றும் என்னால் பேச முடியாது. அந்தப்பாடலை சொன்னால் அதுவரை தடுமாறிய என் மனம் அத்தோடு அமைதிகொள்ளும். பேச்சு தானாய் ஊற்றெடுக்கும். துணிவு பிறக்கும். அப்படி என்ன அற்புதம் அந்தப்பாடலுக்கு. உங்கள் கேள்வி புரிகிறது. அது ஒன்றும் நால்வர் இயற்றிய நற்றமிழ்ப் பாடல் அல்ல. நாயினும் கடையனான நான் இயற்றிய அற்பப் பாடல்தான் அது. ஆனால் என்மனம் நிறைந்த மானசீகக் குருவான உயர்திரு.த.நாகேஸ்வரன் அவர்களை துதிக்கும் பாடல் என்பதால் என்னுள் அப்பாடல் துணிவூட்டி நிற்கிறது. எனக்கு அது வளமூட்டி வரம் தருகிறது. இதுதான் அந்தப்பாடல்

"இருந்தமிழை இன்னமுதாய் ஈந்தளித்துப் பேச
அருந்தமிழை அன்னையென அறிவித்த குருவே
பருவந்து படர் பொழுதும் பணியாத பண்பில் தமிழ்
விருந்து அளித்தாய் வாழ்த்தினேன் தாழ்.

எனக்கு தமிழ் தந்து தமிழுக்கு என்னைத்தந்த தமிழாசான் வசிட்டராய் இருந்து இன்றளவும் என் வாழ்விற்கு வரமருள்கிறார். இதுவரை நான் சொன்னவற்றோடு மட்டும் வசிட்டன் பணி நின்றுவிடவில்லை. தமிழுக்கு இராஜகுருவாய் விளங்கும் இமாலயப் புகழ் கொண்ட கம்பவாரிதி என்கின்ற விசுவாமித்திரன் திருவடி நிழலில் இன்று கற்றுவரும் எனக்கு அறிவைக் கொடுத்த துரோணனாய் அடிப்படையிட்ட இந்த வசிட்டன் இன்றும் கூட வேண்டியபோதெல்லாம் வேண்டுவன தந்து துணை நிற்கிறார். அவர் சேவைகள் மங்காப் புகழோடு தமிழ் உள்ளவரை தரணியில் நிலைக்கும். அவரது மணிவிழா நாளில் அவரை வணங்கி ஆசிபெற்று நிற்கிறேன்.

**கம்பநேசன் அ. வாசுதேவா**
**அமைப்பாளர்,**
**தென்மராட்சி இலக்கிய அணி,**
**சாவகச்சேரி.**



# பாரதம்



## குட்கா போதைப்பொருள் விவகாரம் முதலமைச்சர் பதவி விலக வேண்டும்

### மு.க.ஸ்டாலின் காட்டம்



(சென்னை)

குட்கா விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டதன் மூலம் முதலமைச்சர், அமைச்சர், பொலிஸ் டி.ஜி.பி. ஆகியோர் தங்களது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் கூறினார்.

தி.மு.க.. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் அண்ணா அறிவாலயத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது,

குட்கா போதைப் பொருட்களால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். கொடுமையான புற்று நோய் வருவதற்கு குட்கா போதைப்பொருட்களே காரணம் என்பது நாடறிந்த உண்மை. அதனால் தான் குட்கா விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஜெயலலிதா உயிருடன் இருந்தபோதும், இப்போது நடைபெறும் அ.தி.மு.க. ஆட்சியிலும்தடை செய்யப்பட்ட குட்கா பகிரங்கமாக நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மக்களின் உயிர்களை பலி வாங்கக்கூடிய குட்கா பொருட்களை விற்பனை செய்வதற்கு துணை நின்றவர், அமைச்சர் விஜயபாஸ்கர். அவர் மட்டுமல்ல. சட்டம்-ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் தலைமை பொறுப்பில் இருக்கும் டி.ஜி.பி. டி.கே. ராஜேந்திரன் மற்றும் முன்னாள் மாநகர ஆணையாளர், ஜார்ஜ் ஆகியோருக்கு தொடர்ந்து குட்கா விற்பனைக்கு மாமூல் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று ஆங்கில பத்திரிகையில் ஏற்கனவே ஆதாரங்களுடன் செய்திகள் வெளியாகின.

குட்கா விவகாரத்தில் தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறையின் மூலம் விசாரணை நடத்தினால் நிச்சயமாக உண்மைகள் வெளிவராது என்பதை தெளிவாக அறிந்து கொண்ட காரணத்தினால், தி.மு.க. சார்பில், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன் மூலமாக நாங்கள் நீதிமன்றத்தை நாடினோம். எங்களுடைய சார்பில் மூத்த சட்டத்தரணி வில்சன் வாதாடி, இன்றைக்கு ஒரு தெளிவான தீர்ப்பு வந்திருக்கிறது.

பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் இந்த குட்கா விற்பனை தொடர்பான வழக்கில் உயர் அதிகாரிகளும், அமைச்சர்களும் சம்பந்தப்பட்டு இருப்பதால், தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற இலஞ்ச ஒழிப்புத்துறை மூலமாக விசாரணை நடத்தினால் உண்மைகள் வெளிவராது என்பதால், இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

இந்த உத்தரவை தி.மு.க. சார்பில் நான் மனதார வரவேற்கிறேன். அதேநேரத்தில், இந்த வழக்கு சி.பி.ஐ. அமைப்பால் சுதந்திரமாக விசாரிக்கப்பட்டு, உண்மை நிலவரங்கள் வெளிவர வேண்டுமென்றால், அவர்கள் அனைவரும் முறையாக தண்டிக்கப்பட வேண்டுமென்றால், இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இருக்கின்ற அமைச்சர் விஜயபாஸ்கர், தமிழக பொலிஸ் டி.ஜி.பி. டி.கே. ராஜேந்திரன் ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும்.

அதுமட்டுமல்ல, பொலிஸ் டி.ஜி.பி.க்கும் இந்த வழக்கில் தொடர்புள்ளதாக வருமான வரித்துறை அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருந்த நிலையில், அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால், அவருக்கு காலநீட்டிப்பு கொடுத்ததோடு, பதவி உயர்வும் கொடுத்து, அவரை டி.ஜி.பி.யாக நியமித்து இருப்பதே முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தான். நியாயமாக, எடப்பாடி பழனிச்சாமி, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், அவரும் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் முதலில் இதையெல்லாம் கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுப்போம். அதுமட்டுமல்ல, தி.மு.க. ஆட்சி அமைந்ததும் லோக் ஆயுக்தா சட்டத்தையும் கொண்டு வரவிருக்கிறோம். எனவே, குட்கா விவகாரத்தில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து, சிறையில் அடைப்போம்.

போராடிக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள், 'எங்களை நேரில் வந்து சந்தித்து, அரசின் சார்பில் ஒரு உறுதி மொழி கொடுத்தால் போதும். ஏற்கனவே, 2016இல் ஜெயலிதா 110 விதியின் கீழ் உறுதிமொழி கொடுத்திருக்கிறார். அது காப்பாற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. இருந்தாலும், அதே போன்ற உறுதிமொழியை இப்போதுள்ள ஆட்சியாளர்களும், துறையின் அமைச்சரும் வந்து சொன்னால் போதும், நாங்கள் போராட்டத்தை கைவிடுவோம்', என்று சொல்லியுள்ளனர். எனவே, அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என நான் தொலை பேசியில் பேச தொடர்பு கொண்ட போது அமைச்சர் கிடைக்கவில்லை என்றாலும், ஊடகங்கள் மூலமாக நான் அமைச்சர் செங்கோட்டையனை மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், இவ்வாறு அவர் கூறினார். (7)

## மத்திய பிரதேச மாநில காங்கிரஸ் தலைவராக கமல்நாத் நியமனம்

(டில்லி)

மத்திய பிரதேச மாநில காங்கிரஸ் தலைவராக அக்கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான கமல்நாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டசபை தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், மத்திய பிரதேச மாநில காங்கிரஸ் தலைவராக கமல்நாத் நியமிக்கப்பட்டுள்ளார்.



காங்கிரஸ் மேலிடம் இதை அறிவித்துள்ளது. தேர்தல் பிரசாரக்குழு தலைவராக ஜோதிரத்யா சிந்தியா நியமிக்கப்பட்டுள்ளார்.

பாலா பச்சன், ராம்நிவாஸ் ராவத், இந்தூர் தொகுதி எம்.எல்.ஏ. ஜித்து பட்வாரி, சுரேந்திர சவுத்ரி ஆகியோர் செயல் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் கோவா மாநில காங்கிரஸ் தலைவராக இருந்த ஷந்தாராம் நாயக் நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக கிரிஷ் சோதன்கர் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (7)

## கல்லூரி மாணவிகள் மீதான பா

## நிர்மலாதேவியிடம் ஆள

## அதிகாரியின் விசாரணை

## பல உண்மைகள் கிடைத்



(மதுரை)

மாணவிகளுக்கு பாலியல் வலை விரித்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேராசிரியை நிர்மலாதேவியிடம் சந்தானம் நேற்று முன்தினம் விசாரணை நடத்தி முடித்துள்ளார்.

மாணவிகளுக்கு பாலியல் வலை விரித்த புகார் தொடர்பாக கைதான பேராசிரியை நிர்மலாதேவி தன்னை இந்த செயலுக்கு தூண்டியது காமராஜர் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் முருகன், ஆராய்ச்சி மாணவர் கருப்பசாமி என விசாரணையில் தெரிவித்ததாக கூறப்பட்டது.

இது குறித்து விசாரணை நடத்திய சி.பி.சி.ஐ.டி. பொலிஸார், பேராசிரியர் முருகனை கைது செய்தனர். பொலிஸா

## "ஜெ" மர்ம மரண விவகாரம் இரத்த மாதிரிகள் இல்லை

### அப்பலோ கைவிரிப்பு

(சென்னை)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் இரத்த மாதிரிகள் இல்லை என்று, சென்னை அப்பலோ மருத்துவமனை உயர்நீதிமன்றில் தெரிவித்துள்ளது.



இது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றபோதே மருத்துவமனை நிர்வாகம் இந்த பதிலை வழங்கியுள்ளது.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் இரத்த மாதிரிகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று, பெங்களூரைச் சேர்ந்த அம்ருதா என்பவர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது, தங்களிடம் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் இரத்த மாதிரிகள் இல்லை என்றும், அவசியம் இல்லாத காரணத்தினால் அதனை சேமித்து வைக்கவில்லை என்றும் அப்பலோ மருத்துவமனை சார்பில் வாதாடிய சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, இந்த விவகாரம் தொடர்பில் ஜோசப் என்பவர் மருத்துவமனைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். எனினும், மருத்துவமனை இரகசியங்களை வெளியிட முடியாது என அப்பலோ தரப்பு தெரிவித்திருந்த நிலையிலேயே, தற்போது இரத்த மாதிரிகள் இல்லை எனும் பதிலை நீதிமன்றில் வழங்கியுள்ளது.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில் டி.என்.ஏ. பரிசோதனை விபரங்களை நீதிமன்றம் கோரலாம் என எதிர்பார்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

## நிக்கராகுவாவில் அதிக வன்முறை மனிதவுரிமை ஆர்வலர்கள் கண்டனம்

நிக்கராகுவாவின் மனாகுவா (Managua) பகுதியில் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அதிகளவில் வன்முறைப் பிரயோகம் இடம்பெற்றுள்ளதாகக் கூறி, கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதவுரிமை ஆர்வலர்கள், முன்னாள் இராணுவ வீரரொருவர் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தமது கண்டனத்தை நேற்று முன் தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ளனர்.

மத்திய அமெரிக்காவிலுள்ள ஜனநாயகக் குடியரசு நாடாகிய நிக்கராகுவாவின் ஜனாதிபதியான டானியல் ஒர்டேகா, முன்னாள் இடது சாரிக்கொரில்லாத் தலைவராவார். இவர் பதவியைப் பொறுப்பேற்றதிலிருந்து நாட்டின் நிறுவனங்களை படிப்படியாக தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை சீர்திருத்துவதில் ஜனாதிபதி பின்வாங்கியதைத் தொடர்ந்து, ஆத்திரமடைந்த மக்கள் கடந்த ஒருவாரமாக மனாகுவா பகுதியில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப் படுத்துவதற்காக பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையின் போது, 25 பேர் உயிரிழந்ததுடன், 120 பேர் கைது செய்யப் பட்டனர். அத்துடன், பலர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் பலர் மாணவர்கள் ஆவர். இந்நிலையிலேயே, தமது கண்டனத் தைப் பலரும் வெளியிட்டுள் ளனர். (7)

# வெளிநாடு

## ...பாலியல் வலைவீச்சு ...ஒருநர் நியமித்த ...ணைகள் நிறைவு ...த்ததாக தகவல்

ரால் தேடப்பட்ட கருப்பசாமி, மதுரை குற்ற வியல் நீதிமன்றத்தில் சரண் அடைந்தார். அவரது நண்பர் தங்க பாண்டி யனை பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்தனர். இதற்கிடையே, மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிர்மலா தேவியிடம் ஆளுநர் நியமித்த விசாரணை அதிகாரி நேற்று முன்தினம் விசாரணை நடத்தினார். காலை முதல் மாலை வரை நடத்தப் பட்ட விசாரணையில் பல முக்கிய தகவல்கள் கிடைத் துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## இரண்டு துருவங்கள் இணைந்த உச்சி மாநாடு நேற்று ஆரம்பம்

(சியோல்)

கொரிய தீபகற்பத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வட கொரியா, தென் கொரியா தலைவர்கள் இடையிலான உச்சி மாநாடு நேற்று ஆரம்பமானது.

கொரியப்போர் 1953 ஆம் ஆண்டு முடிந்த பின்னரும் வட கொரியா, தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக பனிப்போர் காலமாக நீடித்து வந்தது. குறிப்பாக, வடகொரியா நடத்தி வந்த தொடர் அணு ஆயுத சோதனையானது, கடந்த இரு ஆண்டுகளாக மோதல்போக்கை அதிகரிக்கச் செய்தது.



இந்த நிலையில் சமீபத்தில் தென்கொரியாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள், புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அணு ஆயுத சோதனைகளால் தென்கொரியாவை மிரட்டி வந்த வட கொரியா இறங்கி வந்தது. தென்கொரியாவுடன் இணக்கமான போக்கை கடைப்பிடிக்கவும் முன்வந்ததுடன், அணு ஆயுத திட்டங்களை கைவிடுவதாக சமீபத்தில் அறிவித்தது. இரு நாடுகளின் உயர்மட்ட தூதுக்குழுவினர் சந்தித்து பேசினர். அதைத் தொடர்ந்து இரு நாடுகள் இடையேயான பகை விலகத் தொடங்கியது.

அதன்பின்னர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும், தென் கொரியாவின் ஜனாதிபதி மூன் ஜே இன்னும் உச்சி மாநாட்டில் சந்தித்துப் பேச முடிவானது. இதற்காக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தென்கொரியா சென்றார். அவருடன் 9 பேர் அடங்கிய உயர்மட்டக் குழுவினரும் அங்கு சென்றனர்.

இந்நிலையில் திட்டமிட்டபடி இரு தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாடு நேற்று ஆரம்பமானது. இரு நாடுகளின் எல்லையையொட்டி தென்கொரிய பகுதியில் உள்ள பன்முஞ்சோமில் நடைபெற்ற இந்த மாநாட்டின் ஆரம்பத்தில், இரு நாட்டு தலைவர்களும் ஒருவரையொருவர் கைகுலுக்கி பரஸ்பரம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டனர். இது இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவின் புதிய தொடக்கமாக அமைந்தது.

இந்த மாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானம், இரு நாடுகள் இடையேயான கொரியப் போரை முறைப்படி முடிவுக்கு கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொரிய போர் முடிந்த பின்னர் வடகொரிய ஜனாதிபதி ஒருவர், தென்கொரியாவுக்கு சென்றது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ராஜீவ் கொலை வழக்கு

## நளினியின் மேன்முறையீட்டை நிராகரித்தது உயர்நீதிமன்றம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் நளினி தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய உத்தரவிடக்கோரி தொடர்ந்த மேன்முறையீட்டு வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான நளினி, முருகன், பேரறிவாளன், ராபர்ட் பயஸ் உள்ளிட்ட 7 பேர் ஆயுள் தண்டனை கைதிகளாக கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளனர்.

இவர்களை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசு கடந்த 2014-ம் ஆண்டு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியது. இதை எதிர்த்து மத்திய அரசு தாக்கல் செய்த வழக்கு உச்ச நீதிமன்றில் நிலுவையில் உள்ளது.



இந்த நிலையில், 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை நிறைவு செய்தவர்களை முன்கூட்டியே விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணையின் அடிப்படையில், தன்னையும் முன்கூட்டியே விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றில் கடந்த 2015ஆம் ஆண்டு நளினி வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எம்.சத்யநாராயணன், 'உச்ச நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கில் பிறப்பிக்கப்படும் இறுதி தீர்ப்பின் அடிப்படையில், நளினியின் கோரிக்கையை தமிழக அரசு பரிசீலித்து சட்டப்படி முடிவு எடுக்க வேண்டும்' என்று உத்தரவிட்டார். இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றில் நளினி மேன்முறையீடு செய்தார்.

இவ்வழக்கின் வாதப் பிரதிவாதங்கள் முடிவடைந்த நிலையில் நீதிபதி சசிதரன் அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது. அப்போது, முன்கூட்டியே நளினியை விடுதலை செய்யும்படி உத்தரவிட முடியாது எனக் கூறிய நீதிபதிகள், நளினி தொடர்ந்த மேன்முறையீட்டு மனுவை நிராகரித்தனர்.

இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், உயர்நீதிமன்றம் இதில் தலையிட முடியாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். (7)

## இஸ்ரேலில் திடீர் வெள்ளப்பெருக்கு ஒன்பது பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(ஜெருசலேம்)


இஸ்ரேலில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி 9 பேர் பலியாகினர்.

நேற்று முன்தினம் ஜெருசலேமில் உள்ள 'டெட் சீ' அருகே நடந்த துயர சம்பவத்தில் 9 இஸ்ரேலிய இளைஞர்கள் பலியாகினர். அதில் மேலும் ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்.

மேலும் இந்த விபத்தில் சிக்கி 13 பேர் படு காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய மீட்பு மற்றும் ஜாகா மீட்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

25 பேர் கொண்ட குழுவில் ஒரு பகுதியினர் 'டேட் சீ' அருகே உள்ள நீரோடை அருகே வந்தபோது திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் 8 பெண்கள் மற்றும் ஒரு ஆண் நபர் பலியானதாக இஸ்ரேலிய செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் காணாமற் போன இளைஞர்களை தேடும் பணியில் இறப்பர் படகுகள், ஜீப்புகள் மற்றும் ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளதாகவும், மீட்புப்பணியில் குழுவினர் விரைந்து செயற்பட்டு வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.



இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இந்த சம்பவத்தை "கடுமையான பேரழிவு" என்று வேதனை தெரிவித்துள்ளார். (7)

## ஈரான் அணுவாயுத உடன்பாட்டில் இருந்து அமெரிக்கா விலகும்

### பிரான்ஸ் ஜனாதிபதி நம்பிக்கை

(வோஷிங்டன்)

ஈரான் அணு ஆயுத உடன்பாட்டில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விலகுவார் என்று அவரை சந்தித்துப் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா இருந்த காலத்தில், அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளுடன் ஈரான் ஒரு வரலாற்று சிறப்பு வாய்ந்த அணு ஆயுத தவிர்ப்பு உடன்பாடு செய்து கொண்டது.

2015ஆம் ஆண்டு எட்டப்பட்ட இந்த உடன்பாடு ஈரான் அணு ஆயுத திட்டங்களை நிறுத்தி வைக்கவும், அதற்கு பதிலாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் போட்டு உள்ள பொருளாதார தடைகளை படிப்படியாக விலக்கிக் கொள்ளவும் வழிவகை செய்துள்ளது.

இந்த உடன்பாட்டில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விலகுவார் என்று அவரை சந்தித்துப் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் வோஷிங்டனில் கூறுகையில், "ஈரான் அணு ஆயுத தவிர்ப்பு உடன்பாட்டில் இருந்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், உள்நாட்டு காரணங்களையொட்டி விலகி விடுவார் என்று நான் நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஈரானின் அணு ஆயுத



தவிர்ப்பு உடன்பாடு பைத்தியக்காரத்தனமானது என்று கருதுகிறார்.


அணு ஆயுத தவிர்ப்பு உடன்பாட்டில் இருந்து அமெரிக்கா விலகினால், மீண்டும் அணு ஆயுத திட்டங்களை தொடங்கி விடுவோம் என ஏற்கனவே ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுபற்றி கருத்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், "மத்திய கிழக்கு நாடுகளுக்கான புதிய கட்டமைப்பை உருவாக்க நான் முயற்சிப்பேன்.

ஆனால் அது நல்ல திடமான அத்திபாரத்துடன் அமைய வேண்டும்" என்று கூறியது குறிப்பிடத்தக்கது. (7)

# இலங்கையில் முதன்முறையாக
# 3D கமரா பயன்படுத்தி சத்திர சிகிச்சை





(கொழும்பு)

இலங்கையில் முதன் முறையாக 3D கமரா பயன்படுத்தப்பட்டு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தைரொய்ட் கட்டி ஒன்றை நீக்கும் சத்திர சிகிச்சை ஒன்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

தொண்டை, காது, மூக்கு தொடர்பான விசேட வைத்தியர் ரிஸ்னி சகாப் உட்பட வைத்திய குழுவினால் இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டாரவளை பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான பெண் ஒருவருக்கே இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாயில் கமரா ஒன்றை நுழைத்து, ஒரு வெட்டும் போடாமல் இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3D கமரா தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான தொழில்நுட்பத்தின் கீழ் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சத்திர சிகிச்சை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்னுக்குப் பின் முரணான சாட்சியம்!
# சந்திரகாந்தனின் வழக்கு ஒத்திவைப்பு

(ஏறாவூர்)

முன்னாள்கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட ஆறு பேர் மீதான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலை தொடர்பான ஐந்தாம் கட்ட வழக்கு விசாரணை, நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம். இஸ்ஸதீன் உத்தரவிட்டார்.



குறித்த கொலை வழக்கில் நேற்று முன்தினம் சந்தேக நபரான கஜன் மாமா மீதான விசாரணைகள் நடைபெற்ற நிலையில் நேற்று முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் மீதான விசாரணைகள் நடைபெற்றன.

இதன்போது, பிரதீப் மாஸ்டரின் சாட்சியத்தில் முன்னுக்கு பின் முரணான சாட்சியங்கள் தெரிவிக்கப்பட்டதன் காரணமாக, அவர் மீதான இரண்டாம் கட்ட விசாரணையை மேல் நீதிமன்ற நீதிபதி ஒத்திவைத்தார்.

மேலும், மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் தொகுப்பினை இந்த மாத இறுதியில் மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி மட்டக்களப்பு மரியாள் பேராலயத்தில் நடத்தப்பட்ட கிறிஸ்மஸ் ஆராதனையின் போது இனந்தெரியாத ஆயுததாரிகளினால் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இது தொடர்பில் 2015 ஆம் ஆண்டு முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரதிப்மாஸ்டர் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு விளக்கமறியல்



(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குள் அத்துமீறி நுழைய முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிக்கு மாணவன் உட்பட 10 பேரையும் மே முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்னால், பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் குறித்த பகுதியில் பெரும் பதற்றமான சூழல் நிலவியது.

ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட பல்கலைக்கழக பிக்கு சம்மேளனத்தினர், அத்துமீறி மானியங்கள் ஆணைக்குழுவிற்குள் நுழைய முற்பட்டுள்ளனர்.

அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக பொலிஸார், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தண்ணீரை வீசி தாக்குதல் நடத்தியதுடன், கண்ணீர்ப் புகைத் தாக்குதலும் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மானியங்கள் ஆணைக்குழுவிற்குள் அத்துமீறி நுழைய முற்பட்ட குற்றச்சாட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஒரு பிக்கு மாணவன் உட்பட 10 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### சொல்லாமல் செல்லும் பழக்கம்

நாம் எந்த நேரம் எங்கே இருப்போம்; இந்த நேரம் எங்கே இருக்கிறோம் என்பது நம்முடன் பணிபுரிபவர்களுக்கோ நம் குடும்பத்தினருக்கோ நம் நண்பர்களுக்கோ தெரிந்தால் அது நல்லது.

காரணம் நாம் எந்த நிமிடம் எங்கே தேவைப்படுவோம் என்பது நமக்கே தெரியாது.

இந்தத் தவறைச் செய்து கொண்டு நல்ல வாய்ப்புகளை இழந்தவர்கள் பலர்.

நமக்கு ஒரு நல்ல செய்தியோ ஒரு மரணச் செய்தியோ வேறு சில அவசரச் செய்தியோ சொல்ல வேண்டுமானால் நாம் எங்கே இருக்கிறோம் என்பது நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டாமா?

சிலர் வீடுகளில் போய் எங்கேம்மா அவரு? என்று கேட்டால் ஆந்தம்மாக்கள் ஆந்தை மாதிரி முழிக்கிறார்கள். இங்கே தானே இருந்தாரு ! என்று தேட ஆரம்பிக்கின்றார்கள். ஆசாமி வீட்டில் இருந்தால் தானே?

ஓர் அதிகாரியையோ ஒரு குமாஸ்தாவையோ ஒரு அலுவலகத்தில் தேடிப் போனால் அவரு எங்கே போனாரோ! யாருக்குத் தெரியும்? என்று உதட்டைப் பிதுக்குகின்றார்கள்.

நான் என் தாயார் மிகவும் உடல் நலமில்லாதிருந்த மூன்று வருடங்களில் போகிற இடங்களிலிருந்தெல்லாம் வீட்டிற்குத் தொலைபேசியில் விசாரிப்பது உண்டு. திரைப்படத்திற்குப் போனால் கூட அமரும் வரிசை எண், இருக்கை எண் ஆகியவற்றை என் மேசை மீது எழுதி வைத்து விட்டுச் சென்ற காலமும் உண்டு.

விடிகாலையில் ஏதாவது வெளிவேலை என்றால் என் மனைவி கண்ணில் படும்படியாக ஒருசீட்டை எழுதி வைத்து விடுவேன். இங்கு செல்கிறேன்; இந்த நேரம் வருவேன் என்று அதில் விபரம் இருக்கும்.

அடுத்த தெருவுக்குச் சென்றால் கூடச் சொல்லிவிடுவது உண்டு. காரணம் என்னைத் தேடி வருகிறவர்களுக்கும் கேட்டுப் போன் செய்கிறவர்களுக்கும் வீட்டிலிருந்து பொறுப்பான பதில் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான்.

பல பேர் இப்படிச் சொல்லிவிட்டுச் செல்வதை அடிமைத்தனம் என்றும் அப்படி ஒன்றும் அது முக்கியமான வேலையல்ல என்றும் கருதுகிறார்கள். சொல்லாமல் செல்லுகிறவர்களை இரண்டு ரகத்தில் அடக்கிவிடலாம்.

முதலாவது இவர்கள் இரகசிய நடவடிக்கைகளை உடையவர்கள். இரண்டாவது அவர்கள் பொறுப்பற்றவர்கள்.

இப்படி ஒரு பெயரைச் சம்பாதிப்பதை விட இந்தப் பெருமை தராத பட்டியலிலிருந்து நம் பெயரை உடனடியாக நீக்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வது உசிதம்.

லேனா தமிழ்வாணன்

# உலகில் மிகவும் ஆபத்தான "பிலெக் மென்டி" போதைப்பொருள் இலங்கையில் கண்டுபிடிப்பு! மூவர் கைது

(கொழும்பு)

உலகின் மிக ஆபத்தான போதைப்பொருள் ஒன்று இலங்கையில் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பிலெக் மென்டி எனப்படும் இந்த போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் உள்ளிட்ட மூன்று பேர், சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலங்கம பிரதேசத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிலெக் மென்டி போதைப் பொருள் இலங்கையில் கண்டுபிடித்த முதல் சந்தர்ப்பம் இதுவாக கருதப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர் அவுஸ்திரேலியாவை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

அவரிடம் இருந்து 82 கிராம் பிலெக் மென்டி போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 12 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய நாட்டவர் இந்த போதைப்பொருளை தனது ஆடைகளுக்குள் மறைத்து கொண்டு வந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட இலங்கையரிடம் இருந்து 240 கிராம் ஹஷிஸ் போதைப்பொருள் கண்டு பிடித்துள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## விழிப்புணர்வு வெறும் பேசுபொருளல்ல அதற்குச் செயலுருவத்தைக் கொடுக்க நாம் அயராது உழைக்கவும் வேண்டும்

### வேலணை தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

மலேரியா என்னும் உயிர் கொல்லி நோயிலிருந்து மக்களை பாதுகாப்போம் என்று வெறும் பேச்சளவில் மட்டும் கூறிக்கொண்டிருந்து விடாது அதற்கான செயலுருவையும் அர்ப்பணிப்புடன் நாம் ஒவ்வொருவரும் செய்து அதற்கான முன்னுதாரணமான பிரதேசமாக எமது பிரதேசத்தை உருவாக்கி காட்டுவோம் என வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் குறித்த பிரதேசத்தின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சுகாதார பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்வு வீதி நாடகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டிலிருந்து முற்றாக அழிக்கப்பட்ட நோயாக மலேரியா இருந்தாலும் தற்போது அது மீண்டும் நாட்டில் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் டெங்கு நுளம்பை போன்று மலேரியா நுளம்புகளும் வடமாகாணத்தில் பல பகுதிகளில் காணப்படுவதாக யாழ்.மாவட்ட சுகாதார தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. மலேரியா நுளம்பு மீண்டும் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பின்னர் இது யாழ்பபாணம், கிளிநொச்சி, வவுனியா உள்ளிட்ட வடமாகாண பிரதேசங்களில் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

எது எவ்வாறாக இருந்தாலும் அப்பாவி மனித உயிர்களுக்கு உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய இந்த நோயை நாம் மீண்டும் முற்றாக இல்லாதொழிப்பதற்கு உறுதியுடன் உழைக்க வேண்டும்.

கடந்த காலங்களில் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்டத்தில் குறிப்பாக எமது தீவகப்பகுதிகளின் சுகாதாரத்தில் அதிக அக்கறையுடன் பல்வேறு சுகாதார நலத்திட்டங்களையும் மருத்துவமனைகளின் அபிவிருத்திகளையும் மேற்கொண்டு கொடுத்து இப்பகுதிகளின் சுகாதார நலன்களை உறுதி செய்து தந்திருந்தார். அத்துடன் குறித்த துறைசார் பணியாளர்களாக பலருக்கு தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுத் தந்திருந்ததையும் நான் நினைவு கூர விரும்புகின்றேன்.

அந்தவகையில் இந்த மலேரியா நோய் தொடர்பான விழிப்புணர்வாக எமது பகுதியின் சுகாதாரப் பிரிவினரால் வீதி நாடகம் ஒன்று அரங்கேற்றப்பட்டுள்ளது. இந்த நாடாகம் பார்த்து மகிழ்ந்துவிட்டு போவதற்கான ஒன்றல்ல.

அதை ஆதாரமாக கொண்டு எமது பிரதேசத்தின் சுகாதாரத்தை செழுமையாக்கி மலேரியா நுளம்புகளை இல்லாது ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் எமது வேலணைப் பிரதேச பொது சன சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதனுடன் எமது பிரதேசத்தில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் தமது காணிகளையும் வீட்டின் சுற்றுப் புறங்களையும் சுத்தமாக வைத்திருப்பதனூடாக இந்நோயை ஒழிப்பதற்கு பங்களிப்பை வழங்க முடியும் என தெரிவித்த தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி நாம் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு இந்த மலேரியா நுளம்பை இல்லாதொழித்து மீண்டும் எமது நாட்டை மலேரியா அற்ற நாடாக மாற்றப் பாடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலர் பதவிக்கு நான் பொருத்தமற்றவன்-ருவான்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவிக்கு தான் பொருத்தமற்றவர் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தாம் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு அறிவித்துள்ளதாகக் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

என்னை விடவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கு கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவியை வழங்குமாறு கோரியுள்ளேன்.

இந்தப் பதவிக்காக வேறு பொருத்தமான ஓர் சிரேஷ்ட அமைச்சரை நியமிப்பதற்கு எவ்வித எதிர்ப்பையும் வெளியிடப் போவதில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் கட்சியில் எந்தவொரு பதவியையும் பெற்றுக்கொள்ள நான் திட்டமிடவில்லை. தற்பொழுது கட்சியை வலுப்படுத்த வேண்டியதே மிகவும் அவசியமானது.

இந்தப் பதவிக்கு பொருத்தமான கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் இருக்கின்றார் என தாம் கருதுவதாக ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். (இ-7)

## குடியிருப்புக்கள் இடிந்து விழுந்தமைக்கு புவியதிர்வு காரணமல்ல



(டிக்கோயா)

டிக்கோயா - தரவளை மேற்பிரிவு தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்புக்கள் இடிந்து விழுந்தமைக்கு புவியதிர்வு காரணமல்ல என்று உறுதிப்பட்டுள்ளது.

டிக்கோயா தரவளை மேற்பிரிவு தோட்டத்தில் 5 ஆம் இலக்க லயன் குடியிருப்புக்கள் பகுதியளவில் இடிந்து விழுந்தமையினால் இந்தத் தோட்ட மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் திகாம்பரத்தின் பணிப்புரைக்கேற்ப தோட்டத்துக்கு விஜயம் செய்த மத்திய மாகாணசபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன் நிலைமைகளை ஆராய்ந்ததோடு இடர் முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுகின்ற தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பதிகாரி போட்டியவுடன் தொடர்புகளை ஏற்படுத்தி சுவர்களின் வெடிப்புக்கான காரணத்தை கண்டறியுமாறு அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் நுவரெலியா மாவட்ட ஆய்வாளர் மாலக்க ஹெட்டியாராய்ச்சி தரவளை மேற்பிரிவு தோட்டத்துக்கு விஜயம் செய்து ஆய்வுகளை நடத்தினார்.

இதன்போது மண்சரிவு அபாயமோ நிலத்தில் வெடிப்புக்களோ கண்டறியப்படவில்லை. மேலும் இலங்கையில் எப்பாகத்திலும் எவ்விதமான நில நடுக்கமும் பதிவாகவில்லை என்ற தகவலை உரிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தெளிவுபடுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட தோட்டக் குடியிருப்புக்கள் 100 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த காரணத்தினாலேயே இடிந்து விழுந்துள்ளன எனவும் மாவட்ட இணைப்பதிகாரி தெரிவித்தார்.

இந் நிலையில் டிக்கோயா தோட்ட முகாமையாளரும் மத்திய மாகாணசபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது தொடர்ந்து வெடிப்புக்கள் ஏற்படக்கூடிய நிலையிலுள்ள வீடுகளைக் கொண்ட இரண்டு குடும்பங்களைத் தற்காலிக இருப்பிடமொன்றில் தங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன் குறிப்பிட்ட குடியிருப்பைச் சேர்ந்த 24 குடும்பங்களுக்கு வேறு இடமொன்றில் புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் பழனி திகாம்பரத்தின் ஆலோசனைக்கேற்ப முன்னெடுப்பதற்கும் இணக்கப்பாடு காணப்பட்டது. (இ-7)

# பன்மொழிப் புலமையாளர் சி.சிவசுப்பிரமணியம்

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்" என்றார் வள்ளுவர் பெருமான். அதாவது அனைவரும் மகிழும்படியாகக் கூடிப் பழகி இனி என்று காண்போம் என நினையுமாறு பிரிதலே கற்றறிந்த வரது தொழிலாகும். இதற்கு வரை விலக்கணம் கொடுக்க வல்ல வல்லாளர்களுள் ஆங்கில விரிவுரையாளர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் முதன்மையானவர். சாதாரண கற்கை நெறிகளில் இருந்து உயர் கற்கை நெறிகள் வரை அனைத்துமே மணித்தியாலய வரையறைக்குள் அடங்கி விட்ட இக்காலத்தில் இன்றும்கூட குரு சீடமரபினை ஒப்புயதாக மாணவர்கள் ஆசிரியருக்குப் பணிவிடை செய்கின்ற பாங்கோடு நான்கு தொடக்கம் ஐந்து மணித்தியாலயங்கள் ஆங்கில வகுப்பு இடம்பெறுகின்ற ஒரே இடம் புலோலியில் உள்ள சிவசுப்பிரமணியம் ஆசிரியரின் வீடுதான் என்று சொன்னால் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஆயிரத்துக்குப் அதிகமான மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தைப் போதித்து வருகின்றார். இன்று உலக அரங்கிலே பிரகாசித்துக் கொண்டு இருக்கும் வைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள், நீதவான்கள், சட்ட வல்லுநர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், அரச அதிகாரிகள், நிர்வாகிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பல துறையினரும் இவரிடம் கற்றவர்களாக இருப்பது அவர்களுடைய பாக்கியமாகவே அமைகின்றது.


1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் எட்டாம் திகதி சின்னத்தம்பி உமையாள் தம்பதியினரின் புதல்வனாகப் பிறந்த சிவசுப்பிரமணியம் புற்றளை சாரதாபீட வித்தியாசாலையிலும் ஹாட்லிக் கல்லூரியிலும் கற்றார். பின்னர் யாழ்ப்பாணம் கல்லூரியில் ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்ச் ஆகிய மொழிகளிலே தோற்றி லண்டன் இளங்கலை மாணிப் பட்டதாரி ஆனார்

தந்தையாரின் வழிகாட்டலிலே ஆங்கிலச் சிறுகதைகளை கற்பதனை வழக்கமாகக் கொண்டு சிறுபராயம் முதலே விடுதலறியா விருப்புடன் ஆங்கிலத்தைக் கற்றவர். யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் அருட்தந்தை டேவிட் அவர்களிடமும் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர்களான முனைவர் பீற்றர், முனைவர் மேரி ஜோர்ஜ், முனைவர் ஜோன், முனைவர் திருமதி றோஸ் டேவிட் ஆகியோரிடமும் ஆங்கில இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தன்னை மேலும் வளப்படுத்திக் கொண்டார்.

அத்தோடு நல்லை நாவலன் கோவை எனும் ஒப்பற்ற இலக்கியத்தினைத் தந்த தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் அவர்களிடம் பண்டிதர் வகுப்பில் மாணவனாக இணைந்து தமிழை ஐயம் திரிபற துறைபோகக் கற்றார். இதனாலே Julius Cisar, Romeo and Juliet, Mac Beth, Henry the Fourth முதலான ஆங்கில இலக்கியங்களைக் கற்றதோடு சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம், மணிமேகலை, கலித்தொகை, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, நாலடியார் முதலாக தமிழ் இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்.

இதனாலே இவருடைய ஆங்கில வகுப்பிலே இணைந்திருக்கிற மாணவர்கள் கண்ணகி, சீதை, திரௌபதி போன்ற மாதர் திலகங்களின் நிகழ்வுகளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் வாய்ப்பினைப் பெறுவர்.

புலோலி, யாழ்ப்பாணம், வன்னி என இடம்பெற்ற இவரது கல்விப்பணி புலம்பெயர்வின் காரணமாக சென்னையிலும் இடம்பெற்றது. சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறை தலைவராக இருந்த பேராசிரியர் கவிஞர் மேத்தா அவர்களோடு சென்னையில் தங்கியிருந்த போது சென்னை லயோலா கல்லூரி இவரை சிரேஷ்ட விரிவுரையாளராக உள்வாங்கியது. அங்கே ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்ச் ஆகிய மொழிகளைப் போதித்தார்.



லயோலா கல்லூரியின் ஆங்கிலத் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் சோமசுந்தரம் அடங்கலாகப் பல பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இவரின் விரைவுரைகளில் பங்குபற்றியமை இவரது ஆழ்ந்தகன்ற புலமைக்குச் சான்றாகும்.

இவரது இரண்டு புதல்விகளும் மிகச் சிறந்த ஆங்கிலப் புலமை மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். ஒருவர் யோகதர்சினி சிறுபராயத்திலேயே காலமாகி விட்டார். மற்றையவர் பிரியதர்சினி ஸ்ரீகணேஸ் அமெரிக்காவிலே சிறப்பு வைத்திய நிபுணராகக் கடமையாற்றுகின்றார்.

இவ்வாறு தனக்குப் பின் தக்க பலரை இத்துறையிலே உருவாக்கி தகைமையாளனாக ஒளி தந்து கொண்டிருக்கின்ற விரிவுரையாளர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு அகில இலங்கை இளங்கோ கழகத்தினர் நடத்துகின்ற புலமை ஒலி 2018 சிலப்பதிகார விழாவிலே "மொழி ஞாயிறு" எனும் உயர் விருதினை வழங்குவதில் பெருமை கொள்கின்றனர்.

**தென்புலோலியூர்**
**பரா.ரமேஸ்.**

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 33


பரமசாமி பஞ்சாட்சரம்

**தேவர்கள் பள்ளத்தாக்கு**

தேவர்கள் பள்ளத்தாக்கு என்ற இடம் சொர்க்கத் துவாராவிலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இந்த இடத்தை லாமா துவார் (Lama Duwar) என்று திபெத்தியர்கள் அழைக்கிறார்கள். இங்கு சிவனும் பார்வதியும் ஒன்றாக இருக்க சிவ கணங்கள் தங்கள் வேலைக்குக் காத்திருக்க பூதகணங்கள் சகல வாத்தியங்களை முழங்க சதாகாலமும் தேவர்கள் இவர்களைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்கிறார்களாம். அவர்கள் அருவமாக இருப்பதால் சாதாரண மானிடர்களுக்குத் தெரிவதில்லை.

இந்த இடத்தில் தேவர்கள் இருப்பதால் தேவர்கள் பள்ளத்தாக்கு என்று பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள். தேவர்கள் பூதகணங்கள், யக்ஷர்கள், நாகர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள், மகரிஷிகள் போன்றவர்கள் அருவமாக இருந்து கயிலாயநாதனின் கருணையை வேண்டி நிற்கின்றனராம்.

இதை எங்கள் வழிகாட்டுபவர் கூறினார். அவர்கள் நம் கண்ணுக்குப் புலப்படா விட்டாலும் இங்கு வருபவர்களுக்கு ஒரு அபூர்வமான உணர்வு தோன்றுகின்றது என்று எங்களுடன் வந்தோர் கூறினார்கள். தேவர்கள் பள்ளத்தாக்கில் கயிலாய நாதனின் முகத்தோற்றம் கண்டு கண்களில் நீர் சொரிய எல்லோரும்



வணங்கினார்கள்.

கயிலை மலையைச் சுற்றி இருக்கும் எட்டு மலைகளுக்கும் அட்ட திக்குப் பாலகர்களின் பெயர்கள் சூடப்பட்டிருக்கின்றன. தேவர்கள் பள்ளத்தாக்கில் பிரார்த்தனைக் கொடிகள் பறந்து கொண்டு இருப்பதைக் காணலாம். இங்கிருந்து பார்க்கும் போது கயிலாய மலையின் அடிப்பாகம் செங்குத்தாக இருக்கின்றது. தேவர்கள் பள்ளத்தாக்கில் எந்த நேரமும் மலையிலிருந்து நீர் சுரந்தபடியே இருக்கின்றது. இந்த இடத்தில் தண்ணீருக்குப் பஞ்சமில்லை.

இந்தப் புனித சுத்தமான நீரை எடுத்து எவரும் அருந்தக் கூடியதாக உள்ளது. நாங்கள் தேவர்கள் பள்ளத்தாக்கைத் தாண்டி வரும் போது கிரிவல வாசல் தெரிந்தது. பேருந்திற்குள் பெரிய கலகலப்புச் சத்தம் கேட்டது. எல்லோரும் கிரிவலம் ஆரம்பிக்கப் போகின்றோம் என்ற மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள்.

**ஏழாம் நாள் 10.08.14**
**கிரிவல வாசல் (4590 மீ.)**

ஞாயிற்றுக்கிழமை அன்று நாம் கயிலாச மலைக் கிரிவல வாசலை அடைந்தோம். நாங்கள் வந்த பேருந்து எங்களை இந்த மலை அடிவாரத்தில் இறக்கிவிட்ட பின் தர்ச்சன் சென்றுவிட்டது. 'ஜில்' என்ற காற்று அத்தனை உடைகளையும் ஊடுருவிச் சென்று மெய் சிலிர்க்க வைத்த நிலையில் நாங்கள் நின்று காட்சிகளைப் பார்த்தபடி படங்களை எடுத்தோம்.

நாங்கள் இதுவரை எக்கோரெக் பிரதிநிதிகளின் கண்காணிப்பில் இருந்தோம். கிரிவலம் வரும் போது தனித்தனியே செல்கின்றபடியால் எக்கோரெக்கின் கண்காணிப்புடன் நாம் செல்ல முடியாது. ஆகவே தனிப்பட்ட வழிகாட்டுபவரையும் குதிரையையும் யாத்திரிகர்கள் ஒவ்வொருவரும் ஒழுங்கு செய்தால் நல்லது என்று எங்களுக்கு ஆரம்பத்தில் சொல்லியிருந்தார்கள்.

நடைபாதையில் ஒருவருக்கு ஏதேனும் சுகவீனம் ஏற்பட்டாலோ கனத்த மழை, கறுப்பு முகில், பயங்கர புயல் காற்று போன்ற இயற்கை அனர்த்தங்களின் அறிகுறிகள் காணப்பட்டாலோ எமது உதவியாளர் எப்படியும் குதிரையில் ஏற்றிக் கொண்டு வாகனத்திற்கோ பாதுகாப்பான இடத்திற்கோ அல்லது 'எக்கோரெக்' அதிகாரிகளிடமோ எங்களைச் சேர்த்து விடுவார்கள் என்பதையும் 'எக்கோரெக்' பிரதிநிதிகள் தெரிவித்திருந்தார்கள்.

ஆகவே நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு குதிரைக்கும் ஒரு தனிப்பட்ட உதவியாளருக்கும் ஒழுங்கு செய்திருந்தோம். அதன் பிரகாரம் 'எக்கோ ரெக்' பிரதிநிதிகளும் மலைவாழ் மக்களும் குதிரைகளைச் சீட்டுகள் குலுக்கி குலுக்கி அதன் மூலம் எங்களுக்குப் பிரித்துக் கொடுத்தார்கள். அத்துடன் வழிகாட்டுபவர்களையும் ஒழுங்கு செய்தனர்.

(தொடரும்)

# நாவாந்துறை தூய நீக்கிலார் ஆலய திருவிழா

## ஆலய வரலாறு

போத்துக்கல் நாட்டவர்கள் கீழைத் தேசங்களுக்கு வியாபார நோக்குடனும் கிறிஸ்தவ மதத்தை பரப்புவதற்காகவும் கடல் மார்க்கமாக வந்து இறங்கிய கடல் பரப்புத்தான் ''நாவாயூர்'' என அழைக்கப்பட்டு நாவாந்துறை என்று அழைக்கப்படும் எம் கிராமம் ஆகும். இவ்வாறு போத்துக்கீசர் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக தீவகப் பகுதியிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வந்து நாவாந்துறையில் குடியமர்த்தினர்.

மதப்பரப்பலையே குறிக்கோளாகக் கொண்ட போத்துக்கீசர் குடியேற்றப்பட்டவர்களை மதம் மாற்றி, அவர்களின் சமய வழி பாடுகளுக்காக ஓர் ஆலயத்தையும் அமைத்துக் கொடுத்தனர். கடலின் பாதுகாவலரான தூய நீக்கிலார் என்னும் புனிதரின் பெயரில் இவ்வாலயம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஓலைக் கொட்டிலாக அமைக்கப்பட்ட ஆலயம் பின்னர் முருகைக் கற்களாலும், செங்கற்களாலும் கட்டப்பட்டது. தற்போது இட வசதியைக் கருத்தில் கொண்டு புது மெருகோடு கட்டப்பட்டுள்ளமை சிறப்பிடம் பெறுகிறது.

## தூயநீக்கிலாரின் வரலாறு

3 ஆம் நூற்றாண்டிலே ஆசியாக் கண்டத்தில் அமைந்திருந்த பத்தார் என்ற நகரிலே எப்பிபானஸ்-யுவான்னா என்ற செல்வந்தத் தம்பதியினர் வாழ்ந்தனர். இவர்களுக்கு பிள்ளைச் செல்வம் கிடைக்காமையால் இறைவனிடம் வேண்டினர். கடவுளின் அருளால் அவர்களுக்கு ஓர் ஆன்ன குழந்தை பிறந்தது.

அக் குழந்தைக்கு ''பிரசையின் வெற்றி'' என்ற பொருள் கொண்ட நீக்கிலஸ் என்னும் பெயரை சூட்டி மகிழ்ந்தனர்.சிறுவயதிலேயே கல்வியிலும் சமய சம்பிரதாயங்களுடனும் ஏழைகளுக்கு உதவி செய்து ஒறுத்தல் வாழ்க்கை வாழ்ந்துள்ளார்.

இவர்தன் இளம் வயதிலேயே பெற்ற வரை இழந்து மாமன் முறையானவருடன் வாழ்ந்தார். தனது செல்வமெல்லாம் வறுமையுற்றோருக்குக் கொடுத்தார்.



இளவயதிலேயே பத்தார் நகரத்து தூய சிமியோன் குரு மடத்தில் அவரது மாமனால் சேர்க்கப்பட்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் ''மீரா'' என்ற நகரின் ஆயர் காலமாக இறைவனின் திருவாக்குப்படி தூய நீக்கிலாரை ஆயராக அபிஷேகம் செய்தனர்.

அக் காலத்தில் ஆட்சி செய்த தியோக்கிளேசியன் பேரரசனால் ஆரம்பிக்கப்பட்டு வழி நடத்தப்பட்ட வேதகலாபனையால் தூய நீக்கிலார் நாடுகடத்தப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார். மாமிச ஆசாரத்தை விலக்கி, ஒருவேளை உணவையே உட்கொண்டார். தூய நீக்கிலார் தாம் வாழ்ந்த காலத்தில் பல அற்புதங்களை செய்து வந்தார் என அறியக் கிடக்கிறது.

தூர தேசங்களிலிருந்து தம்மை மன்றாடியவர்களுக்கும் அற்புதங்கள் பல செய்துள்ளார். நோயாளிகளைக் குணமாக்குவதிலும் வல்லவராகவிருந்தார்.

அவருடைய நகரத்திலிருந்த ஒருவன் வறுமையினால் மூன்று பெண் பிள்ளைகளையும் விபசாரத்திலீடுபட முற்படுத்தியதை அறிந்த தூய நீக்கிலார் அவனது செயலைத் தடுக்க யாரும் அறியாமல் அவன் வீட்டில் பணத்தை வைத்து வந்தார்.

அவன் அப் பணத்தை எடுத்து தன் மூன்று பிள்ளைகளுக்கும் நல்வாழ்வு அளித்து அவர்கள் வாழ்வு சிறந்ததாக நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

புனிதர் திருயாத்திரைக்காக கடல் பிரயாணம் செய்த போது புயல் வீசப் போகிறது எனக் கப்பல் தலைவனுக்கு கூறி அனர்த்தத்திலிருந்து காப்பாற்றினார்.

கொடியவன் ஒருவன் மூன்று பிள்ளைகளைக் கொன்று அவர்கள் உடலைத் துண்டு துண்டாக வெட்டி மற்ற மாமிசங்களுடன் விற்பனைக்கு வைத்திருந்தான். இதை அறிந்த புனிதர் அங்கு சென்று ஆசீர்வதித்து மூன்று பிள்ளைகளையும் உயிர்ப்பித்தார்.

இது தவிர அந்நாட்டு அரசன் அரண்மனை ஊழியர்கள் மூவரை அநியாய குற்றம் சுமத்தி அவர்களுக்கு தண்டனை வழங்க முற்பட்ட வேளை தூய நீக்கிலார் அங்கு சென்று அவர்கள் குற்றமற்றவர்கள் என வாதித்து விடுதலைக்கு வழிவகுத்தார்.

## ஆலயத் திருவிழா

2018 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை புனிதரின் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. 19.4.2018 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய புனிதரின் திருவிழா நாளாந்த மாலை ஆராதனைகளுடன் நடைபெற்று 27 ஆம் திகதி மாலை நற்கருணைப் பெருவிழாவுடன் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருவிழா திருப்பலி யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெறும். புனிதரின் ஆசீர்பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

மரிசலீன் மரியதாஸ்
நாவாந்துறை

---

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1396

Search for people, places and things — Nagendram Home

### கஸ்தூரி

காதலுக்குப் பெற்றோர் சம்மதிக்கவில்லை என்ற பிரச்சினையே எனக்கு எழவில்லை. காரணம்...



காதலியே சம்மதிக்கவில்லையே!

### சாரங்கன்

நேர்ஸ் எனக்கு காய்ச்சல் விட்டு விட்டு அடிக்குது



நேர்ஸ்: விடாம அடிக்கிறதுக்கு அதென்ன உங்க சம்சாரமா, காய்ச்சல்னா அப்படித்தான் அடிக்கும்

### சந்தோஷ்

ஏண்ணே நாதஸ்ஸ அடிச்சீங்க...?



நிலா பூமிக்குப் பக்கத்துல வந்ததுல. அன்னிக்கு ரொக்கெட் விட்டிருந்தா ஈசல் செலவு மிச்சமாகியிருக்கும்னு சொல்றான்பா...

### அச்சுதன்

ஏதாவது தேவை என்று வரும் போது மட்டும் உன்னுடைய நினைவு யாருக்காவது வருகிறது என்றால்



உன்னைவிட இளிச்சவாயன் யாரும் இல்லை என அர்த்தம்!

### தாட்சா



படிப்பு அறிவு தரும்
அறிவு பணம் தரும்
பணம் திமிரை தரும்
திமிரு ஆணவம் தரும்
ஆணவம் அழிவைத் தரும்
அதனால் படிப்பை எதிர்ப்போம்
ரெஸ்ட் எடுப்போம்

### கமலன்

சுப்பர் மார்க்கெட்ல ஒரு பெண் அவங்க கணவனைக் கேட்டுக் கேட்டு சாமான் வாங்குது



கணவன் மேல மரியாதையா அல்லது சமைக்கிற ஆளுக்குத்தானே தெரியும்னு கேக்குதானே தெரியல

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 3 வருட உத்தரவாதக் கல்வி பரீட்சார்த்த திட்டம் தொழிற்றுறைப்பிரிவு மாணவருக்கான அனுமதி

13 வருட உத்தரவாதக் கல்விச்செயற்றிட்டத்தில் தொழிற்றுறைப் பிரிவானது வடக்கு மாகாணத்தில் முதற்கட்டத்தில் 2017 ஆம் ஆண்டில் 5 பாடசாலைகளிலும், இரண்டாம் கட்டத்தில் 2018 ஆம் ஆண்டு 17 பாடசாலைகளிலுமாக 22 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

க.பொ.த உயர்தரத்தில் உள்ள பிரிவுகளில் அனுமதி பெற முடியாது இடைவிலகை வேண்டி ஏற்படும் மாணவர்களுக்கான விசேட தொழிற்றுறைப்பிரிவு (Vocational Stream) ஆக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டு வருடகாலம் (6 தவணைகள்) கொண்ட க.பொ.த.உயர்தர பிரிவு போன்ற கற்கைநெறியே இதுவாகும். 2017 டிசெம்பர் அல்லது அதற்கு முந்திய வருடங்களில் க.பொ.த.சா/த பரீட்சைக்கு தோற்றி க.பொ.த. உயர்தரத்தில் அனுமதி பெற முடியாத மாணவர்கள் இப்பிரிவில் 10.05.2018 வரை அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத் தொழிற்றுறைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் விபரங்கள் வருமாறு.

1) யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

2) யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

3) யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

4) யா/வேலணை மத்திய கல்லூரி

5) யா/மட்டுவில் மகா வித்தியாலயம்

6) யா/நெல்லியடி மத்திய கல்லூரி

7) யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

8) கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

9) கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்

10) கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்

11) முல்/வித்தியானந்தா கல்லூரி

12) முல்/விஸ்வமடு மகா வித்தியாலயம்

13) முல்/சம்பத் நுவர மகா வித்தியாலயம்

14) முல்/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலை

15) முல்/மல்லாவி மத்திய கல்லூரி

16) மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

17) மன்/வட்டக் கண்டல் அ.த.க.வி.

18) மன்/அல் அஸ்ஹர் மகா வித்தியாலயம்

19) மன்/பரிகரிகண்டல் அ.த.க.வி.

20) வவு/காமினி மகா வித்தியாலயம்

21) வவு/ ஒலுமடு மகா வித்தியாலயம்

22) வவு/ செட்டிகுளம் மகா வித்தியாலயம்

இம் மாணவர்களுக்கான வகுப்பறைத் தொகுதிகள் திறன் வகுப்பறைகளாக தாபிக்கப்பட்டு வருகின்றன(smart class room). உயர்வேக இணைய இணைப்புடன் கூடிய கணனிக்கூடங்களும் மாணவரின் களப்பயிற்சி வேலைகளுக்கான மடிக்கணனிகளும் இப்பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தொழிற்றுறைப் பிரிவினுடைய (Vocational Stream) முதலாம் தவணையானது ஒன்பது (09) பொதுப் பாடங்களைக் கொண்டிருக்கும். இவை தொழிற் பயிற்சிக்கும், தொழில் முயற்சியாண்மைக்குமான அடிப்படைப் பாடங்களாக இருக்கும். இவை செயற்பாட்டுக் கூட்டுக் கற்றல் (Activity Based Collaborative Learning) முறையில் நடத்தப்படும். அனைத்துப் பிள்ளைகளும் இப்பாடங்களை பின்பற்றுவார்கள்.

1. தாய்மொழி (சிங்களம்/ தமிழ்)

2. வணிக ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன்கள்

3. அழகியல் ஆர்வம்

4. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்கள்

5. குடியியல் தொடர்பான திறன்கள்

6. சமூக நலனுக்கான சுகாதார மற்றும் வாழ்க்கைத் திறன்கள்

7. சுயதொழிலாண்மைத் திறன்கள்

8. விளையாட்டு மற்றும் ஏனைய பாடச் செயற்பாடுகள்

9. வாழ்க்கை வழிகாட்டி வேலைத்திட்டங்கள்

இரண்டாம் தவணையிலிருந்து பிரத்தியேகமான பிரயோகப் பாடங்களை மாணவர்கள் பின்பற்ற வேண்டியிருக்கும். இதற்காக இக் கல்வி முறைமையில் 26 புதிய பிரயோகப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு (Child Psychology & Care)

2. சுகாதாரமும் சமூகப் பாதுகாப்பும் (Health & Social Care)

3. நீர் வளங்கல் கல்வி (Aquatic Resource Studies)

4. உடற்கல்வியும் விளையாட்டும் (Physical Education & Sports)

5. கலை நிகழ்ச்சி (Performing Arts)

6. மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி (Electrical Electronic Studies)

7. கலை மற்றும் கைவினை (Arts and Crafts)

8. உள்ளக வடிவமைப்பு (Interior Designing)

9. ஃபேஷன் வடிவமைப்பு (Fashion Designing)

10. கிராபிக் வடிவமைப்பு/ கணனி மூல வடிவமைப்பு (Graphic Designing)

11. கலை மற்றும் கைவினை (Art & Designing)

12. தரை அழகு வடிவமைப்பு (Landscaping)

13. தோட்டக்கலை பயிற்றுவிப்புக் கலை (Applied Horticulture Studies)

14. கால்நடை உற்பத்திக் கலை (Livestock Product Studies)

15. சுற்றாடல் கல்வி (Environmental Studies)

16. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் (Tourism & Hospitality)

17. இணையத்தள வடிவமைப்பு (Web Designing)

18. மென்பொருள் அபிவிருத்தி (Software Development)

19. அலுமினியக் கட்டுமானக் கல்வி (Aluminum Fabrication Studies)

20. உலோக கட்டுமானக் கல்வி (Metal Fabrication Studies)

21. ஜவுளி மற்றும் ஆடைகள் கல்வி (Textile & Apparel Studies)

22. நிகழ்ச்சி முகாமைத்துவம் (Event Management)

23. மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி (Automobile Studies)

24. கட்டுமானத் தொழில்நுட்பக் கல்வி (Construction Studies)

25. பெருந்தோட்ட உற்பத்திக் கலை (Plantation Product Studies)

26. உணவு பதப்படுத்தல் கல்வி (Food Processing Studies)

மாணவர்கள் இவற்றிலிருந்து விரும்பிய மூன்று (3) பாடங்களைத் தெரிவு செய்து தவணை 2, தவணை 3 இல் பின்பற்றுவார்கள். இப்பாடங்கள் சொற்ப அளவிலான அறிமுறைகளாவும் (Theory), கூடியளவிலான பிரயோகப் பயிற்சிகளாகவும் (Practical Skills), பாடசாலைக்கு வெளியிலான தொழில் நிறுவனப் பயிற்சிகளாகவும் (Industrial Training) நடைமுறைப்படுத்தப்படும். இவற்றுடன் தரம் 12 முடிவடையும்.


தரம் 12 இல் மாணவர்கள் பின்பற்றிய மூன்று பிரயோகப் பாடங்களிலிருந்து ஏதாவது ஒரு (01) பாடத்தை மாணவர்கள் தரம் 13 இன் முதலாம் (01) இரண்டாம் (02) தவணைகளில் பின்பற்றுவார்கள். இப்பாடமும் சொற்ப அளவிலான அறிமுறைகளாகவும் (Theory), கூடியளவிலான பிரயோகப் பயிற்சிகளாகவும் (Practical Skills), பாடசாலைக்கு வெளியிலான தொழில் நிறுவனப் பயிற்சிகளாகவும் (Industrial Training) நடைமுறைப்படுத்தப்படும். தரம் 13 இனுடைய மூன்றாம் தவணையானது மாணவருக்கு அவருடைய பாடம் சார்ந்த பிரயோக ஒப்படை ஒன்று வழங்கப்பட்டு அதனை மேற்கொள்வதற்கான காலமாக இருக்கும்.

கற்கை நெறிக்காலம் முழுதும் மாணவரின் செய்முறைத் திறன் தொடர் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும். இப் புள்ளிகள் கற்கை நெறியின் இறுதியில் இடம்பெறும் சிறு அறிமுறை மற்றும் செய்முறைப் பரீட்சையின் புள்ளிகளுடன் சேர்க்கப்பட்டு பெறுபேறுகள் வழங்கப்படும்.

இதனடிப்படையில் கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தால் "தொழிற் கல்வியில் உயர்சான்றிதழ்" (Advanced Certificate in Vocational Education) எனும் உயரிய அங்கீகாரமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

அத்துடன் மாணவர் பின்பற்றிய பிரயோகப்பாடம் சார்ந்த தேசிய தொழிற்றகைமை மட்டம் IV (NVQ IV) பெற்றுக் கொள்வதற்கான வசதிகளும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

கற்கைக் காலத்தில் துறை சார்ந்த தொழிற்சாலைத் தரிசிப்புக்கள், பயிற்சிக்களப் பயணங்கள், கண்காட்சிகள், போட்டிகள் என்பன திட்டமிடப்பட்டுள்ளன. இக்கற்கை நெறியின் பின்னர் மாணவர்கள் நேரடியாக தொழிலுலகில் குறிப்பிடத்தக்க திறனுடன் நுழைய முடியும். இல்லாவிட்டால் தொழில்நுட்பக் கல்லூரிகள், இலங்கை வாழ்க்கைத் தொழில் பல்கலைக் கழகம் எனும் பாதையில் தேசிய தொழிற்றகைமை மட்டம் V,VI ஊடாக பட்டதாரியாகவும் முடியும். அனைத்து மாணவரினதும் 13 வருட கல்வியை உறுதிப்படுத்துகின்றதாகவும், உயர் தொழிற்றிறன்களையும், நல்லாளுமைகளையும் வளர்ப்பதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ள இவ்வாய்ப்பினை அனைத்து மாணவரும் பெற்றுப் பயனடைய அனைவரும் ஆவன செய்வோம்.




து.லெனின் அறிவழகன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தொழில்நுட்பக் கல்வி)
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

## வில்லூன்றியில் சித்திரா பூரணை

(யாழ்ப்பாணம்)

சித்திரா பூரணை நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை வில்லூன்றில் சிறப்பாக நடைபெறவுள்ளது. வில்லூன்றி விநாயகராலயத்தில் பாலஸ்தாபனம் இடம்பெற்று புனருத்தாரண வேலைகள் நடைபெறுவதால் விநாயகப் பெருமான் தீர்த்தவாரி கொள்ள வில்லூன்றி புனித தீர்த்தத்திற்கு எழுந்தருளமாட்டார் எனவும் விநாயகராலயத்தில் காலை ஏழு மணிக்கு அபிஷேக ஆராதனைகள், விசேட பூசைகள் நடைபெற்று ஒன்பது மணிக்கு சித்திரபுத்திர நாயனார் கதைப்படிப்பு, சித்திரைக் கஞ்சி ஆகிய நிகழ்வுகள் வழமைபோல் நடைபெறும் எனவும் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ)

## மஹாயக்ஞ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மருதனார்மட ஸ்ரீசுந்தரஆஞ்சிநேயர்கோயில் சுந்தரகாண்ட மஹா யக்ஞ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து 5 நாட்கள் இடம்பெறும். (இ)

## இந்திரவிழா

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்த உற்வத்தை முன்னிட்டு வல்வை மக்களால் நடத்தப்படும் வல்லையின் இந்திரவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். வல்வை மக்கள் சார்பில் வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புக் குழுவினரால் நடத்தப்படும். இந் நிகழ்வில் வரலாற்றில் முதல் முதலாக 100 அடிக்கு மேற்பட்ட புகைக்கூடு உட்பட பல புகைக்கூடுகள் வான் நோக்கி ஏவப்படும். (இ)

## தென்னாசிய கவிதைகள் நூல்களின் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ''சங்களை'' சமூக செயற்பாட்டாளர்கள் நடத்தும் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் மொழி பெயர்த்த சுதந்திரம் தென்னாசியக் கவிதைகள் நூல்களின் அறிமுகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய கந்தையா அரங்கில் இலக்கிய மொழி பெயர்ப்பாளர் தமிழ் ஆங்கில எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் மே.இந்திரபாலா, சிந்மய பாரதி வித்தியாலய அதிபர் ம.மகேந்திரன், ஓய்வு நிலை கணித ஆசிரியர் வே.தம்பிப்பிள்ளை, ஓய்வு நிலை தமிழ் ஆசிரியர் க.ஈஸ்வரநாதபிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# சர்வதேச பொலிஸார் ஊடாக அர்ஜுன் மகேந்திரனை கைது செய்ய முடியும்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரத்தில் பிரதான சந்தேக நபரான முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை கைது செய்ய சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சர்வதேச பொலிஸில் அங்கம் வகிக்கும் 192 நாடுகள் ஊடாக அவரைக் கைது செய்ய முடியும் என சட்டமா அதிபர் சார்பில் நேற்று முன்தினம் கோட்டை நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த 192 நாடுகளில் ஏதேனும் ஒரு நாட்டில் அர்ஜுன் மகேந்திரன் சிவப்பு அறிவித்தல் பிரகாரம் கைது செய்யப்பட்டால் அவரை உடனடியாக கைதிகள் பரிமாற்றம் ஊடாக நாட்டுக்கு அழைத்து வர தேவையான ஆவணங்களை தயார் செய்ய, கோட்டை நீதிமன்றில் உள்ள பிணை முறி மோசடி வழக்கின் கோவையையும் நேற்று முன்தினம் நீதவானின் உறுதிப்படுத்தலுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவு பெற்றுக்கொண்டது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது மன்றில் விசாரணையாளர்கள் சார்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் பியசேன அம்பாவல, குற்றப் புலனாய்வுப் பிரிவின் மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பிலான விசாரணை அதிகாரியுமான பெண் பொலிஸ் பரிசோதகர் தமலதா சஞ்ஜீவனீ உப பொலிஸ் பரிசோதகர் விமல் ஜயவீர ஆகியோருடன் மன்றில் ஆஜரான சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட சட்டவாதி லக்மினி ஹிரியாகம மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர ஆகியோர் சார்பில் மன்றில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர, முன்வைத்த கோரிக்கையை கருத்தில் கொண்டு, அர்ஜுன் மகேந்திரனை கைதின் பின்னர் நாட்டுக்கு அழைத்து வரும் நோக்குடன் ஆவணங்களைத் தயார் செய்ய நீதவானினால் சி.ஐ.டிக்கு கோட்டை நீதிமன்றில் உள்ள பிணை முறி மோசடி வழக்கின் கோவைகளின் உண்மைப் பிரதிகள் கையளிக்கப்பட்டன.

இதனைவிட பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு முன்னெடுத்த விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்தி பரிமாற்றங்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்ற உத்தரவூடாக கோரிய பல தகவல்களை நேற்று முன்தினம் வரை தொலைபேசி சேவை வழங்குநர் நிறுவனங்கள் வழங்கத் தவறியுள்ளமையையும் அதற்காக அந் நிறுவனங்கள் பல்வேறு காரணங்களை முன்வைத்துள்ளமையையும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர வெளிப்படுத்தினார்.

வழக்கானது நேற்று முன்தினம் ஆரம்பித்தபோது தற்போது கைது செய்யப்பட்டுள்ள 2 ஆம் சந்தேக நபர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் நான்காம் சந்தேக நபரான கசுன் பலிசேன ஆகியோர் சிறைக் காவலர்கள் ஊடாக மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் சார்பில் மன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸ மன்றில் ஆஜரானார். அவர் முதலில் இந்த வழக்கின் 3 ஆம் சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் சார்பில் குற்றவியல் சட்டத்தின் 261 ஆவது உறுப்புரைக்கு அமைய அந் நிறுவனத்தில் இருந்து ஒரு பிரதிநிதி ஆஜராக வேண்டும் என்பதற்கமைய, அது நிறுவனம் தொடர்பில் இரண்டாம் சந்தேக நபர் அர்ஜுன் அலோசியஸ் ஆஜராக அனுமதிக்க வேண்டும் எனக் கோரி வாதிட்டார். இதற்கான சட்ட நடைமுறைகள் தொடர்பில் அவர் கருத்துக்களை முன்வைத்த நிலையில் அது தொடர்பில் எழுத்து மூலம் மன்றைக் கோர நீதவான் அவருக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

இந் நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மேலதிக அறிக்கையை மையப்படுத்தி, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப் பிரியா ஜயசுந்தர மன்றில் கருத்துக்களைப் பதிவு செய்கையில்

"கடந்த மார்ச் மாதம் நாம் நீதிமன்றிடம் இருந்து பெற்றுக் கொண்ட உத்தரவுகளுக்கு அமைய C 350 எனும் ஆவணத்திலுள்ள தொலைபேசி இலக்கங்கள், அதிலிருந்து உள் வந்த, வெளிச் சென்ற அழைப்புக்கள், குறுஞ் செய்திகள் தொடர்பில் பகுப்பாய்வு அறிக்கையை நாம் தொலைபேசி சேவை வழக்குநர் நிறுவனங்களிடம் இருந்து கோரியிருந்தோம்.

அதன்படி டெலிகொம் நிறுவனம் சில தொலைபேசி இலக்கங்கள் தொடர்பில் அறிக்கையை வழங்கியுள்ளது. எனினும் பல இலக்கங்கள் தொடர்பிலான அறிக்கை கிடைக்க வேண்டியுள்ளது. எனினும் தொழில்நுட்ப சிக்கல் காரணமாக அவற்றை பெற முடியாது என டெலிகொம் அறிவித்துள்ளது. இந் நிலையில் அந்த தகவல்களை பெறுவது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதே போன்று டயலொக் நிறுவனம், குறித்த தொலைபேசி இலக்கங்கள் தொடர்பில் உள் வந்த, வெளிச் சென்ற அழைப்புக்கள் தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. எனினும் குறுஞ் செய்திகள் அதில் உள்ளடக்கம் ஆகியவற்றை சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக அறிவித்துள்ளது. மொபிடல் நிறுவனமும் இதே அறிவிப்பையே செய்துள்ளது. எடிசலாட் நிறுவனம் குறுஞ்செய்திகள், அதன் உள்ளடக்கத்தை வழங்க சிறிது கால அவகாசம் தேவை என அறிவித்துள்ளது. அதன்படி தொலைபேசி இலக்கங்கள் குறித்த பகுப்பாய்வில் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள விடயங்களை மையப்படுத்தி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பெறப்பட வேண்டிய தகவல்களை எவ்வாறு பெற முடியும் என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு அவதானம் செலுத்தியுள்ளது.

அத்துடன் இந்த விவகாரத்தில் முதல் சந்தேக நபரை கைது செய்ய திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளீர்கள். குற்றப் புலனாய்வுப் பிரிவு சர்வதேச பொலிஸார் ஊடாக முன்னெடுத்த நடவடிக்கையில் தற்போது அவருக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சர்வதேச பொலிஸில் 192 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. எனவே அர்ஜுன் மகேந்திரன் அந்த 192 நாடுகளில் எதில் இருந்தாலும் கைது செய்ய முடியுமான சூழல் உள்ளது.

அவர் கைது செய்யப்பட்டால் கைதியாக கருதி அவரை நாடுகடத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அப்படியானால் அதற்கான ஆவணங்களை நாம் தயார் செய்கின்றோம். அதற்கு இம்மன்றில் விசாரணையில் உள்ள இவ்வழக்கின் கோவைகள் தொடர்பிலான உண்மை பிரதிகள் எமக்கு அவசியம். அவற்றை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கையளிக்குமாறு கோருகின்றோம். (இந்த கோரிக்கைக்கு அனுமதி கிடைத்தது)

அத்துடன் பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் ஊடாக அதன் கீழ் உள்ள ஒரு நிறுவனமான மெண்டிஸ் நிறுவனத்துக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எமக்கு அறிக்கை தேவைப்படுகின்றது. இது குறித்து அடுத்த தவணையில் விஷேட கோரிக்கையை மன்றில் முன்வைக்கின்றேன்.

அத்துடன் பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் வருமானம், செலவு தொடர்பில் தேசிய வருமான வரி திணைக்களத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொடுக்க நீதிமன்றம் அத்திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்றார். இறுதி கோரிக்கை தொடர்பில் அடுத்த வழக்குத் தவணையில் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து உத்தர விடுவதாக அறிவித்த நீதவான் லங்கா ஜயரத்ன, வழக்கை எதிர்வரும் மே 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்ததுடன் அதுவரை அர்ஜுன் அலோசியஸ், கசுன் பலிசேன ஆகிய சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். (இ-7)

# செய்தித்துளிகள்

## பத்திரிகைத் தரவரிசைப் பட்டியலில் படிப்படியாக முன்னேறும் இலங்கை

(கொழும்பு)

சர்வதேச பத்திரிகை சுதந்திர தரவரிசைப் பட்டியலில் இலங்கை பத்து இடங்கள் முன்னேறி 131 ஆவது இடத்தில் உள்ளது.

உலகின் 180 நாடுகளில் காணப்படும் பத்திரிகை சுதந்திரத்தை அடிப்படையாக வைத்து எல்லைகள் அற்ற செய்தியாளர் அமைப்பு (Reporters Without Borders – RSF) இந்த தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் தரவரிசைப் பட்டியலின் படி 141 வது இடத்தில் இருந்த இலங்கை பத்து இடங்கள் முன்னேறி 131 வது இடத்திற்கு வந்துள்ளது. (இ-7)

## இடி தாக்கி இருவர் வைத்தியசாலையில்



(ஹற்றன்)

டிக்கோயா - மாணிக்கவத்தை தோட்டத்தில் இடி தாக்குதலுக்குள்ளாகி இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தோட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் வேலை செய்து கொண்டிருந்த ஆண் தொழிலாளர்கள் இருவரே இடித்தாக்குதலுக்குள்ளாகி டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-7)

## ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இலங்கைத் தேயிலைக்குச் சிக்கல்

(கொழும்பு)

ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இலங்கைத் தேயிலைக்கு உரிய பெறுமதி கிடைப்பதில்லையென, தேயிலை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தேயிலை உற்பத்திக்கு க்ளைபோசெட் இரசாயன பதார்த்தம் பயன்படுத்தப்பட்டதாக தடை விதிக்கப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த நிலைமை உருவாகியுள்ளதாக, அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்நாட்டின் ஆராய்ச்சி நிலையத்தில் இலங்கை தேயிலைக்கு உரிய மதிப்பு வழங்கப்படுவதில்லையெனவும் உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

## பாலஸ்தீனத்தின் இருப்பு குறித்து யாழில் நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினரின் ஏற்பாட்டில் இஸ்ரேலின் 70 ஆவது ஆண்டு நிறைவும் பாலஸ்தீனத்தின் இருப்பும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் கருத்துரையை இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபையின் மனிதவள மேம்பாடும் அபிவிருத்தியும் பிரிவின் முன்னாள் பிரதிச் செயலாளர் சி.கிருஸ்ணானந்தன் வழங்குவார். (இ-7)

## சந்திர வழிபாடு நூல் வெளியீடு


திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய சந்திர வழிபாடு நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுகிழமை பிற்பகல் 4 மணியளவில் காரைநகர் துருவாசப்பிட்டியில் காரைநகர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ச.தனுஜன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிலாபம் சர்வதேசப் பாடசாலை ஸ்தாபகத் தலைவர் கிருஸ்ணன் கமலநாதன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கலாதீபன், கௌரவ விருந்தினர்களாக யாழ் ப்பாணம் சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை அதிபர் ப.சிவலோகநாததேசிகர், மீசாலை வீரசிங்கம் மகா வித்தி யாலய பிரதி அதிபர் தி.சிவகஜன் ஆகியோர் கலந்து கொள் வர். (இ)



# சிறுவர் அரங்கம்

## காகமும் நாய்க்குட்டியும்



ஒரு வீட்டில் நாய்க்குட்டியொன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க்குட்டி காகத்துடன் நட்பாக இருந்தது. ஒரு நாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது. இதைக் கண்ட நாய்க்குட்டி காகத்திடம் சென்று,

என்ன காக்கையாரே! ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்? என்று கேட்டது.

அதற்கு காகம், மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகின்றார்கள். ஆனால் என்னை வெறுத்து கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்? என்று கேட்டது காகம்.

இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான். இதை நீங்கள் இல்லாது செய்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள், என்றது நாய்க்குட்டி.

எங்களிடம் அப்படியென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள் தான் சிறந்தவர்கள்! என்று சொன்னது காகம்.

உண்மைதான்! என்றது நாய்க்குட்டி.

பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத்தந்ததும் நாங்கள்தான்! என்று பெருமையோடு சொன்னது காகம்.

ஆமாம் அதுவும் உண்மைதான்! என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி.

இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்?

குயில் கூவும்போது அதன் இனிமையை ரசிக்கிறார்கள். மயிலாடும் போது அதை ரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்து பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்? என்று மீண்டும் கேட்டது காகம்.

ஏன் என்று நான் சொல்லுகிறேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும். உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால் தான் மனிதர்கள் உங்களை வெறுக்கிறார்கள் என்று கூறியது நாய்க்குட்டி.

அப்படி என்ன தீய குணங்கள்? என்று கேட்டது காகம்.

திருடுதல், ஏமாற்றுதல், என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலை குனிந்தது.

**நீதி: ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும். அவரின் ஒரு சிறு தீயசெயல் அவரை, அவரின் அத்தனை நல்ல பண்புகளில் இருந்தும் மறைத்து அந்தத் தீயசெயலே முன்னிற்கும்.**




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1192- ஜெருசலேம் மன்னன் முதலாம் கொன்ராட் முடிசூடி இரண்டாம் நாள் கொலை செய்யப்பட்டான்.
- 1792-பிரான்ஸ் ஆஸ்திரிய நெதர்லாந்தை முற்றுகையிட்டது.
- 1862-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் அட்மிரல் டேவிட் பராகுட் கூட்டமைப்பிடம் இருந்து லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரைக் கைப்பற்றினான்.
- 1876-இந்தியாவின் அரசியாக விக்டோரியா மகாராணி தெரிவு செய்யப்பட்டமை லண்டன் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.
- 1932-மஞ்சள் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1945-முசோலினியும் அவனது மனைவியும் இத்தாலிய எதிர்ப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1952-இரண்டாம் உலகப் போரின் போது ஐக்கிய அமெரிக்காவினால் கைப்பற்றப்பட்ட ஜப்பானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறின.
- 1995-டலாகீரில் அவ்ரோ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதற்கு அடுத்த நாள் இன்னுமொரு விமானம் வீழ்த்தப்பட்டது.
- 1996-அவுஸ்திரேலியா, தாஸ்மேனியாவில் "மார்ட்டின் பிறையன்ட்" என்பவன் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 35 பேர் கொல்லப்பட்டு 37 பேர் காயமடைந்தனர்.
- 2000-இலங்கை இராணுவத்தினருக்கெதிரான விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை முடிவுக்கு வந்தது.
- 2005-இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கொழும்பில் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

### பிறப்புகள்

- 1906-கியேடல், செக்-அமெரிக்கக் கணிதவியலாளர், மெய்யியலாளர் (இ. 1978)
- 1908-ஆஸ்கர் ஷிண்ட்லர், செக்-செருமானியத் தொழிலதிபர் (இ. 1974)
- 1923-இரா. செழியன், தமிழக அரசியல்வாதி, எழுத்தாளர்
- 1924-கென்னத் கவுண்டா, சாம்பியாவின் 1வது அரசுத்தலைவர்
- 1926-ஹார்ப்பர் லீ, அமெரிக்கப் புதின எழுத்தாளர் (இ. 2016)
- 1926-எஸ். ரி. அரசு, இலங்கை நாடகக் கலைஞர், நாடக இயக்குநர், ஒப்பனைக் கலைஞர், ஒளிப்பதிவாளர், சிற்பக் கலைஞர் (இ. 2016)
- 1937-சதாம் உசேன், ஈராக்கின் 5வது அரசுத் தலைவர் (இ. 2006)

### இறப்புகள்

- 1942-உ. வே. சாமிநாதையர், தமிழகத் தமிழறிஞர், தமிழ் சுவடி ஆய்வாளர், சேகரிப்பாளர், பதிப்பாளர் (பி. 1855)
- 1945-பெனிட்டோ முசோலினி, இத்தாலியின் 27வது பிரதமர் (பி. 1883)
- 2005-தர்மரத்தினம் சிவராம், இலங்கை ஊடகவியலாளர், எழுத்தாளர் (பி. 1959)
- 2006-நா. சோமகாந்தன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1934)
- 2007-கார்ல் பிரீட்ரிக் வைசாக்கர், செருமானிய இயற்பியலாளர், மெய்யியலாளர் (பி. 1912)

### சிறப்பு நாள்

- பழக்கறிஞர் தினம் (ஒடிசா, இந்தியா)
- முஜாகிதீன் வெற்றி நாள் (ஆப்கானித்தான்)
- தொழிலாளர் நினைவு நாள்



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 | 50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 68 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 50 | 45 | 80 | 30 |
| தக்காளி | 30 | 40 | 30 | 15 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 50 | 30 | 60 | 60 |
| கரட் | 80 | 100 | 100 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 20 | 40 | 10 | 40 | 50 |
| புடோல் | 60 | 50 | 70 | 25 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 30 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 150 | 180 | 160 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 60 | 45 | 60 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 90 | 100 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 50 | 35 | 160 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 40 | 80 | 180 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 70 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 170 | 200 | 120 |
| பீற்றூட் | 40 | 30 | 40 | 15 | 80 | 40 |
| கறிமிளகாய் | 100 | 50 | 60 | 25 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 250 | 160 | 160 | 400 |
| போஞ்சி | 150 | 200 | 100 | – | 200 | 100 |
| கத்தரித்துப் பிஞ்சு | 40 | 20 | – | – | 50 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 50 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 160 | 120 | 280 | 160 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 20-50 | 60-80 | 80 |
| இராசவள்ளி | 180 | 200 | 120 | 130 | 160 | 120 |
| வெங்காயப்பூ | – | – | – | – | – | – |
| முள்ளங்கி | 40 | 100 | – | 5 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | – | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | – | – | – | – | – | – |

சட்டி சுட்டதடா கைவிட்டதடா
புத்தி கெட்டதடா நெஞ்சை தொட்டதடா...
*- கவியரசு கண்ணதாசன்*

**வலம்புரி**
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆதாரம் இல்லையம்மா ஆறுதல் சொல்ல நான் அவதாரம் இல்லையம்மா தத்துவம் சொல்ல

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவுடன் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது மிகப் பெரும் குழப்பத்தில் உள்ளது.

ஈபிடிபியின் ஆதரவுடன் ஆட்சியமைத்ததால் எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கணிசமான வீழ்ச்சியைச் சந்திக்கும் என்ற பயம் அந்தக் கட்சியினரைக் கடுமையாகத் தாக்கி இருக்கிறது.

அதிலும் குறிப்பாக இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நடக்கக் கூடிய சாத்தியம் உண்டு.

தற்போது வடக்கின் முதலமைச்சராக இருக்கும் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை மீண்டும் முதலமைச்சர் வேட்பாளராக நியமிப்பதில்லை என்ற முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எடுத்திருக்கின்ற நிலையில்,

அடுத்த வடக்கு மாகாண சபைத் தேர்தலின் முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராஜாவாகவோ அன்றி எம்.ஏ.சுமந்திரனாகவோ இருக்கலாம்.

இந்நிலையில், ஈபிடிபியின் ஆதரவுடன் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியைப் பிடித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நீங்கள் வாக்களித்தால் அவர்கள் மீண்டும் ராஜபக்ஷவுடனும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்து வடக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பர் என்ற பிரசாரம் கூட்டமைப்பை எதிர்த்து நிற்போரால் முன்வைக்கப்படும்.

இவ்வாறான பிரசாரம் முன்வைக்கப்படும் போது அதனால் கூட்டமைப்பு கடுமையான பாதிப்பைச் சந்திக்கும்.

சுருங்கக்கூறின் வடக்கு மாகாண சபையின் ஆட்சியைப் பறிகொடுக்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைமை கூட்டமைப்புக்கு ஏற்படக்கூடும்.

எனவே இதனை முறியடிப்பதற்காக இரண்டு வகையில் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வந்துள்ளது.

அதில் ஒன்று ஈபிடிபியின் ஆதரவை தாம் கோரவில்லை என்பது.

இவ்வாறு கூறுவதனால் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ள உள்ளூராட்சி சபைகளில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஈபிடிபி கொண்டு வரும்.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் தமது ஆதரவை வழங்கும் போது ஈபிடிபியும் ஏனைய கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து கூட்டமைப்பின் ஆட்சியை வீழ்த்தி விட்டன என்ற பிரசாரத்தை தாம் மேற்கொள்ள முடியும் என்பது.

மற்றையது தாம் ஈபிடிபியுடன் பேசவில்லை. சிலவேளை அவர்கள் வலிந்து தமக்கு ஆதரவு தந்திருந்தால் அது தொடர்பில் தம்மால் எதுவும் செய்ய முடியாது. எனவே நாங்கள் புனிதமாகவே உள்ளோம்.

நாங்கள் ஈபிடிபியுடனோ அல்லது தென் பகுதியைச் சார்ந்த அரசியல் கட்சிகளுடனோ சேரவில்லை எனக் காட்டுவதனூடாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுவது தான் கூட்டமைப்பின் தந்திரோபாயம் என்று நினைக்கும்போதுதான்,

*ஆதாரம் இல்லையம்மா ஆறுதல் சொல்ல நான் அவதாரம் இல்லையம்மா தத்துவம் சொல்ல...* என்ற கவியரசின் பாடல் வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

# இந்தியாவிலிருந்து இலங்கை வரவுள்ள புனித பௌத்த புராதன சின்னங்கள்

வெசாக் பண்டிகை காலத்தில் பொதுமக்களின் பார்வைக்காக சாரநாத்திலிருந்து மிகவும் புனிதமான பௌத்த சின்னங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளன.

இதுகுறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவிலிருந்து இந்த புனித சின்னங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவது இதுவே முதன்முறை என்பதுடன் இதற்காக இந்திய அரசாங்கத்தால் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் இப்புனித சின்னங்களை இன்று 28ஆம் திகதி சனிக்கிழமையிலிருந்து மே மாதம் 2 ஆம் திகதி வரை கொழும்பு அலரிமாளிகையில் தரிசிக்க முடியும்.

சாரநாத் புனித சின்னங்கள் இலங்கையில் காட்சிப்படுத்துதல் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான ஓர் ஆன்மீக பந்தத்தை உருவாக்குவதுடன் இவ்விரு நாடுகளின் பகிர்ந்து கொள்ளும் பௌத்த பாரம்பரியத்தின் மற்றுமோர் வெளிப்படுத்தலாக உள்ளது.

சாரநாத் புனித சின்னங்கள் இந்தியாவிலுள்ள சாரநாத்தில் முலகண்ட்காகுடி பௌத்த விகாரையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. புத்த பெருமான் தனது முதலாவது போதனைகளை அங்கே நடத்தியதால் சாரநாத் வரலாற்று ரீதியாக முக்கியமான இடமாகவுள்ளது. இந்தியாவிலுள்ள மகாபோதி சங்கத்தின் ஸ்தாபகர் அநகாரிக தர்மபால, சாரநாத்தின் பெருமையை மீள் ஸ்தாபிப்பதற்கு முலகன்ட்காகுடி பௌத்த விகாரையைக் கட்டுவதில் ஒரு முக்கியமான பங்கினை வகித்தார். இந்நிலும் புனித சின்னங்களும் இந்திய அரசாங்கத்தினால் இந்திய மகாபோதி சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

விசேடமாக செய்யப்பட்ட ஒரு பேழை மிகவும் பவித்திரமான மற்றும் உண்மையான இந்த இரு சின்னங்களையும் பாதுகாக்கின்றது. வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டு விகாரையில் பாதுகாக்கப்படும் முதலாவது சின்னம், 1913-1914ஆம் ஆண்டுகளில் சேர் ஜோன் மார்ஷல் என்பவரால் புராதன நகர் தக்சிலாவிற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது. அவை, தர்மராஜிக்கா தாதுகோபுரத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு சிறிய பௌத்த வழிபாட்டுத் தலத்தில் ஒரு வெள்ளிப் பேழையினுள் 136 வருட திகதிக் குறிப்பிடுதலுடன் (ஏறத்தாழ கி.பி. 79 வருடங்கள்) கண்டுபிடிக்கப்பட்டன. அவை ஆசீர்வதிக்கப்பட்டவற்றின் புனித சின்னங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சாரநாத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள இரண்டாவது சின்னம் இந்திய தொல்பொருளாராய்ச்சியாளரான ஏ.எச்.லோங்ஹேர்ஸ்ட் என்பவரால் 1929ஆம் ஆண்டு மெட்ராஸ் ஆளுகைக்குட்பட்ட குந்தூர் மாவட்டத்தில் உள்ள நாகார்ஜுனக் கொண்டாவிலுள்ள ஒரு பெரிய தாதுகோபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. சின்னம் கண்டுபிடிக்கப்பட்ட தாதுகோபுரம் ஆசீர்வதிக்கப்பட்டவற்றின் மகாசைத்யர் அல்லது வேறு வகையில் பெரிய தாதுகோபுரம் என விபரிக்கப்படுகிறது.

இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பில் புனித பௌத்த சின்னங்களைக் காட்சிப்படுத்துவதற்கு தந்துதவியமைக்காக இந்திய மகாபோதி சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கின்றது. இலங்கையில் புத்த பெருமானின் புனித சின்னங்களைக் காட்சிப்படுத்துவதற்கான ஒரு முயற்சியை கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் இரண்டாவது தடவை மேற்கொண்டுள்ளது. அத்தகைய ஒரு முதலாவது முன்னெடுப்பு 2012ஆம் ஆண்டு கபிலவஸ்து புனித சின்னங்களின் காட்சிப்படுத்தலின் போது மேற்கொள்ளப்பட்டது. (இ-7)

## ஐ.தே.கவில் எதிர்பார்த்த மாற்றத்தை 30ஆம் திகதி கூறுவோம் – வசந்த

(கொழும்பு)

நாம் எதிர்பார்த்த மாற்றம் என்ன என்பதை 30 ஆம் திகதிக்குப் பின்னர் விளக்கத்துடன் ஊடகங்களுக்கு அறிவிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் ரணிலுக்கு எதிரான மாற்றுக் கருத்துள்ள உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான வசந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக் குழுவினால் முன்வைக்கப்பட்ட புதிய பொறுப்புக்கள் மாற்றம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

மறுசீரமைப்பு குழுவினால முன்வைக்கப்பட்ட பதவிகள் அனைத்தும் நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு மறுப்புத் தெரிவிக்க வேண்டுமானால், மூன்றில் இரண்டு உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும். அப்போதே, வாக்கெடுப்பொன்றைக் கோர முடியும். இதுவே கட்சி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டமாகும். ஜோசப் மைக்கல் பெரேரா கட்சியின் மத்திய செயற்குழு பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். அது அவரது கருத்து. என்னைப் பொறுத்தவரையில் பொறுப்பிலிருந்து விலகி எதனையும் சாதிக்க முடியாது. உள்ளே இருநதுதான் போராட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆயுள் தண்டனை

ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

2012ஆம் ஆண்டில் கல்கிஸ்ஸ பகுதியில் வைத்து குறிப்பிட்ட நபர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடமிருந்து 5 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டிருந்தது.

கல்கிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 45 வயதான நபருக்கே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## மே தினத்தை அனுஷ்டிக்க அரசு தடைவிதிக்கவில்லை

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

சர்வதேச தொழிலாளர் தினத்தை மே தினத்தில் அனுஷ்டிப்பதற்கு அரசாங்கம் தடை விதிக்கவில்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

விசாகப்பூரணை வாரத்தை முன்னிட்டு, சர்வதேச தொழிலாளர் தினப் பேரணிகளை அன்றையதினம் நடத்த வேண்டாம் என்று பௌத்த சாங்கத்தினர் அனைவரும் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரி இருந்தனர்.

ஆனால்மே தினப்பேரணிகளை தடை விதிக்க அரசாங்கத்தால் முடியாது.

எனவே அதற்கு மாற்று தினம் ஒன்று வழங்கப்பட்டு, மே முதலாம் திகதி அரசாங்கமும், பிரதான அரசியல் கட்சிகளும் மே தின பேரணிகளை நடத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## எதிர்ப்பிற்கு மத்தியில் ரவிக்கு பதவி வழங்கப்பட்டது ஏன்?

(கொழும்பு)

பலத்த எதிர்ப்பிற்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவராக ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டமைக்கான காரணத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெளியிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பான முக்கிய ஆவணங்கள், ரவியிடம் உள்ளதனாலேயே அவரை பதவி விலக்க முடியவில்லை என ஐ.ம.சு.மு.-இன் பிரதம செயலாளர் மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய தேசிய கட்சியில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கையினால், கட்சிக்குள் பல முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## ஐவர் உயிரிழப்பு

## தொழிற்சாலையுடன் தொடர்புடையவர்களுக்கு மே 11ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கொழும்பு)

ஹொரணை - பெல்லப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள இறப்பர் தொழிற்சாலையின் உரிமையாளர், தொழிற்சாலையின் முகாமையாளர் மற்றும் ஆய்வுகூட உதவியாளர் ஆகியோர் எதிர்வரும் மே 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஹொரணை நீதவான் நீதிமன்றில் நேற்று இவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட நிலையிலேயே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குறித்த இறப்பர் தொழிற்சாலையின் உரிமையாளர் ஹொரணை நீதவான் நீதிமன்றில் நேற்றுக் காலை சரணடைந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 19ஆம் திகதி குறித்த இறப்பர் தொழிற்சாலையில் இடம்பெற்ற அனர்த்தத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், 19 பேர் சுகவீனமுற்றனர்.

இந்த சம்பவத்தை அடுத்து குறித்த தொழிற்சாலையின் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை தற்காலிகமாக இரத்து செய்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இறப்பர் தொழிற்சாலைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக தொழிலதிணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில கிளிநொச்சி நகரம், திருநகர், மக்கள் வங்கி கிளிநொச்சி, மாவட்ட செயலகம் கிளிநொச்சி, லங்கா சதோச கிளிநொச்சி, Cargills Food City கிளிநொச்சி, நீர்ப்பாசன சபை கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (இ-5)

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் காலிறுதியில் ரி.சி.சி. அணி



கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சிவிளையாட்டுக் கழகம் 25 ஆவது வெள்ளிவிழா ஆண்பாக நடத்தி வரும் தொடரின் 9 ஆவது போட்டி கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது திருநெல்வேலி சி.சி. அணி கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 4 இலக்குக் குகளால் வெற்றி பெற்று கால் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 25.5 ஓவர்களில்சகல இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களை பெற்றது. கோகிலன்-29, அஜித்-30, சாரங்கன்-16, சரண்ராஜ்-12, பிரகலாதன் கபில் தலா 10 ஓட்டங்களை பெற்றனர், பந்து வீச்சில் சைவேஸ்வரன் -1, பிரபாவன்-4, சிவராஜ்-2, அனுரதன்-3 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுபெடுத்தாடிய திருநெல்வேலி சி.சி அணி 6 இலக்குகளை இழந்து 140 ஓட்டங்களை பெற்றது. தர்சிகன் -27, அசோக்-17, சுரேந்திரன் -11, சிவராஜ்-15, கோகுலன்-13 சைவேஸ்வரன் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் அஜித், மதாஸன், பிரகலாதன், சாருஜன், டிலோசன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தர வரிசை (RATING) பட்டியலுக்கு ரி.சி.சி அணி 5.80 புள்ளிகளையும் கிறாஸ் கொப்பர்ஸ் அணி 1.99 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (கு)

# கோல் மழையில் மைதானம் நனைந்தது ரேவடி அணி அசத்தல் வெற்றி



வல்வை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களிற்கிடையே அணிக்கு 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியினை நடத்தி வருகின்றது.

அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் தீருவில் அணியை எதிர்த்து ரேவடி அணி மோதியது.

ஆட்டத்தில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ரேவடி அணி ஆரம்பத்திலேயே அடுத்தடுத்து கோல்களை போட்டது.

அணி முற்பாதி முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் ரேவடி அணி முன்னிலை பெற்றது.

2ஆவது பாதியில் ரேவடி அணி மேலும் 2 கோல்களை போட்டது. ஆட்டநேர முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் ரேவடி அணி வெற்றி பெற்றது.

ரேவடி அணி சார்பாக ரவி-2, ரஞ்சன், சீலன், வினோத்-ஒரு கோல்களை போட்டனர். (க)



யூனியன் குளம் வானதாரகை விளையாட்டுக்கழக மைத்தான திறப்பு விழாவினை முன்னிட்டு கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற அணிக்கு ஏழு பேர் கொண்ட ஆறு பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியில் உடையார்கட்டு நண்பர்கள் அணி வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

# தனபாலன் வெற்றிக்கிண்ணம் சென்.பற்றிக்ஸ் வசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி. எஸ்.தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்டத்தில் 19 வயது பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட வன்பந்தாட்ட துடுப்பாட்டப் போட்டி வருடா வருடம் நடத்தி வருகின்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் மறைந்த அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் இந்த வெற்றிக் கிண்ணமான 11 ஆவது தடவையாக இம்முறையும் நடத்தப்பட்டது.

முதல் வருடம் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் இரண்டாம், மூன்றாம் வருடங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் அடுத்து வந்த 3 ஆண்டுகளிலும் கொக்குவில் இந்து கல்லூரி அணியும், அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் முறையே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், கடந்த 2017 ஆம் ஆண்டு சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் சம்பியனாகியிருந்தன.

இந்த வருடம் நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் அணி, 5 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மொனிக் 37, டிலக்ஸன் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். டிலிசியன், விஜயஸ்காந்த் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

64 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 5 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கஸ்ரோ 2 விக்கெட்களையும், பிரேடிக், டிலக்ஸன் தலா ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக கஸ்ரோ தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, 5 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி, 5 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து, 34 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. (க-26)

# வட மாகாணத்துக்கு மேலும் பதக்கங்கள்

56 ஆவது கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இதில் வடமாகாண மெய்வல்லுநர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றி வரும் வீர, வீராங்கனைகள் சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர்.

3 ஆம் நாளில் நடைபெற்ற போட்டிகளில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த சுசிந்திர குமார் மிதுன்ராஜ், 16 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் 54.33 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

20 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதலில், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சந்திரசேகரன் சங் கவி 33.73 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கம் பெற்றார். (க-26)


அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் கிண்ணம் சென்றலைட்ஸ் முன்னிலையில்

ஜோர்ஜ்வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 9வது ஆண்டாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்வில் 01.01.2018 இல் இருந்து 31.01.2018 வரை நடைபெற்ற ஒரு போட்டிக்கு ஆளுநர் வெற்றிக் கிண்ணம்) வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி 7.79 புள்ளிகளை பெற்று முன்னிலையில் உள்ளது. அடுத்த அணியாக யாழ். ஜொனியன்ஸ் அணி 2.58 புள்ளிகளைப் பெற்றுள்ளது. கடந்த வருடம் (2017) யாழ். பல்கலைக்கழக அணி முதலாம் இடத்திலும் சென்றலைட்ஸ் அணி 2 ஆம் இடத்திலும் திருநெல்வேலி கிரிக்கெட்கழக அணி 3ஆம் இடத்திலும் உள்ளது.

28.02.2018 வரை நடைபெற்ற போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் விபரம் அடுத்த வாரம் வெளியாகும். இ



# வட மாகாண வல்லவன் பட்டம் பாசையூர் சென்.அன்ரனீஸ் வசம்



நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்திய வடமாகாண வல்லவன் 2 தொடரின் இறுதியாட்டமானது கடந்த 21ஆம் திகதி நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் இறுதியாட்டத்தில் பாசையூர் சென் அன்ரனீஸ் அணியினை எதிர்த்து பனங்கட்டிகொட்டு சென் ஜோசப் அணியானது மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணியினரும் தமக்கு கிடைத்த கோல்போடும் வாய்ப்புக்களை தவறவிட ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே வெற்றியாளரை தீர்மானிக்க நடுவரால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 4:2 என்ற கோல் கணக்கில் சென் அன்ரனீஸ் அணியானது வெற்றிபெற்று சம்பியனாகியது.

இவ் வெற்றியின் மூலம் வடமராட்சி மண்ணில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஆறாவது முறையாகவும் வெற்றி பெற்று சாதனை படைத்தது சென். அன்ரனீஸ் அணி. (க)

## வெளிநாட்டிலிருந்து...

அனுப்பப்பட்ட கடிதத்திலேயே மேற்படி விடயமானது கூறப்பட்டுள்ளதுடன் அக் கடிதத்தின் பிரதியானது யாழ்.மேல் நீதிமன்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை நாரந்தனை பகுதியில் வைத்து தேர்தல் பிரசாரத்திற்காக சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீது ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்திருந்தனர். இவ் வழக்கானது சுமார் பதினைந்து வருடங்களின் பின்னர் விசாரணை செய்யப்பட்டு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனால் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும் இதில் இருவர் ஏற்கெனவே நாட்டைவிட்டு தப்பித்து மேற்குலக நாடொன்றில் தலைமறைவாகியிருந்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் குறித்த இருவரையும் உடனடியாக இலங்கை அரசானது நாடுகடத்தல் உடன்படிக்கை மூலம் நாடுகடத்தி நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என இலங்கை அரசிற்கும் நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார்.

குறித்த உத்தரவு தொடர்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நீதியமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியன நீதிமன்றுக்கு பதில் கடிதம் அனுப்பியிருந்தன. இதில் இறுதி தவணையின் போது மத்திய நாடுகடத்தல் அதிகார சபையின் தலைமை அதிகாரியான பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு நீதிமன்றானது மீளவும் நாடுகடத்தல் உத்தரவை பிறப்பித்திருந்தது.

இவ்வாறான நிலையில் 17.04.2018 திகதியிடப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது கடிதமானது சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அதன் பிரதியும் யாழ். மேல் நீதிமன்றுக்கு அனுப்பப்பட்டிருந்தது. இக் கடிதத்தில்,

நாடுகடத்தல் உடன்படிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு யாழ்.மேல் நீதிமன்றானது பிறப்பித்த உத்தரவை சுட்டிக்காட்டியும், ஏற்கெனவே சட்டமா அதிபருக்கு 30.11.2017 அனுப்பிய கடிதத்தை மீளவும் நினைவுபடுத்தி விரைவாக நாடுகடத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் இவ் நாடுகடத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பாக யாழ்.மேல் நீதிமன்றுக்கு அறிக்கை அனுப்பப்பட வேண்டும் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

## ஒழுக்காற்று நடவடிக்கை...

அதிகாரத்தின் கீழ் வந்தது.

அதன் பின்னர் 11.04.2018-ம் திகதி மற்றொரு சபை கூட்டம் நடைபெற்ற போதும் சபையின் நிதிக் குழு உட்பட எந்தவொரு சபையின் உபகுழுவும் இதுவரை அமைக்கப்படவில்லை.

இந்நிலையில் சபையின் எந்தவொரு அனுமதியுமின்றி நிதிக் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

மேலும் சபையின் எத்தகைய அனுமதியுமின்றி வீதிப் புனரமைப்பிற்கான கேள்விப் பத்திரக் கோரல் கடந்த 18.04.2018 அன்றைய பத்திரிகையில் முதல்வரின் பெயரில் வெளியாகியுள்ளது.

இச் செயற்பாடுகளினை மாநகர முதல்வர், தன்னிச்சையாக கையாண்டுள்ளார் என்பதனை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

இச் செயற்பாடுகள் மாநகர சபைக்கான சட்டவிதிமுறைகளை முற்றாக மீறும் செயலாகும் என்பதுடன் சபையில் பாரிய நிதி மோசடி அல்லது முறைகேடுகள் நடைபெறுகின்றனவோ என்ற பாரிய அச்சத்தை எமக்கு தோற்றுவித்துள்ளது.

அத்துடன் சபைக்கான உபகுழுக்களும் இதுவரை அமைக்கப்படாமல் சபையின் செயற்பாடுகளும் மாநகர முதல்வரால் தன்னிச்சையாக செயற்படுத் தப்படுகின்றது என்பதனையும் தங்களது கவனத்திற்கு அறியத் தருகின்றோம்.

குறித்த உபகுழுக்களை உடனடியாக உருவாக்குவதற்காக சபையின் விசேட கூட்டத்தினை கூட்டுமாறு மாநகர சபை முதல்வருக்கு 2018.04.20-ம் திகதிய கடிதம் மூலம் எமது உறுப்பினர்களால் கோரிக்கை விடப்பட்டபோதும் இதுவரை எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் 19.04.2018ஆம் திகதியிடப்பட்டும் மாநகர சபை முதல்வரால் கையொப்பமிடப்பட்டும் மாநகர சபை இலட்சினையுடனான கடிதத் தலைப்பில் "மாநகர முதல்வரின் பிரத்தியேக இணைப்பாளர்" நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடானது மாநகர சபை சட்ட விதிகளுக்கு முரணானது என்பதுடன் மாநகர முதல்வர் தனது பதவிக்கான அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

இவற்றினைக் கருத்திற் கொண்டு இவற்றுடன் தொடர்புடையவர்கள் மீது உரிய விசாரணை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கையினை எடுத்து சபையின் செயற்பாடுகளை சட்டம் ஒழுங்கிற்கு உட்பட்டு நடைபெறுவதற்கு ஆவன செய்யுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம் என குறிப்பிடப்பட்டு உள்ளது. (ம-4)

## யாழில் சிறைச்சாலை...

தாக்குதலில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த உத்தியோகத்தர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் அடையாளம் தெரியாத இளைஞர் அணியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## வாழ்வாதாரத்தை மேம்....

மன்னார் பிரதேச செயலாளர் என்.பரமதாஸ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞான சோதி ஆகியோர் இணைந்து குறித்த கட்டிடத்தை திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞான சோதி அவ்வாறு தெரிவித்தார்.

சிவஞான சோதி தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்திட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு நன்மையடைய முடியும். தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் கீழ் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இருக்கின்றார்.

எமது அமைச்சிற்கு இவ்வருடம் அதிகமான நிதி மீள் குடியேற்ற செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அதிகமான நிதி வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட பிரதிநிதிகள் ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.

நிதி அதிகரிப்பிற்கான முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியதன் காரணத்தினால் இந்த வருட வரவு செலவு திட்டத்திலே எமது அமைச்சிற்கு 1750 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 50,000 வீடுகளை அமைப்பதற்கான வேலைத் திட்டத்திற்கும் அவர்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள். அமைச்சரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

மேலும் வீதிகளை அமைப்பதற்கு பெருந்தொகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 56 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தகாரரிடமே நிதியை கடனாக பெற்றுக்கொண்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும் எனவே குறித்த கருத்திட்டம் மூலம் நீங்கள் பூரண பயனை பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வின் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழில் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வடக்கு, கிழக்கு...

பற்றிருக்கும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளில் கணிசமான தொகையினரை இரண்டு வருடப் பயிற்சியில் இணைத்துக்கொண்டு, அப்பயிற்சியின் பின்பு அவர்களுக்கு அரசில் நிரந்தர நியமனத்தை வழங்கும் பொருட்டு அரசு, மாவட்டச் செயலகங்களின் ஊடாக பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகளை அண்மையில் நடாத்தியிருந்தது.

இந்த நேர்முகப் பரீட்சையின் போது உச்ச வயதெல்லை 35 வயதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முதற் பட்டப்படிப்பின் பின்னர் பெற்றுக்கொண்ட மேலதிகக் கல்வி, சிறப்பு தொழிற் தகைமை மற்றும் விளையாட்டுத் தகைமை போன்ற தகுதிகளுக்குக் கூடுதல் புள்ளிகள் வழங்கப்படுகின்றது.

பெறப்பட்ட புள்ளிகள் நாடுமுழுவதும் ஒரே அடிப்படையிலேயே கணிப்பிடப்பட்டுத் தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் வடக்குக் கிழக்குப் பட்டதாரிகள் கூடுதல் பாதிப்புக்குள்ளாக நேரிடும் என்று எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்படி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு தெரிவுகளைச் செய்யவேண்டுமென ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் எதிர்க்கட்சித் தலைவர் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதில் வடக்குக் கிழக்குப் பட்டதாரிகளுக்கு போர் மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக கூடுதல் காலம் செலவிட நேர்ந்துள்ளமையால் ஆகக் கூடிய வயதெல்லையை 35 இலிருந்து 40 வரை அதிகரிக்க வேண்டும்.

மேலதிக மாற்றுத் தொழிலாண்மைக் கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வடக்குக் கிழக்குப் பட்டதாரிகளுக்கு போர் காரணமாகக் கிடைக்காமல் போனமையால் அவர்கள் ஏனைய மாவட்டப் பட்டதாரிகளுடன் சமமாகப் போட்டிபோட்டுக் கூடுதல் புள்ளிகள் பெறமுடியாத நிலை உள்ளது.

வடக்குக் கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வியாபார முயற்சிகள் அதிகம் இல்லாமை காரணமாக அந்தத் துறைகளில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் பெறும் சந்தர்ப்பம் இல்லாமையால் அவர்கள் அரசதொழில் வாய்ப்புக்களையே எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் வேலைவாய்ப்பின்மை தேசியமட்ட அளவைவிட அதிகளவில் காணப்படுவதோடு, இப் பிரதேசங்கள் கல்வித் துறை மற்றும் அபிவிருத்தியிலும் ஏனைய மாவட்டங்களைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் தேசியமட்டத்தில் புள்ளிகளை நிரைப்படுத்தித் தெரிவுகளை மேற்கொண்டால், வடக்குக் கிழக்குப் பட்டதாரிகள் தெரிவுசெய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் மிகவும் குறைந்துவிடுமென்பதால் அவர்கள் மிகுந்த பாதிப்பை அடைவர்.

அதனால் புள்ளிகள் மாவட்ட மட்டத்தில் நிரைப்படுத்தப்பட்டு விகிதசம அடிப்படையில் சகல மாவட்டங்களுக்கும் சமமான வாய்ப்பை வழங்கும் பொருட்டுதெரிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் சகல மாவட்டங்களிலிருந்தும் பட்டதாரிகள் தெரிவுசெய்யப்படக்கூடிய நிலைமை உருவாக்கப்படுவதால்சகலருக்கும் நியாயமும் சமவாய்ப்பும் கிடைக்கும் என்றுள்ளது. (ம)

## குடும்பஸ்தர் ஒருவர்...

(46 வயது) என்பவரே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இவ்விடயம் குறித்து பலமுறை ஊறுபொக்க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தபோதும், பொலிஸ் அதிகாரிகள் பக்கச் சார்பாக நடந்துகொள்கின்றனர் என மேற்படி உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ள அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், இக்குடும்பஸ்தருக்குச் சொந்தமானதும் தனது மனைவியின் பெயரில் உள்ளதுமான காணியை, வற்புறுத்திப் பெற்றுக்கொள்வதற்காக உறவினர் ஒருவர் அச்சுறுத்தல் விடுக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

இதனால் ஜனாதிபதியை சந்தித்து இதற்கான முடிவைப் பெற்றுக்கொள்ளும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருகின்றார். (ம)

## ஐ.தே.க மறுசீரமைப்புக்கு சுஜீவ சேனசிங்க அதிருப்தி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இடம்பெற்ற மறுசீரமைப்பு தொடர்பில் சுஜீவ சேனசிங்க அதிருப்தி வெளியிட்டார்.

அமெரிக்காவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க நேற்று அதிகாலை நாடு திரும்பினார். .

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவிடம் ஐக்கிய தேசியக் கட்சியில் இடம்பெற்ற மாற்றங்கள் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதன்போது சுஜீவ சேனசிங்க பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

பிரதமருடன் நான் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டேன். தெளிவான மாற்றமொன்றிற்கு அவர் வாக்குறுதியளித்தார். நம்பிக்கையில்லா பிரேரணையின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலையினால் நாம் வீழ்ச்சியடைவோம் என அவருக்கு கூறினேன். அதனால் தனி நபர் ஒருவரை பாதுகாப்பதா, சிலரை பாதுகாப்பதா, சலுகைகளை தனி நபர் ஒருவருக்கு வழங்குவதா என ஐக்கிய தேசியக் கட்சியினர் தீர்மானிக்க வேண்டும். இது இறுதி சந்தர்ப்பமாகும். இந்த சந்தர்ப்பத்தில் பொய்களைக் கூறி, தலைகளை மாற்றி இதனை முன்னெடுக்க முயற்சித்தால் அது பாரிய அழிவாகும். தற்போது கட்சி பாரியளவில் அழிவடைந்துள்ளது. நாம் களைத்துப்போயுள்ளோம். தலைவருடன் வெளி இடங்களில் நான் பேசுவதில்லை. உள்ளகக் கலந்துரையாடலிலேயே ஈடுபடுவேன். 7 வருடங்களாகக் கலந்துரையாடி நாம் களைத்துப்போயுள்ளோம். எதிராக பேசுவதன் ஊடாக கட்சிக்குள் இருக்க முடியாத சூழல் எமக்கு ஏற்படும். அரசியலில் இருந்து விலகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். நாம் கட்சி மாறப்போவதில்லை. கொள்கை ரீதியில் நான் அரசியலில் ஈடுபடுவேன் என்றார்.(ம)

## அக் கட்சியின் பின்வரிசை...

மைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் சற்றும் திருப்தியடைய முடியாதிருப்பதாக, பெரும்பாலான பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருந்தது.

இந்தநிலையில் அடுத்தகட்டமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எதிர்வரும் மே மாதம் 1-ம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த நேற்றைய கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. (ம)

## பௌத்தத்தை பாதுகாக்க...

ங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அறிவித்தார்.

சிறந்த ஒழுக்கப்பண்பாடான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் வளமான பௌத்த சமூகம் குறித்த செய்தியை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக கொண்டு செல்வதற்கும் இந்த உன்னத வெசாக் தினம் கொண்டாட்டத்துடன் அணிசேருமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ சந்திரஜோதி, மாத்தளை மகா திசாவை பிரதி தலைமை சங்க நாயக்க தேரர் பதவிக்கு சங்கைக்குரிய அம்பகஸ்வெவே ராகுலாபிதான மகா நாயக்க தேரர் நியமிக்கப்பட்டதற்கான சன்னாஸ் பத்திரம் வழங்குவதற்காக நேற்று பிற்பகல் தம்புல்லை சிறி வலகம்பா மகா பிரிவெனா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பௌத்த சமூகத்தை பலப்படுத்துவதன் மூலமே சிறந்த ஒழுக்கப் பண்பாடான சமூகம் குறித்த எதிர்பார்ப்பை அடைக்க முடியும்.

பௌத்த விகாரை அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்காகவும் தொல்பொருட்களை பாதுகாப்பதற்கும் அரசு முன்னுரிமையளித்து நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி கூறினார். (ம)

## சமையல் எரிவாயு...

சபை வழங்கியுள்ளதாக லிட்ரோ காஸ் நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபையிடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இவ்வாறு விலை அதிகரிப்புக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக குறித்த நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதற்கமைய தற்போது ஆயிரத்து 431 ரூபாயாக விற்பனை செய்யப்படும் 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் புதிய விலை ஆயிரத்து 676 ரூபாயாக விற்பனைச் செய்யப்படவுள்ளது. (ம)


### விற்பனைக்கு

2 கோஸ்பவர் மோட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள், புத்தகங்கள், வீட்டுத்தளபாடங்கள், பித்தளைப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு. (C-2431)

தொடர்பு:- 077 1728141

### விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg
நெதர்லாந்து-700/=Kg (Holland)
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு 0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

### BRILLIANT MATHS ACADEMY

தரம் 6 தொடக்கம் 11 வரையான கணித குழு வகுப்புக்கள் (தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான) 28.04.2018 சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன. முற்று முழுதாக மாதிரி வினாத்தாள்களினூடு சிறந்த முறையில் நவீன தொழில் நுட்பத்தினூடு கற்பிக்கப்படும்.

Mr.S.Tharshan
077 4540529 (3771)

NO.1 சங்கிலியன் வீதி, நல்லூர். | புகையிரத வீதி, இணுவில் கிழக்கு

Gr 6 - மு.ப 8-9
Gr 7 - மு.ப 9-10 Gr 9 - பி.ப 1-2
Gr 8 - மு.ப 10-11 Gr 10 - பி.ப 12-1

விரைவில் O/L மாணவர்களுக்கான Paper Class ஆரம்பிக்கப்படவுள்ளது.


## யாழ்.பொலிஸா...

த்தப்பட்டுள்ளன.

வடமாகாண மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாந்துவினால், சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மற்றும் கொக்குவிலில் அடாவடித்தனம் செய்துவந்த வாள்வெட்டுக் கும்பல்கள் இதுவரை கைது செய்யப்படாமையே இந்த விடுமுறை ரத்திற்கு காரணமாகும்.

சாவகச்சேரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மூன்று வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டுக் கும்பலொன்று மேற்கொண்ட அடாவடித்தனத்தில் அவ்வீடுகளில் இருந்த பெறுமதியான பொருட்கள் நாசமாகின.

அத்துடன், கொக்குவில் முதலி கோவிலடியில் ஆவா கும்பலைச் சேர்ந்தவர் என கூறப்படும் ஒருவரால் நபரொருவர் வாள்வெட்டுக்குள்ளானார்.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய எவரும் நேற்றுவரை கைது செய்யப்படவில்லை. இந்த நிலை தொடர்ந்தால் வாள்வெட்டுக் கும்பல்கள் மீளவும் அடாவடிகளில் ஈடுபடுமென வடமாகாண மூத்த பிரதி பொலிஸ் மா அதிபருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையிலேயே யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுப்பு நேற்று தொடக்கம் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்த வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணித்துள்ளார்.(ம)


### அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு,உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள். (C-2373)

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி
கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

### 45,000 - 80,000/- உடன்
சவுதி அல் மராய் நிறுவனத்தில் உடனடி

### வேலைவாய்ப்புக்கள்

மெக்கானிக், A/C, குளிர்சாதனப்பெட்டி டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், பெயின்டர், காப்பென்டர், விற்பனை உதவியாளர், சாரதிகள், தொழிலாளர்

மே மாதம் பயண ஏற்பாடு

விபரங்களுக்கு 0777 324 004

SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
www.sikaram.lk

TGL SINCE 1990
Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1
www.tgl.lk

### 6 மாதத்தில் 50,000 - 1 இல. சம்பளம் & வெளிநாட்டு விசா ஏற்பாட்டுடன்

புதிய அணி
TOURISM & Hotel Management
ஹோட்டல் முகாமைத்துவக் கற்கை
4 MONTHS DURATION
Entry Level with FREE ENGLISH COURSE
பதிவுகளுக்கு 0777 36 16 798

9th Year
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk
(G-2008)


## மிளகாய்த்தூள்...

ஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் இருவரே நேற்று மாலை இந்தத் துணிகரக் கொள்ளையில் ஈடுப்பட்டனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தென்னிலங்கையில் அண்மைக்காலமாக வங்கிக் கொள்ளைகள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## எதிர்க்கட்சி தலை...

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை , அதிகப்படியான மக்கள் பிரதிநிதிகளை கொண்ட அரசியல் கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.(ம)


### போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் (M.A)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 29.04.2018 ஞாயிற்றுக் கிழமை 9.30am

கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0778435224 (C-2429)

### வேலைவாய்ப்பு

கிளிநொச்சி நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. உணவு பரிமாறிப்பாளர். (வெயிட்டர் ஆண்கள்)
2. கொத்து, றைஸ் மற்றும் ஏனைய உணவுகள் தயாரிப்பவர்.
3. சிற்றுண்டி தயாரிப்பவர். 4. மேற்பார்வையாளர்.
(ஹோட்டல் மனேஜ்மன்ற் முடித்தவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளிற்கு:- 021 228 4050

### சாவகச்சேரியில்....

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்

அருள்
இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

### நெல்லியடியில்....

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்

அருள்
இல.01, எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில், நெல்லியடி.
076 443 1576

### விக்னா
கல்வி நிறுவனம்

T.P:-077 662 9137
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
பிரிவு 2

O/L DAY CLASS
ஆரம்பம் 30-04-2018
08.00 TO 02.00
* அன்றும் இன்றும் என்றும் O/L Day Class தனித்துவம் வாய்ந்தது.
* கடமை கட்டுப்பாடுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
* 60 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி
(C-2436)


### யா/கொக்குவில் இந்துக் கல்லூரி - சாரணிய பவள விழா

75

பவள விழா மலருக்கான கட்டுரைகள் புகைப்படத்தொகுப்புகள் வரலாற்றுத் தகவல்கள்

கல்லூரியின் பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே சாரணிய பவள விழா (75-வது ஆண்டு) மலருக்கு கடந்த கால சாரணிய மாணவர்களின் தகவல்களை ஆதாரத்துடன் தருவதுடன் (வரலாறு மற்றும் புகைப்படங்கள்) சாரணியம் சார்ந்த தங்களது செய்திகளையும் கட்டுரைகளையும் வைகாசி மாதம் 8-ம் திகதிக்கு முன் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி : 077 855 8715
மின்னஞ்சல் : samal2015@gmail.com


### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

> பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
> அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
> யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

(3736)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


# கண்ணீர் அஞ்சலி



(3779)

## திருமதி ஐயம்பிள்ளை தையல்முத்து

தேசிய சேமிப்பு வங்கி யாழ் மேல் தரக் கிளையில் கடமையாற்றும் திருமதி உமேஸ்வரி பிரபாகரன் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி ஐயம்பிள்ளை தையல்முத்து அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும் தேசிய சேமிப்பு வங்கி மேல் தர கிளை யாழ்ப்பாணம்.


### Techno World

(வெலிங்டன் சந்தி - லிங்கன் கூல்பார் அருகாமை- யாழ்)

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2020 Paper Class- வினாத்தாள் வகுப்பு

| பாடங்கள் | திங்கள் | புதன் | வெள்ளி |
|---|---|---|---|
| SFT | அடிப்படை கணிதம் | அளவீட்டுக் கருவிகள் | அடிப்படை கணிதம் |
| E-Tec | படவரைதல் | படவரைதல் | படவரைதல் |
| Bio-Tec | வானிலை | வானிலை | வானிலை |

A/L 2020 மாணவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பம் 28.04.2018 சனிக்கிழமை காலை 8.00 மணி (C-2430)

தொடர்பு : 077 1703549


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.